முன்னுரை

பிலிப்பி பட்டணம் மக்கெதோனியாவின் மேற்குப் பகுதியில் மிகவும் பிரசித்திப்பெற்ற பட்டணமாக விளங்கிற்று. அப்போஸ்தலர் பவுல் ரோமாபுரி சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது, பிலிப்பியருக்கு இந்த நிருபத்தை எழுதினார். ஆகையினால் விசுவாசிகள் மத்தியில் இந்த நிருபம் மிகவும் பிரசித்திப் பெற்று விளங்குகிறது. பிலிப்பி பட்டணத்திலுள்ள சபையார்மீது பவுல் மிகவும் பிரியமாயிருக்கிறார். இந்தப் பட்டணத்தில் பவுல் சபையை ஸ்தாபனம்பண்ணினார். ஆகையினால் இந்தச் சபையின்மீது ஒரு தகப்பனுக்கு இருக்கக்கூடிய பாசம் பவுலினிடத்தில் காணப்படுகிறது. பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளை பவுல் தன் சொந்தப் பிள்ளைகளைப் போல பாவிக்கிறார். சுவிசேஷத்தினால் அவர்களைப் பெற்றதாகச் சொல்லுகிறார். அதே சுவிசேஷத்தினாலேயே அவர்களை ஆவிக்குரிய சத்தியங்களில் போஷிப்பதாகவும் சொல்லுகிறார்.

பிலிப்பி பட்டணத்தில் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு தேவன் பவுலை விசேஷித்த வழியில் தெரிந்துகொண்டார். இரவு வேளையில் பவுலுக்கு ஒரு தரிசனமுண்டாயிற்று. மக்கெதோனியாவிலுள்ள ஒரு மனுஷன் பவுலின் சொப்பனத்தில் தோன்றி, மக்கெதோனியாவுக்கு வந்து தங்களுக்கு உதவிபுரியுமாறு பவுலைக் கேட்டுக் கொண்டான். இந்த அழைப்பு தேவன் மூலமாய் உண்டாயிற்று என்பதை பவுல் புரிந்து கொண்டார். தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து பவுல் மக்கெதோனியாவுக்குப் போய் அங்கு ஊழியம் செய்தார்.

பிலிப்பி பட்டணத்தில் பவுலுக்கு அநேகப் பாடுகளும் உபத்திரவங்களு முண்டாயிற்று. ஆனாலும் பவுலுக்கு அந்தப் பட்டணத்தார்மீது கோபமோ விரோதமோவரவில்லை. தன்னை அவர்கள் துன்பப்படுத்தினாலும் பவுல் அவர்கள் மீது அன்பாகவே இருக்கிறார். உபத்திரவங்களை பொறுமையோடு சகித்துக்கொள்கிறார். பவுலின் அனுபவம் கர்த்தருடைய ஊழியக்காரராகிய நமக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறது. நாம் சுவிசேஷத்தை அறிவிக்கும் போது ஜனங்கள் நம்மை வெறுக்கலாம். நம்மைத் துன்பப்படுத்தலாம். ஆனால் நாமோ அவர்களைப்போல பகை உணர்ச்சியைக் காண்பிக்கக்கூடாது. ஜனங்கள்மீது நாம் வைத்திருக்கிற அன்பு ஒருபோதும் குறைந்துவிடக் கூடாது. அன்பு இல்லையென்றால் சுவிசேஷ ஊழியத்தை உண்மையாய்ச் செய்யமுடியாது.

பிலிப்பு சபையில் ஸ்தாபிக்கப்பட்ட சபை, ஆரம்பத்தில் மிகவும் சிறியதாக இருந்தது. ஒரு சில விசுவாசிகளே சபையிலிருந்தார்கள். பவுல் அதைப் பார்த்து சோர்ந்துபோகவில்லை. ஆரம்பம் அற்பமாய் இருந்தாலும் முடிவு மகிமையாயிருக்கும் என்று பவுல் கர்த்தருக்குள் விசுவாசித்தார். கர்த்தருடைய ஊழியக்காரராகிய நாம் அவருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்யவேண்டும். ஆரம்பம் சிறியதாகவும், அற்பமாகவும் இருந்தாலும் சோர்ந்து போகக்கூடாது. ஊழியம் கர்த்தருடையது. கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடு அறுப்பார்கள். கர்த்தர் ஒரு அறுவடை காலத்தை நியமித்து வைத்திருக்கிறார். நமக்கும் ஏற்றகாலத்தில் ஒரு ஆசீர்வாதம் கிடைக்கும்.

அப்போஸ்தலர் பவுல் பிலிப்பியருக்கு இந்த நிருபத்தை எழுதும்போது, அங்குள்ள சபை வளர்ந்து பெருகியிருக்கிறது. விசுவாசிகள் எண்ணிக்கையில் அதிகரித்திருக்கிறார். ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் இப்போது பவுல்மீது அன்பாயிருக்கிறார்கள். அவருக்கு வெகுமதிகளை அனுப்பியிருக்கிறார்கள். பவுல் அவர்கள் அனுப்பிய வெகுமதிகளுக்காக அவர்களுக்கு நன்றி சொல்லுகிறார் (பிலி 4:18). கொடுக்கல் வாங்கல் காரியத்தில் பிலிப்பியர் மாத்திரமே பவுலோடு உடன்படுகிறார்கள். வேறு எந்த சபையும் இந்த விஷயத்தில் பவுலோடு உடன்படவில்லை (பிலி 5:16).

1 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய ஆசீர்வாதத்தைச் சொல்லி இந்த நிருபத்தை எழுத ஆரம்பிக்கிறார் (பிலி 1:1,2) பிலிப்பி சபையிலுள்ள பரிசுத்தவான்களுக்காக பவுல் கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறார் (பிலி 1:3-6). பவுல் அவர்கள்மீது மிகவும் வாஞ்சையாயிருக்கிறார். (பிலி 1:7,8). அவர்களுக்காக ஜெபிக்கிறார். தன்னுடைய பாடுகளைக் கண்டு அவர்கள் சோர்ந்துபோகக் கூடாது என்றும், அவர்கள் கர்த்தருக்குள் பயமில்லாமல் திடமனதாயிருக்க வேண்டுமென்றும் அவர்களுக்கு ஆறுதல் சொல்லுகிறார் (பிலி 1:12-20). தன்னுடைய ஜீவன் மூலமாகவும், மரணத்தின் மூலமாகவும் பவுல் தேவனை மகிமைப்படுத்த ஆயத்தமாயிருக்கிறார் (பிலி1:21-26). இந்த அதிகாரத்தின் முடிவில் பவுல் எப்பாபிரோதீத்துவைப்பற்றி அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறார் (பிலி 1:27-30).

இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர் பிலி 1 : 1-2

பிலி 1:1. இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலும் தீமோத்தேயும், பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது:

பிலி 1:2. நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

பவுலும் தீமோத்தேயுவும் இந்த நிருபத்தை எழுதுகிறார்கள். இவர்கள் இருவரும் இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரர். ஒருவர் எவ்வளவு பெரிய அப்போஸ்தலராகயிருந்தாலும், அவருக்கு எவ்வளவு கனமும் மேன்மையும் உண்டாயிருந்தாலும், ஊழியக்காரர்கள் எல்லோரும் இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரராகவே இருந்தார்கள். இவர்கள் சபைகளுக்கு அதிகாரிகளல்ல. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியக்காரர்கள்.

பவுலும் தீமோத்தேயுவும் இந்த நிருபத்தை பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறார்கள். சபையிலுள்ள ஊழியக்காரர்களை சொல்வதற்கு முன்பாகவே, பவுல் சபையைப் பற்றிச் சொல்லுகிறார். ஏனென்றால் ஊழியக்காரர்கள் சபைகளுக்கு ஊழியம் செய்யவேண்டும். சபைகள் ஊழியக்காரருக்கு ஊழியம் செய்யக் கூடாது. சபையிலுள்ள ஊழியக்காரர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரர் மாத்திரமல்ல, அவர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் சபைக்கும் ஊழியக்காரராயிருக்கிறார்கள்.

பவுலும் தீமோத்தேயுவும் இந்த நிருபத்தை பரிசுத்தவான்கள் அனைவருக்கும் எழுதுகிறார்கள். சபையில் ஏழைகள் இருப்பார்கள், சமுதாய அந்தஸ்தில் தாழ்ந்தவர்கள் இருப்பார்கள். வரங்களில் குறைவுள்ளவர்கள் இருப்பார்கள். இவர்களைப்போல செல்வந்தர்களும், சமுதாயத்தில் உயர்ந்தவர்களும், அநேக வரங்களைப் பெற்றவர்களும் இருப்பார்கள். இவர்களெல்லோருமே சபையிலுள்ள பரிசுத்தவான்கள்தான். பவுல் இவர்கள் யாரையும் விட்டுவிடாதவாறு, இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும் இந்த நிருபத்தை எழுதுகிறார்.

இயேசு கிறிஸ்துவிடத்தில் பட்சபாதமில்லை. ஐசுவரியவான்களும் தரித்திரரும் இயேசு கிறிஸ்துவின் சமுகத்திற்கு தாராளமாய் வரலாம். சமுதாயத்திலுள்ள எல்லா பிரிவினரும் கிறிஸ்துவுக்குள் ஐக்கியமாகி அவருக்குள் சங்கமமாகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் எல்லோருமே கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்களாக இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து இல்லையென்றால், மிகப் பெரிய பரிசுத்தவான்கள்கூட பாவிகளாகத்தான் இருப்பார்கள். கிறிஸ்து இல்லையென்றால், தேவனுடைய சமுகத்தில் யாராலும் பரிசுத்தமாய் பிரவேசிக்க முடியாது. கிறிஸ்து இல்லாமல் தேவசமுகத்திற்கு முன்பாக நாம் நிற்பதற்கு தகுதியில்லாதவர்களாகயிருப்போம்.

பவுலும் தீமோத்தேயுவும் இந்த நிருபத்தை கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறார்கள். இவர்கள் சபைக்கு உபதேசம் செய்து, சபையின் காரியங்களை ஆளுகை செய்ய வேண்டும். சபையிலுள்ள தரித்திரருக்கு உபகாரம் செய்யவேண்டும். தேவனுடைய சபையிலுள்ள எல்லா காரியங்களையும் இவர்கள் பொறுப்பேற்று நடத்தவேண்டும். சபை ஆராதனையை பயபக்தியோடு நடத்துவதற்கு விசுவாசிகளை வழிநடத்த வேண்டும். கண்காணிகள், உதவிக்காரர் ஆகிய ஊழியங்களை, தேவனே தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக ஸ்தாபித்திருக்கிறார் என்று ஆதித்திருச்சபை விசுவாசிகள் நம்பினார்கள். இவையெல்லாமே தெய்வீக ஊழியங்கள்.

அப்போஸ்தலர் பவுல் பிலிப்பு சபையிலுள்ள பரிசுத்தவான்கள் எல்லோருக்கும் தன்னுடைய அப்போஸ்தல ஆசீர்வாதத்தைச் சொல்லுகிறார். "நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" என்று சொல்லி அவர்களை வாழ்த்துகிறார். எல்லா நிருபங்களையும் பவுல் இதே வார்த்தைகளைச் சொல்லி பரிசுத்தவான்களை வாழ்த்துகிறார். வார்த்தைக்கு வார்த்தை வித்தியாசமில்லாமல் ஒன்றுபோலிருக்கிறது. சபை ஆராதனையில் நமக்கு ஒரு சில ஒழுங்குகள் தேவைப்படுகிறது. அதே சமயத்தில் நாம் சபை ஒழுங்குகளுக்கு அடிமைகளாகிவிடக் கூடாது. பரிசுத்த ஆவியானவரின் விடுதலையோடு கர்த்தரைத் துதிக்கவேண்டும்.

பரிசுத்தவான்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாகவேண்டும் என்று பவுல் பிலிப்பியரை ஆசீர்வதிக்கிறார். கிருபை தேவனுடைய இலவச ஈவு. அவர் நம்மீது வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்துவதற்கு நமக்கு தம்முடைய கிருபையையும் சமாதானத்தையும் கொடுக்கிறார். நம்முடைய ஜீவியத்தில் ஆவியின் கனியைத் தருகிறார். நம்மை ஆவிக்குரிய ரீதியாக அதிகமாய் ஆசீர்வதிக்கிறார். தெய்வீக ஆசீர்வாதங்கள் எல்லாமே, பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் நமக்கு உண்டாகிறது.

கிருபையில்லாமல் சமாதானமில்லை. நம்முடைய இருதயத்தில் சமாதானம் நிரம்பியிருக்கவேண்டும். தேவனுடைய கிருபை நமக்குக் கிடைக்கும்போது, நம்முடைய இருதயத்திலுள்ள சமாதானம் நிரம்பி வழியும். கிருபையும், மெய்யான சமாதானமும் பிதாவாகிய தேவனிடத்திலிருந்து மாத்திரமே நமக்கு வரும். இவரே எல்லா ஆசீர் வாதங்களுக்கும் ஆதாரமாகயிருக்கிறவர். ஆசீர்வாதங்களின் ஊற்றாக இருக்கிறவர். ஊற்றுத்தண்ணீராகவும், ஜீவத்தண்ணீராகவும் இருக்கிறவர். பிதாவாகிய தேவனுடைய கிருபையும் சமாதானமும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே நமக்கு உண்டாகும். கிறிஸ்து இல்லாமல் தேவனிடத்திலிருந்து நம்மால் ஒன்றும் பெற்றுக்கொள்ள முடியாது.

தேவனை ஸ்தோத்திரிக்கிறேன் பிலி 1 : 3-6

பிலி 1:3. சுவிசேஷம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள்முதல் இதுவரைக்கும் நீங்கள் அதற்கு உடன்பட்டவர்களானபடியால்,

பிலி 1:4. நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம் பண்ணி,

பிலி 1:5.உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி,

பிலி 1:6. நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.

அப்போஸ்தலர் பவுல் பிலிப்பி பட்டணத்திலுள்ள பரிசுத்தவான்களுக்காக தேவனை ஸ்தோத்திரிக்கிறார். பவுல் அவர்களை நினைவு கூருகிறார். அவர்களைப்பற்றிய சிந்தனை பவுலின் இருதயத்தில் நிரம்பியிருக்கிறது. பவுல் அவர்களை நினைக்கிற பொழுதெல்லாம், தேவனை ஸ்தோத்திரிக்கிறார். பவுல் பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளைப்பற்றி அதிகமாய் நினைக்கிறார், அவர்களைப் பற்றி அதிகமாய்ப் பேசுகிறார், அவர்களைப்பற்றிய செய்தியை கேள்விப்பட அதிகமாய் விரும்புகிறார். நம்முடைய சிநேகிதர்களை விட்டு நாம் பிரிந்திருக்கும் போது, அவர்களுடைய சுகசெய்திகளைக் கேள்விப்பட விரும்புவோம். அதுபோலவே பவுல் பிலிப்பி சபையிலுள்ள பரிசுத்தவான்களின் சுகசெய்திகளை கேள்விப்பட விரும்புகிறார்.

பவுல் பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளை நினைக்கும்போதெல்லாம் அவருக்குள் மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. பிலிப்பி பட்டணத்தில் உள்ளவர்கள் அவரைத் துன்பப்படுத்தினார்கள். வேதனைப்படுத்தினார்கள். உபத்திரவப்படுத்தினார்கள். ஆனாலும் பவுல் அவர்களை சந்தோஷத்தோடு நினைவுகூருகிறார். அவர்களைக் குறித்து வெட்கப்படவில்லை. தன்னுடைய பாடுகளை அவர்களுக்கு அதிகப்படுத்தி எழுதி, அவர்களுடைய பரிதாபத்தையும் அனுதாபத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று பவுல் நினைக்கவில்லை. அவர்கள் தன்னைத் துன்பப்படுத்தினாலும், பவுல் அவர்களைப் பற்றி சந்தோஷத்தோடே நினைவுகூருகிறார்.

பவுல் அவர்களை தன்னுடைய ஜெபத்தில் நினைவுகூருகிறார். தான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும், பவுல் அவர்களுக்காக எப்போதும் சந்தோஷத்தோடே, தேவனுடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். நம்முடைய நண்பர்களை நாம் உண்மையாய் நினைவுகூருவோமானால், அவர்களை நம்முடைய ஜெபத்தில் நினைவுகூர வேண்டும். தேவனுடைய கிருபாசனத் தண்டையில் நாம் ஜெபம்பண்ணும் போது, நம்முடைய சிநேகிதருக்காகவும் ஜெபிக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் பிலிப்பி சபையிலுள்ள பரிசுத்தவான்களுக்காக எப்போதும் ஜெபிக்கிறார். பவுல் இப்போது பிலிப்பி பட்டணத்தில் இல்லை. அவர்களோடு கூட இல்லாவிட்டாலும், பவுல் தேவனுடைய சமுகத்தில் அதிகமாய்த் தரித்திருக்கிறார். அவர்களோடு இருந்த வரையிலும், பவுலுக்கு அவர்கள் மூலமாய் உபத்திரமுண்டாயிற்று. பவுலின் ஆறுதலுக்காக தேவனே அவரை அவர்களிடத்திலிருந்து பிரித்துவிட்டார். பவுல் அவர்களை விட்டுப் பிரிந்து வந்தால், அவர்களைப் பற்றிய நினைவு பவுலின் இருதயத்தில் பசுமையாயிருக்கிறது. அவர்களுக்காக எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம்பண்ணுகிறார்.

பவுல் அவர்களை நினைக்கிற பொழுதெல்லாம் தேவனை ஸ்தோத்திரிக்கிறார். நம்முடைய ஜெபத்தில் தேவனை ஸ்தோத்திரிப்பது முக்கிய பங்கு வகிக்க வேண்டும். நமக்கு தேவனுடைய ஆறுதலும் சமாதானமும் உண்டாயிருக்குமானால், அதற்காக நாம் தேவனைத் துதித்து அவரை மகிமைப்படுத்தவேண்டும். பவுல் தேவனைத் துதிக்கவும் செய்கிறார். அதே வேளையில் அவருடைய சமுகத்தில் சந்தோஷத்தோடே விண்ணப்பம்பண்ணவும் செய்கிறார்.

பவுலின் இருதயத்தில் தேவனைத் துதிக்கிற துதி நிரம்பியிருக்கிறது. எல்லா கிருபைகளும் சமாதானமும் நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் தனக்கு உண்டாயிருக்கிறது என்பதை பவுல் புரிந்து கொண்டு, அவரை ஸ்தோத்திரிக்கிறார். பவுலைப்போலவே நாமும் கர்த்தரிடத்தில் ஜெபிக்கவேண்டும். ஜெபத்தில் கர்த்தரை ஸ்தோத்திரிக்கவேண்டும். நம்முடைய இருதயத்தில் துதியின் வார்த்தைகள் நிரம்பியிருக்க வேண்டும். எல்லா கிருபைகளையும். நன்மைகளையும் நம்முடைய தேவனுடைய கரங்களிலிருந்தே நாம் பெற்றுக்கொள்கிறோம் என்பதை நன்றியுள்ள இருதயத்தோடு நினைவுகூரவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் பிலிப்பி பட்டணத்திலுள்ள பரிசுத்தவான்களை நினைக்கிறபொழுதெல்லாம், அவர் தேவனை ஸ்தோத்திரிக்கிறார். பிலிப்பு சபையாரை நினைக்கிறபோதெல்லாம் பவுலின் இருதயத்தில் ஆறுதலும் சமாதானமும் உண்டாயிற்று. ஏனெனில் அவர்களில் நற்கிரியையைத் தொடங்கினவர், அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று பவுல் நம்புகிறார்.

சுவிசேஷத்தின் ஐக்கியம் ஒரு நல்ல ஐக்கியம். இது ஒரு விசேஷித்த ஐக்கியம். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தங்கள் இருதயங்களில் உண்மையாய் ஏற்றுக்கொண்டவர்கள், அந்தச் சுவிசேஷம் தங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள் முதல், அந்தச் சுவிசேஷத்தோடு உடன்பட்டிருக்க வேண்டும். சுவிசேஷச் சத்தியத்தோடு ஐக்கியமாயிருக்க வேண்டும். புதிய விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல இருக்கிறார்கள். சுவிசேஷத்தின் மூலமாய் கர்த்தர் நமக்கு ஏராளமான வாக்குத் தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். நாம் சுவிசேஷத்தைப் பெற்றுக் கொண்ட நாள்முதல், சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிற வாக்குத்தத்தங்களை கருத்தாய் தியானித்து, அவற்றை பயபக்தியோடும், பரிசுத்தத்தோடும், மிகுந்த மனத்தாழ்மையோடும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

பிலிப்பி சபையிலுள்ளவர்கள் தங்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட நாள் முதல், இதுவரைக்கும் அந்த சுவிசேஷத்திற்கு உடன்பட்டிருக்கிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் சத்தியத்தை ஜனங்களுக்கு உபதேசம் பண்ணுகிறார்கள். ஜனங்களும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை தங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொள்கிறார்கள். சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டவர்கள் அதைத் தங்கள் இருதயத்தில் தொடர்ந்து காத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் தங்கள் ஜீவியத்தில் எப்போதும் சுவிசேஷத்திற்கு உடன்பட்டு ஜீவிக்க வேண்டும். விசுவாசிகளிடத்தில் இப்படிப்பட்ட சாட்சியைப் பார்க்கும்போது ஊழியக்காரருக்கு மிகுந்த சந்தோஷமாயிருக்கும்.

ஏனெனில் நற்கிரியையைத் தொடங்கினவர், அதை கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று பவுலும் நம்புகிறார். எல்லா ஊழியக்காரர்களும் நம்புகிறார்கள். விசுவாசிகளின் மிகப்பெரிய நம்பிக்கை கர்த்தர் நமக்குக் கொடுக்கும் ஆவிக்குரிய சமாதானமும் ஆறுதலும் ஆகும். கர்த்தருடைய சமுகத்தில் நாம் வரும்போதெல்லாம் கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற சந்தோஷத்திற்காகவும், நம்பிக்கைக்காகவும் கர்த்தரை ஸ்தோத்திரம்பண்ண வேண்டும். பவுலும் கர்த்தரை நம்பி அவரை ஸ்தோத்திரிக்கிறார்.

தேவன் நமக்குள் நற்கிரியையைத் தொடங்கியிருக்கிறார். இந்த உலகத்தில் கிறிஸ்துவானவர் தம்முடைய சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்து, தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபித்திருக்கிறார். இந்த உலகம் இருக்கும் வரையிலும் கிறிஸ்துவின் சுவிசேஷமும் நிலைத்திருக்கும். நற்கிரியையைத் தொடங்கினவர் அதை முடிவு பரியந்தம் நடத்துகிறதற்கு வல்லவராகவும் இருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்முடைய ஆவிக்குரிய ஜீவியங்களில் அவர் நற்கிரியைகளைத் தொடங்கியிருக்கிறார். தம்முடைய கிருபையான காரியங்களை நமக்குள் ஆரம்பித்திருக்கிறார். ஆரம்பித்தவர் முடிவு பரியந்தம் நடத்துவார். கிருபையின் ஊழியம் ஒரு மேன்மையான ஊழியம். தேவனுடைய கிருபையினால் நமக்கு தேவசாயல் உண்டாகிறது. அவருடைய கிருபையினாலேயே தேவனுடைய சமுகத்தில் சந்தோஷமாயிருக்கிற சிலாக்கியம் நமக்கு உண்டாகிறது.

எங்கெல்லாம் நற்கிரியை தொடங்கப்படுகிறதோ, அவை யெல்லாவற்றையும் தேவனே தொடங்குகிறார். அவரே நமக்குள் நற்கிரியையைத் தொடங்கினவர். நம்முடைய சுயபலத்தினால் நம்மால் எந்த நற்கிரியையையும் தொடங்க முடியாது. நம்முடைய சுபாவத்தினால் நம்மால் பாவம் செய்யமுடியும். ஏனெனில் நாம் பாவத்திலும் மீறுதலிலும் மரித்துப் போனவர்கள். மரித்துப்போன மனுஷனால் தன்னைத்தானே மறுபடியும் உயிரோடு எழுப்ப முடியாது. நித்திய ஜீவனோடிருக்கிற தேவனால் மாத்திரமே, மரித்துப்போன நம்மை உயிரோடே எழுப்ப முடியும். சுபாவத்தின்படி பாவங்களையும் கெட்ட கிரியைகளையும் செய்கிற நம்மை மாற்றி, நமக்குள் நற்கிரியைகளைத் தேவனால் மாத்திரமே தொடங்கமுடியும்.

கிருபையின் கிரியை நமக்கு இந்த ஜீவனில் ஆரம்பமாகி இருக்கிறது. இது இந்த ஜீவனோடு முடிந்துவிடுவதில்லை. தேவனுடைய கிருபையினாலேயே நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்கிறோம். பரலோகத்தில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தையும் பெற்றுக்கொள்கிறோம். இவையெல்லாவற்றிலும் தேவனுடைய கிருபையே கிரியை நடப்பிக்கிறது.

நமக்குள் நற்கிரியையைத் தொடங்கினவர், இதை முடிவுபரியந்தம் நடத்துவார். அவர் அதை நடத்த வில்லையென்றால், நமக்குள் தொடங்கப்பட்ட நற்கிரியை முடிவு பெறாமல் அரைகுறையாகவே இருக்கும். தேவனே தொடங்குகிறவர். அவரே முடிக்கிறவர். தேவன் தம்முடைய பலத்த கரத்தினால், நமக்குள் தொடங்கின நற்கிரியைகளை, இயேசு கிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்துவார் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். தேவனுடைய கிருபையின் ஊழியம் இயேசு கிறிஸ்துவின் நாளின்போது நிறைவடையும். அது வரையிலும் இந்த ஊழியம் நிறைவடைவதில்லை. கிறிஸ்துவானவர் இந்த உலகத்தை நியாயந்தீர்க்க வரும்போது, அவருடைய கிருபையின் ஊழியம் முடிவு பெறும்.

தேவனே எனக்குச் சாட்சி
பிலி 1 : 7,8

பிலி 1:7. என் கட்டுகளிலும், நான் சுவிசேஷத்திற்காக உத்தரவுசொல்லி அதைத் திடப்படுத்திவருகிறதிலும், நீங்கள் அனைவரும் எனக்கு அளிக்கப்பட்ட கிருபையில் பங்குள்ளவர்களானதால், உங்களை என் இருதயத்தில் தரித்துக் கொண்டிருக்கிறபடியினாலே, உங்களெல்லாரையுங் குறித்து நான் இப்படி நினைக்கிறது எனக்குத் தகுதியாயிருக்கிறது.

பிலி 1:8. இயேசு கிறிஸ்துவின் உருக்கமான அன்பிலே உங்களெல்லார் மேலும் எவ்வளவோ வாஞ்சையாயிருக்கிறேன் என்பதற்கு தேவனே எனக்குச் சாட்சி.

அப்போஸ்தலர் பவுல் பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்துவுக்குள்ளான பரிசுத்தவான்கள் எல்லோர்மீதும் மிகவும் அன்பாயிருக்கிறார். தன்னுடைய இருதயத்தில் அவர்களைத் தரித்துக் கொண்டிருக்கிறார். ஏனெனில் அவர்களெல்லோரும் பவுலுக்கு அளிக்கப்பட்ட கிருபையில் பங்குள்ளவர்களாக இருக்கிறார்கள். பவுல் கட்டுக்களிலிருந்தார். பவுலின் கட்டுக்களிலும், அவர் சுவிசேஷத்திற்காக உத்தரவு சொல்லி அதைத் திடப்படுத்தி வருகிறதிலும் அவர்கள் பவுலுக்கு பங்குள்ளவர்களாக இருந்தார்கள். பவுல் அவர்களுக்கு தேவனுடைய கிருபையை அறிவித்தார். அந்தக் கிருபைக்கு அவர்கள் பங்குள்ளவர்களாக இருக்கிறார்கள். இதனால் பிலிப்பு சபையிலுள்ள விசுவாசிகள் பவுலோடு நெருக்கமாயிருக்கிறார்கள்.

ஊழியக்காரர்கள் மூலமாய் அநேக விசுவாசிகள் ஆவிக்குரிய நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு ஊழியம் செய்த ஊழியக்காரரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருப்பார்கள். அவர்கள்மீது அதிகமாய் அன்புகூருவார்கள். ஏனெனில் அவர்களுடைய ஊழியத்தின் மூலமாய் இந்த விசுவாசிகள் அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறார்கள்.

பிலிப்பு சபையிலுள்ள விசுவாசிகள் பவுலுக்கு அளிக்கப்பட்ட கிருபையில் பங்குள்ளவர்களாக இருக்கிறார்கள். பவுலின் ஊழியத்திலும், பாடுகளிலும் பிலிப்பு சபையின் விசுவாசிகள் அவரோடு சேர்ந்து கொள்கிறார்கள். பவுல் பாடுகளையும் வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்தபோது, விசுவாசிகள் நீடிய இரக்கத்தினாலும், கரிசனையினாலும், அன்பினாலும் பவுலின் பாடுகளுக்கு பங்குள்ளவர்களாக இருக்கிறார்கள். பவுலுக்கு உதவிபுரிய ஆயத்தமாயிருக்கிறார்கள்.

ஊழியத்தில் மேன்மையடைய விரும்புகிறவர்களும், மேன்மையில் பங்கடைய விரும்புகிறவர்களும், ஊழியத்தின் பாரத்தைத் தாங்கவேண்டும். பவுல் பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளை அதிகமாய் நேசிக்கிறார். ஏனெனில் அவர்கள் பவுலின் கட்டுக்களில் அவரோடுகூட உடன்பட்டிருப்பார்கள். பவுல் சுவிசேஷத்திற்காக உத்தரவு சொல்லி, அதைத் திடப்படுத்தி வந்தார். அந்த ஊழியத்திலும் அவர்கள் பங்குள்ளவர்களாக இருப்பார்கள்.

அப்போஸ்தலர் பவுல் பிலிப்பியருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கம்செய்தார். பிலிப்பி பட்டணத்திலுள்ளவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டு விசுவாசிகளானார்கள். அதன்பின்பு பவுல் அவர்களை விட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார். பவுல் தங்களோடு இல்லாவிட்டாலும் பிலிப்பி பட்டணத்திலுள்ள விசுவாசிகள் சுவிசேஷத்திற்குச் சாட்சியாக ஜீவிக்கிறார்கள். சுவிசேஷத்திற்காக உத்தரவு சொல்லி அதைத் திடப்படுத்துகிறார்கள். பவுலின் சுவிசேஷ ஊழியத்தில் அவர்கள் பங்குள்ளவர்களாக இருக்கிறார்கள். பவுலோடுகூட அவர்களும் பாடுகளை அனுபவிக்கிறார்கள். பாடுகளில் பங்குள்ளவர்கள் ஒருவருக்கொருவர் நெருங்கிய சிநேகத்தோடிருப்பார்கள்.

பவுல் பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளை தன்னுடைய இருதயத்தில் தரித்துக் கொண்டிருக்கிறார். ஆனபடியினால், “உங்களெல்லோரையும் குறித்து நான் இப்படி நினைக்கிறது எனக்குத் தகுதியாயிருக்கிறது” என்று பவுல் அறிக்கை செய்கிறார். பவுல் பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளைக் குறித்து நல்ல எண்ணத்தோடிருக்கிறார். ஆகையினால்தான் பவுல் அவர்களை தன்னுடைய இருதயத்தில் தரித்துக் கொண்டிருக்கிறார். நாம் மற்றவர்களைப் பற்றி நினைக்கும்போது, அவர்களைப் பற்றிய நல்ல காரியங்களையே நினைக்கவேண்டும். அவர்கள் நமக்குச் செய்த நன்மைகளை நினைவுகூர்ந்து, நாமும் அவர்களிடத்தில் அன்புகூர வேண்டும். அவர்களுக்கு நன்மை செய்ய முன்வரவேண்டும்.

பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளைப் பற்றி பவுல் எழுதும்போது, தன்னுடைய வார்த்தைக்கும், தான் அவர்கள்மீது வைத்திருக்கும் அன்புக்கும், தேவனே தனக்குச் சாட்சி என்று அறிவிக்கிறார். கிறிஸ்துவின் உருக்கமான அன்பிலே பவுல் அவர்கள் எல்லார் மேலும் அதிகமாய் வாஞ்சையாயிருக்கிறார். அவர்களை தன் இருதயத்தில் தரித்துக் கொண்டதோடு மாத்திரமல்ல, அவர்கள் எல்லார்மேலும் அதிக வாஞ்சையாகவும் இருக்கிறார். அவர்களைப்பற்றி நினைத்து அதிக சந்தோஷத்தோடிருக்கிறார். அவர்களுக்காக எப்போதும் தேவனுடைய சமுகத்தில் சந்தோஷத்தோடே விண்ணப்பம்பண்ணுகிறார் (பிலி 1:4). பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளிடத்தில் பவுல் நன்மையான காரியங்களையே காண்கிறார். அவர்களைப் பற்றி நன்மையான செய்திகளையே கேள்விப்படுகிறார்.

பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளை பவுல் காணவேண்டுமென்று வாஞ்சையாயிருக்கிறார். பிலிப்பு சபையில் ஐசுவரியவான்கள் இருக்கிறார்கள். சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்துள்ளவர்கள் இருக்கிறார்கள். பவுல் அவர்களை மாத்திரம் பார்த்து, தன்னுடைய பெருமையை கூட்டிக்கொள்ள விரும்பவில்லை. அவர்களையும் பார்க்க வேண்டும், அதே வேளையில் சபையிலுள்ள தரித்திரரையும், சாதாரண ஜனங்களையும் பார்க்கவேண்டும் என்று பவுல் எவ்வளவோ வாஞ்சையாயிருக்கிறார். இதுவே இயேசுகிறிஸ்துவின் உருக்கமான அன்பு. ஆத்துமாக்கள்மீது இயேசுகிறிஸ்து மனதுருக்கமாய் அன்புகூருகிறார். அழிந்து போகிற ஆத்துமாக்கள்மீது கிறிஸ்து மனதுருகுகிறார். அவர்களும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று அவர்கள்மீது வாஞ்சையாயிருக்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும் அழிந்து போகிற ஆத்துமாக்களுக்காக பரிதபிக்கவேண்டும். நம்முடைய இருதயத்தில் ஆத்தும பாரம் நிரம்பியிருக்க வேண்டும். கிறிஸ்துவினிடத்தில் உருக்கமான அன்பு காணப்பட்டது போல, நம்மிடத்திலும் அப்படிப்பட்ட அன்பு காணப்படவேண்டும். பவுல் பிலிப்பி சபையிலுள்ள எல்லோர் மீதும் அன்பாயிருக்கிறார். கிறிஸ்துவின் உருக்கமான அன்பிலே அவர்கள் எல்லார்மேலும் எவ்வளவோ வாஞ்சையாயிருக்கிறார். இதற்கு தேவனே தனக்குச் சாட்சியென்று சொல்லுகிறார். பவுலின் வார்த்தைகளை பிலிப்பியர் நம்புகிறார்களா அல்லது நம்பவில்லையா என்பது பவுலுக்குத் தெரியவில்லை. ஆனால் தான் சொல்லுகிற வார்த்தைகள் உண்மையானவையென்றும், அதற்கு தேவனே சாட்சியென்றும் பவுல் விசுவாசத்தோடு எழுதுகிறார்.

வேண்டுதல் செய்கிறேன்
பிலி 1 : 9-11

பிலி 1:9. மேலும், உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக் கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய் பெருகவும்,

பிலி 1:10. தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி,

பிலி 1:11. நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்.

அப்போஸ்தலர் பவுல் பிலிப்பி பட்டணத்திலுள்ள விசுவாசிகளுக்காக கர்த்தரிடத்தில் வேண்டுதல் செய்கிறார். தான் விசுவாசிகளுக்காக கர்த்தருடைய சமுகத்தில் ஜெபம்பண்ணுவதை பவுல் அவ்வப்போது விசுவாசிகளுக்குத் தெரியப்படுத்துகிறார். அப்போதுதான் அவர்களுக்காக என்னென்ன காரியங்களுக்கு கர்த்தரிடத்தில் ஜெபிக்க வேண்டும் என்பது பவுலுக்குத் தெரியவரும். அவர்கள் ஜெபிக்கச் சொன்ன காரியங்களுக்கு, பவுல் கருத்தாய் ஜெபிப்பதை உறுதி பண்ணுகிறார். இதனால் விசுவாசிகள் தங்கள் நம்பிக்கையில் உற்சாகம் பெறுவார்கள். பவுல் தங்களுக்காக ஜெபிப்பதினால் தேவன் தம்முடைய கிருபையை தங்களுக்குக் கொடுத்து தங்களை ஆறுதல்படுத்துவார் என்று விசுவாசத்தில் திடநம்பிக்கையாயிருப்பார்கள்.

பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகள் அன்புள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று பவுல் கர்த்தரிடத்தில் வேண்டுதல் செய்கிறார். அவர்களுடைய அன்பு இன்னும் அதிகமாய்ப் பெருக வேண்டும் என்று பவுல் அவர்களுக்காக வேண்டுதல் பண்ணுகிறார். கிருபையில் பெருகியிருக்கிறவர்கள், அந்தக் கிருபையில் இன்னும் அதிகமாய்ப் பெருகவேண்டுமென்று விரும்பவேண்டும். ஏனென்றால் தேவகிருபையை நாம் எவ்வளவுதான் பெற்றுக்கொண்டாலும், நாம் இன்னும் கிருபையில் குறைவுள்ளவர்களாகவே இருப்போம்.

பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகள் அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமாய்ப் பெருகவேண்டுமென்று பவுல் அவர்களுக்காக வேண்டுதல் செய்கிறார். அவர்களுடைய அன்பு அறிவிலும் எல்லா உணர்விலும் பெருகவேண்டும். அவர்களுடைய அன்பு கண்மூடித்தனமான அல்லது குருட்டுத்தனமான அன்பாக இருக்கக்கூடாது. நாம் கர்த்தரிடத்தில் அன்புகூரும்போது, அந்த அன்பு நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து புறப்பட்டு வரவேண்டும். கர்த்தர் நமக்குச் செய்த நன்மைகளையும், அவர் நமக்குக் கொடுத்திருக்கிற வாக்குத்தத்தங்களையும் நினைவு கூர்ந்து, அவரிடத்தில் அன்புகூரவேண்டும்.

நம்முடைய உணர்வு அறிவு இல்லாததாக இருக்குமென்றால் அதனால் பிரயோஜனமில்லை. ஒரு காரியத்தைப் பற்றி அறிந்துகொள்ளாமல், உணர்ச்சி வசப்படுவது கர்த்தருடைய சித்தமல்ல. நாம் தேவனிடத்தில் அன்புகூரவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். ஆனால் நம்முடைய அன்பு அறிவில் பெருகியதாகயிருக்க வேண்டும். அறிவு இல்லாமல் அன்புகூருவது நன்மை செய்வதற்குப் பதிலாக சில சமயங்களில் தீமை செய்து விடும்.

பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகள் உத்தமமானவைகளை ஒத்துக்கொள்ள வேண்டும். அவர்களிடத்தில் பகுத்தறியும் வரம் கிரியை நடப்பிக்கவேண்டும். எல்லா காரியங்களையும் அவர்கள் சோதித்தறிய வேண்டும். அவற்றில் உத்தமமானவைகளை அவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டும். நன்மையான காரியங்களுக்கும் தீமையான காரியங்களுக்கும் விசுவாசிகள் வித்தியாசம் காணவேண்டும். இயேசு கிறிஸ்துவின் பிரமாணங்களும் அவருடைய சத்தியங்களும் உத்தமமானவை. நாம் அவற்றையே சோதித்துப் பார்த்து, ஒப்புக்கொள்ள வேண்டும்.

பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகள் துப்புரவானவர்களாகவும் இடறலற்றவர்களாகவும் இருக்கவேண்டும். அவர்களுடைய இருதயம் செம்மையாயிருக்க வேண்டும். சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்கிற நம்முடைய இருதயம் நேர்மையானதாகவும், பரிபூரணமானதாகவும் இருக்கவேண்டும். சுவிசேஷத்தின் உபதேசத்திற்குத் தக்கதாக நம்முடைய ஜீவியம் அமைந்திருக்க வேண்டும். நம்முடைய பேச்சிலும் கிரியையிலும் கண்ணியமும் நேர்மையும் நிரம்பியிருக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகள் யாருக்கும் தீங்கு செய்யக்கூடாது. இடறல் உண்டுபண்ணக் கூடாது. கிறிஸ்துவின் நாளுக்கென்று விசுவாசிகளெல்லோரும் இடறல் அற்றவர்களாயிருக்கவேண்டும். நாம் இடறல் பண்ணுகிறவர்களாக இருக்கக் கூடாது. தேவனுக்கும், அவருடைய ஊழியத்திற்கும், அவருடைய பிள்ளைகளுக்கும் நாம் ஒருபோதும் இடறல் செய்துவிடக்கூடாது. இந்த விஷயத்தில் ஒவ்வொரு விசுவாசியும் மிகுந்த கவனத்தோடு ஜீவிக்கவேண்டும்.

கிறிஸ்துவின் நாளில் நாம் நம்மை கர்த்தருடைய சமுகத்தில் துப்புரவானவர்களாக அர்ப்பணிக்க வேண்டும். இதற்காக நம்முடைய ஜீவியம் முழுவதிலும் கரைதிறையில்லாமல், பரிசுத்தமாய் ஜீவிக்க வேண்டும். பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாக இருக்க வேண்டும் என்று பவுல் அவர்களுக்காக வேண்டுதல் செய்கிறார். அவர்கள் கர்த்தருக்குப் பிரியமான பிள்ளைகளாகவும், பிரயோஜனமுள்ள பிள்ளைகளாகவும் இருக்கவேண்டும்.

நீதியின் கனி இயேசு கிறிஸ்துவிடமே உள்ளது. நாம் நீதியின் கனிளை அவரிடமிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும். கேட்கிறவர்களுக்கு கிறிஸ்து கொடுக்கிறவர். நாம் நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாக வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் நீதியின் கனிகளை வெளிப்படுத்தும் போது, நம்மிடத்திலுள்ள கனிகள் குறைந்து போகுமென்று நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் கர்த்தர் நம்மை நீதியின் கனிகளால் நிரப்புவதற்கு வல்லவராயிருக்கிறார். கர்த்தர் நம்மை நிரப்பும்போது, அது ஒருபோதும் குறைந்து போவதில்லை, அது வெறுமையாவதுமில்லை.

நீதியின் கனி இயேசுகிறிஸ்துவினால் வருகிறது. நீதியின் கனி தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாக்குகிறது. நாம் நீதியின் கனியைக் கொடுக்கும்போது நம்முடைய சுயமகிமையை நாடக்கூடாது. நீதியின் கனியால் தேவனுக்கு மகிமை உண்டாகவேண்டும் என்றே நாம் நினைக்கவேண்டும். தேவனுக்கு துதி உண்டாக வேண்டுமென்று தீர்மானம் செய்து, நாம் நீதியின் கனியைக் கொடுக்க வேண்டும். விசுவாசிகள் நல்லவர்களாக இருந்தால் மாத்திரம் போதாது. அவர்கள் நற்கிரியைகளைச் செய்கிறவர்களாகவும் இருக்கவேண்டும். அவர்கள் நீதியின் கனிகளாலும், நற்கிரியைகளாலும் நிறைந்திருக்க வேண்டும்.

என் கட்டுகள்
பிலி 1 : 12-20

பிலி 1:12. சகோதரரே, எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும் படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன்.

பிலி 1:13. அரமனையெங்கு முன்னவர்களுக்கும் மற்ற யாவருக்கும் என் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று வெளியரங்கமாகி,

பிலி 1:14. சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன்கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள்.

பிலி 1:15. சிலர் பொறாமையினாலும் விரோதத்தினாலும், சிலர் நல்மனதினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள்.

பிலி 1:16. சிலர் என் கட்டுகளோடே உபத்திரவத்தையுங்கூட்ட நினைத்து, சுத்த மனதோடே கிறிஸ்துவை அறிவியாமல், விரோதத்தினாலே அறிவிக்கிறார்கள்.

பிலி 1:17. சுவிசேஷத்திற்காக நான் உத்தரவு சொல்ல ஏற்படுத்தப்பட்டவனென்று அறிந்து, சிலர் அன்பினாலே அறிவிக்கிறார்கள்.

பிலி 1:18. இதனாலென்ன? வஞ்சகத்தினாலாவது, உண்மையினாலாவது, எப்படியாவது, கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார்; அதனால் சந்தோஷப்படுகிறேன், இன்னமும் சந்தோஷப்படுவேன்.

பிலி 1:19. அது உங்கள் வேண்டுதலினாலும் இயேசு கிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று அறிவேன்.

பிலி 1:20. நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப் போகாமல், எப்பொழுதும் போல இப்பொழுதும், மிகுந்த தைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய், அப்படி முடியும்.

பவுல் பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளுக்கு இந்த நிருபத்தை எழுதும்போது, அவர் ரோமாபுரியிலுள்ள சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார். பவுல் சிறைச்சாலையில் இருக்கிறார் என்னும் செய்தி, அவருடைய ஊழியத்தின் மூலமாய் இரட்சிக்கப்பட்டவர்களுக்கு இடையூறாக இருக்கலாம். தங்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்தவர் இப்போது சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார் என்பதை நினைத்துப் பார்க்க அவர்கள் ஒருவேளை வெட்கப்படலாம். பவுலைப் போல தங்களையும் சிறைச்சாலையில் அடைத்துப்போடுவார்களோ என்னும் பயம் அவர்களுக்குள் உண்டாகலாம்.

அவர்களுக்கு ஆறுதல் சொல்லும்விதமாக பவுல் இந்த வசனங்களை எழுதுகிறார். சிலுவையைப் பற்றி அவர்களுக்கு உபதேசம் பண்ணுகிறார். சுவிசேஷத்தின் மேன்மையை அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறார். தன்னுடைய பாடுகளும், வேதனைகளும் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவதாக அறிவிக்கிறார்.

சுவிசேஷத்திற்கு சத்துருவாயிருக்கிறவர்கள் பவுலை சிறைச் சாலையில் அடைத்துவிட்டார்கள். இதைப் பார்த்து விசுவாசிகள் இடறிப்போகக் கூடாது. தன்னுடைய கட்டுகள் மூலமாக அவர்களுக்கு பிரயோஜனமுண்டாகும் என்றும், தான் சிறையில் அடைக்கப்பட்டிருப்பது சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்று என்றும் பவுல் சொல்லுகிறார். “சகோதரரே, எனக்கு சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும் படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறியமனதாயிருக்கிறேன்” (பிலி 1:12).

அப்போஸ்தலர் பவுல் தான் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருப்பதற்கு புதிய வியாக்கியானத்தைச் சொல்லுகிறார். அவருக்கு கட்டுகளும், வேதனைகளும் உண்டாயிற்று. ஆனாலும் இந்தக் கட்டுகள் தனக்கு நன்மைக்கேதுவாகவே இருக்கிறது என்று பவுல் அங்கீகரிக்கிறார். தனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும் படிக்கு ஏதுவாயிற்றென்று பிலிப்பியருக்கு எழுதுகிறார். தன்னுடைய கட்டுகள் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான கட்டுகளென்று அவர்களுக்குத் தெளிவுபடுத்துகிறார். தன்னுடைய வேதனையிலும், பாடுகளிலும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு நன்மை உண்டாகிறது என்று விளக்கம் சொல்லுகிறார். சுவிசேஷத்தின் சத்துருக்கள் பவுலை சிறையில் அடைத்து, சுவிசேஷம் பிரபலமாவதை தடை செய்வதற்கு முயற்சி பண்ணுகிறார்கள். ஆனால் பவுலின் கட்டுகளினால் சுவிசேஷம் தடைபடுவதற்குப் பதிலாக சுவிசேஷம் பிரபலமாயிற்று.

பவுல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிற சம்பவம் அரமனை எங்குமுள்ளவர்களுக்கு தெரியவருகிறது. அவர்கள் பவுலைப்பற்றியும், அவர் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டிருப்பதற்கான காரணத்தை பற்றியும் விசாரிக்கிறார்கள். பவுலின் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று அவர்களுக்குள் வெளியரங்கமாயிற்று. அரமனையிலுள்ளவர்கள் பவுலின் கட்டுகள் மூலமாக சுவிசேஷத்தைக் கேள்விப்படுகிறார்கள். பவுலுக்கு சிறைச்சாலையில் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும் படிக்கு ஏதுவாயிற்று.

அப்போஸ்தலர் பவுல் சுவிசேஷத்தினிமித்தமாக சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார் என்பதை அரமனையிலுள்ளவர்கள் கேள்விப்படுகிறார்கள். இதன் மூலமாக அவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும் கேள்விப்படுகிறார்கள். அரமனையிலுள்ளவர்கள் சுவிசேஷச் செய்தியை பவுல் மூலமாய் விசாரித்துத் தெரிந்து கொள்கிறார்கள். பவுலுக்கு கட்டுகள் உண்டாகவில்லையென்றால், அரமனையிலுள்ளவர்கள் சுவிசேஷத்தைக் கேள்விப்படுவதற்கு வாய்ப்பு இல்லாமலேயே போயிருக்கும்.

பவுலின் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று அரமனையெங்குமுள்ளவர்களுக்கு வெளியரங்கமாயிற்று. அவர்கள் மூலமாய் எல்லா இடங்களிலும் உள்ளவர்களுக்கு பவுலின் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று வெளியரங்கமாயிற்று. பவுல் சிறையில் வேதனைகளை அனுபவித்தாலும், அது சுவிசேஷம் பிரபலமாகும் படிக்கு ஏதுவாயிற்று. அரமனையிலுள்ளவர்கள் புறஜாதியார். அவர்கள் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள். பவுலின் கட்டுகள் மூலமாய், அவர்கள் மத்தியிலும் சுவிசேஷம் பிரபலமாயிற்று.

பவுலின் கட்டுகளாலே விசுவாசிகளுக்கும் பிரயோஜனமுண்டாயிற்று. பவுலின் சத்துருக்கள் அவரை சிறையில் அடைத்து பெருமைப்படுகிறார்கள். அவருடைய பாடுகளைப் பார்த்து சந்தோஷப்படுகிறார்கள். பவுலை ஏளனம் பண்ணுகிறார்கள். ஆனால் விசுவாசிகளோ பவுலின் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன்கொள்கிறார்கள். பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள்.

பவுல் கிறிஸ்துவுக்காக சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருப்பதை விசுவாசிகள் பார்க்கிறார்கள். பவுலின் கட்டுகளைப் பார்த்து இவர்கள் சோர்ந்து போகவில்லை. கர்த்தருக்குள் திடன்கொள்கிறார்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததினால் பவுல் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். திருவசனத்தைச் சொன்னால் சிறைச்சாலையில் அடைக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது. ஆனால் விசுவாசிகளோ சிறைச் சாலையைப் பார்த்து பயப்படவில்லை. கர்த்தருக்குள் திடன்கொள்கிறார்கள். பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள். இதுவரையிலும் திருவசனத்தைச் சொல்லாதவர்கள் இப்போது அதைச் சொல்லுவதற்கு துணிகிறார்கள்.

திருவசனத்தைச் சொன்னதற்காக விசுவாசிகள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டால், பவுலோடுகூட சிறைச்சாலையில் வாசம்பண்ணுகிற சிலாக்கியம் அவர்களுக்குக் கிடைக்கும். ஒரு அப்போஸ்தலரோடு கூடயிருந்து, அவருடைய உபதேசங்களை நேருக்கு நேராய் கேட்கிற சிலாக்கியம் அவர்களுக்கு உண்டாகும். பவுல் சிறைச்சாலையில் கட்டப்பட்டிருந்தாலும், அவர் கவலைப்படவில்லை. சோர்ந்து போகவில்லை. மிகவும் உற்சாகமாகயிருக்கிறார். அவர் தன் வேதனைகளை நோக்கிப் பார்க்கவில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையே நோக்கிப் பார்க்கிறார். விசுவாசிகள் பவுலோடுகூடசிறையில் அடைக்கப்பட்டால், அவர்களுக்கு சோர்வு உண்டாவதற்குப் பதிலாக, பவுல் மூலமாய் உற்சாகமுண்டாகும்.

கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்கிறவர்கள் ஒரு நல்ல எஜமானருக்கு ஊழியம் செய்கிறார்கள். நம்முடைய எஜமான் நம்மைத் தாங்குகிறவர். சோதனைகளிலும் வேதனைகளிலும் இருந்து நம்மை விடுவிக்கிறவர். நமக்கு சந்தோஷமும் சமாதானமும் தருகிறவர். விசுவாசிகளில் அநேகர் பவுலின் கட்டுகளைப் பார்த்து கர்த்தருக்குள் திடன்கொள்கிறார்கள். சுவிசேஷத்திற்கு சத்துருக்களாக இருக்கிறவர்கள், பவுலை சிறையில் அடைத்ததினால், மற்ற விசுவாசிகள் பயந்துவிடுவார்களென்றும், திருவசனத்தைச் சொல்லுவதற்குப் பயப்படுவார்களென்றும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த பிரகாரம் இங்கு ஒன்றும் நடைபெறவில்லை. விசுவாசிகள் பயப்படுவதற்குப் பதிலாக, பவுலின் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன்கொள்கிறார்கள். திருவசனத்தை பயப்படாமல் சொல்லுகிறார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் துணிந்து, பயபக்தியோடு அறிவிக்கிறார்கள்.

பவுலுக்கு சிநேகிதரும் இருக்கிறார்கள். சத்துருக்களும் இருக்கிறார்கள். சிலர் பவுல்மீது பொறாமையினாலும் விரோதத்தினாலும் நிறைந்திருக்கிறார்கள். அவர்களும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள். அவர்கள் சுத்தமனதோடே கிறிஸ்துவை அறிவியாமல், விரோதத்தினாலே அறிவிக்கிறார்கள். அப்போஸ்தலர் பவுலுக்கு இப்படிப்பட்ட சத்துருக்கள் மூலமாய் பிரச்சனை உண்டாயிற்று. சபையில் பவுலுக்கு உண்டாயிருக்கிற நற்பெயரை இவர்கள் கெடுத்துப்போட முயற்சிபண்ணுகிறார்கள். விசுவாசிகள் மத்தியில் பவுலை அவமானப்படுத்த வேண்டும் என்பதும், பவுலின் கட்டுகளோடு உபத்திரவத்தையும் கூட்ட வேண்டும் என்பதும் தான் இவர்களுடைய விருப்பம்.

விசுவாசிகளில் அநேகர் பவுலின் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன் கொண்டு, சுவிசேஷத்தை பயமில்லாமல் துணிந்து சொல்லுகிறார்கள். இவர்கள் நல்மனதோடே கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள். சுத்தமனதோட கிறிஸ்துவை அறிவிக்கிறார்கள். இன்னும் சிலரும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள். ஆனால் இவர்கள் பவுல்மீதுள்ள பொறாமையினாலும் விரோதத்தினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள். பவுலின் நற்பெயரைக் கெடுப்பது, பவுலுக்கு உபத்திரவத்தைக் கூட்டுவது ஆகியவையே இவர்களுடைய நோக்கம்.

சிறைச்சாலையில் கட்டப்பட்டிருக்கிற பவுல், விசுவாசிகளும் மற்றவர்களும் கிறிஸ்துவை அறிவிப்பதை கேள்விப்படுகிறார். இதற்காக சந்தோஷப்படுகிறார். "இதனால் என்ன? வஞ்சகத்தினாலாவது, உண்மையினாலாவது, எப்படியாவது, கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார்; அதனால் சந்தோஷப்படுகிறேன், இன்னமும் சந்தோஷப்படுவேன்" (பிலி 1:18) என்று அறிவிக்கிறார். கர்த்தரே அவர்களை நியாயந்தீர்க்கவேண்டும். அவர்களை நியாயந்தீர்ப்பது பவுலின் வேலையல்ல. பவுல் சிறைச்சாலையில் கட்டப்பட்டிருப்பதினால், அவருக்கு சுவிசேஷத்தை விடுதலையோடு பிரசங்கம் பண்ணும் வாய்ப்பு கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மற்றவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதைப் பார்த்து பவுல் சந்தோஷப்படுகிறார். அவர்கள் நல்மனதினாலும், சுத்தமனதோடும் கிறிஸ்துவை அறிவிப்பதற்காக சந்தோஷப்படுகிறார். இன்னும் சிலர் பொறாமையினாலும், விரோதத்தினாலும், தன்னுடைய கட்டுகளோடு உபத்திரவத்தையும் கூட்ட நினைத்தும், சுவிசேஷத்தை அறிவிப்பதற்காகவும் சந்தோஷப்படுகிறார். எப்படியாவது கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார் என்று பவுல் மிகுந்த ஆறுதலடைந்திருக்கிறார். மனதிற்குள் சந்தோஷப்படுகிறார்.

தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. அவரால் ஒரு தீமையிலிருந்து ஒரு நன்மையை உண்டுபண்ண முடியும். பவுலின் சத்துருக்கள் பொறாமையினாலும் விரோதத்தினாலும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். பவுலுக்கு இன்னும் உபத்திரவத்தைக் கூட்டவேண்டுமென்று அவர்கள் கிறிஸ்துவை அறிவிக்கிறார்கள். உண்மையான மனதோடு இவர்கள் சுவிசேஷத்தை அறிவிக்கவில்லை. ஆனாலும் இவர்களுடைய சுவிசேஷ ஊழியத்தின் மூலமாய் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பு உண்டாகிறது. இதனால் பவுல் சந்தோஷப்படுகிறார்.

பவுல் சிறைச்சாலையில் இருக்கிறார். விசுவாசிகள் கர்த்தருடைய சமுகத்தில் அவருக்காக வேண்டுதல் செய்கிறார்கள். பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளின் ஜெபத்தைக் கேட்டு பவுலுக்கு உதவிசெய்கிறார். இதனால் பவுலுக்கு இரட்சிப்பு உண்டாகும். அவருடைய பாடுகளிலிருந்து விடுதலை கிடைக்கும். விசுவாசிகள் ஊழியக்காரர்களுக்காக ஜெபிக்கும்போது, ஊழியக்காரர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் உதவி கிடைக்கும். ஊழியக்காரர்கள் பாடுகளிலும் வேதனைகளிலும் கஷ்டப்படும் போது பரிசுத்த ஆவியானவரின் ஆதரவும் ஒத்தாசையும் அவர்களுக்குக் கிடைக்கும். விசுவாசிகள் ஊழியக்காரர்களுக்காக ஜெபம்பண்ணும் போது, ஊழியக்காரர்கள் ஆவியானவரின் வல்லமையினால் நிறைந்து சுவிசேஷத்தை தைரியமாய்ப் பிரசங்கம்பண்ணுவதற்கு ஏதுவாகும். இதையெல்லாம் நினைத்துப் பார்த்து, விசுவாசிகளின் வேண்டுதலினாலும், இயேசுகிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் அது தனக்கு இரட்சிப்பாக முடியும் என்பதை பவுல் அறிந்திருக்கிறார்.

பவுலின் பேச்சினாலும் கிரியையினாலும் கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படும். பவுல் சிறைச்சாலையில் கட்டப்பட்டிருந்தாலும் அவர் ஒன்றிலும் வெட்கப்பட்டுப்போகவில்லை. எப்பொழுதும் போல இப்பொழுதும் கிறிஸ்து தன் சரீரத்தினால் மகிமைப்படுவார் என்று பவுல் விரும்புகிறார், நம்புகிறார். தன்னுடைய வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய் கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படும் என்று பவுல் நம்பிக்கையோடிருக்கிறார். பவுலுடைய உள்ளத்தில் காணப்படுகிற அதே வாஞ்சையும் நம்பிக்கையும் ஒவ்வொரு விசுவாசியின் இருதயத்திலும் காணப்பட வேண்டும். கிறிஸ்துவின் நாமம் மகிமைப்பட வேண்டுமென்று நாமும் வாஞ்சையோடு நம்பவேண்டும்.

கிறிஸ்துவின் நாமம் மகிமைப்பட வேண்டுமென்று விரும்புகிறவர்கள், தங்கள் சரீரத்தினால் அவரை மகிமைப்படுத்த வேண்டுமென்று விரும்ப வேண்டும். கர்த்தருடைய சரீரமாகிய சபையில் நாம் ஊழியம் செய்து கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும். விசுவாசிகளுடைய சரீரத்திலும், அவர்களுடைய ஆத்துமாவிலும் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நாம் ஊழியம் செய்யவேண்டும். இதன் மூலமாய் கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படும்.

பவுல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தாலும் அவர் ஒன்றிலும் வெட்கப்பட்டுப் போகவில்லை. இயேசு கிறிஸ்து மகிமைப்படுவாரென்று பவுல் மிகுந்த தைரியத்தோடிருக்கிறார். விசுவாசிகளின் தைரியம் கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்தும். கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்த வேண்டுமென்னும் வாஞ்சை நமக்குள் உண்டாகும்போது, அவருடைய நாமம் மகிமைப்படும் என்னும் நம்பிக்கையும் நமக்குள் உண்டாகும்.

கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்த வேண்டுமென்று நாம் மெய்யாகவே விரும்புவோமென்றால், நிச்சயமாகவே நாம் கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்துவோம். தங்கள் சரீரத்தினாலே கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்த வேண்டுமென்று வாஞ்சையோடிருக்கிறவர்களுக்கு, அவர்களுடைய ஜீவனும் சாவும் ஒன்றுபோலவே இருக்கும். இவற்றில் வித்தியாசம் இருக்காது. அவர்கள் மிகுந்த தைரியத்தோடே தங்களுடைய ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து தங்கள் சரீரத்தினாலே மகிமைப்படுவார் என்று நம்பிக்கையோடிருப்பார்கள்.

விசுவாசிகள் உயிரோடிருக்கும்போது தேவனுடைய நாம மகிமைக்காக ஊழியம் செய்யவேண்டும். அவருடைய நாம மகிமைக்காகவே ஜீவிக்கவேண்டும். நாம் பாடுகளை அனுபவித்து மரிக்கவேண்டிய சந்தர்ப்பம் வந்தாலும், நாம் கிறிஸ்துவுக்காக பாடுகளை அனுபவித்து, அவருக்காகவே மரித்து, அவருடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும். அப்போஸ்தலர் பவுல் கட்டுகளிலிருந்தாலும், தன்னுடைய கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று விசுவாசத்தோடிருக்கிறார். அப்போஸ்தலர் பவுலைப்போலவே நாம் நம்முடைய ஜீவனிலும், சாவிலும், கிறிஸ்துவை மகிமைப்படுத்தவேண்டும்.

சரீரத்தில் பிழைத்திருக்கிறது பிலி 1 : 21-26

பிலி 1:21. கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்.

பிலி 1:22. ஆகிலும் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே என் கிரியைக்குப் பலனுண்டாயிருப்பதால், நான் தெரிந்து கொள்ளவேண்டியது இன்னதென்று அறியேன்.

பிலி 1:23. ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்;

பிலி 1:24. அப்படியிருந்தும், நான் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம்.

பிலி 1:25. இந்த நிச்சயத்தைக் கொண்டிருந்து, நான் மறுபடியும் உங்களிடத்தில் வருகிறதினால் என்னைக் குறித்து உங்களுடைய மகிழ்ச்சி கிறிஸ்து இயேசுவுக்குள் பெருகும்படிக்கு,

பிலி 1:26. உங்கள் விசுவாசத்தின் வர்த்தனைக்காகவும் சந்தோஷத்துக்காகவும் நான் பிழைத்து, உங்கள் அனைவரோடுங்கூட இருப்பேனென்று அறிந்திருக்கிறேன்.

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய மரணத்தையும் ஜீவனையும் குறித்து இங்கு தெளிவாக எழுதுகிறார். கிறிஸ்து பவுலுக்கு ஜீவன். சாவு அவருக்கு ஆதாயம். ஒவ்வொரு விசுவாசியினிடத்திலும் இப்படிப்பட்ட மனப்பக்குவம் காணப்பட வேண்டும். கிறிஸ்துவே நமக்கு ஜீவனாகயிருக்க வேண்டும். கிறிஸ்துவின் மகிமையே நம்முடைய ஜீவியத்தின் முடிவாயிருக்க வேண்டும். யாருக்கெல்லாம் கிறிஸ்து ஜீவனாகயிருக்கிறாரோ, அவர்களுக்கு சாவு ஆதாயமாகயிருக்கும்.

உலகப்பிரகாரமான மனுஷனுக்கு அவனுடைய சரீரமரணம் மிகப்பெரிய இழப்பாகவே இருக்கும். ஆனால் கிறிஸ்துவை மெய்யாக விசுவாசிக்கிற விசுவாசிகளாகிய நமக்கோ, நம்முடைய சரீர மரணம் நமக்கு ஆதாயமாகயிருக்கிறது. நம்முடைய சரீர மரணத்தின் மூலமாய் இந்த ஜீவியத்தின் எல்லா தீமைகளிலிருந்தும் நமக்கு விடுதலை உண்டாகிறது.

நாம் மரித்தபின்பு தேவன் நமக்கு நியமித்து வைத்திருக்கிற எல்லா ஆசீர்வாதங்களையும் சுதந்தரித்துக் கொள்கிற சிலாக்கியம் நமக்குக் கிடைக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், மரித்த பின்பு, பரலோகத்தில் பிரவேசிக்கும் மேன்மையைப் பெற்றுக்கொள்வோம்.

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" (பிலி 1:21) என்னும் இந்த வசனத்தை வேதபண்டிதர்களில் சிலர் இவ்வாறு மொழிபெயர்க்கிறார்கள். "ஜீவனிலும் சாவிலும் கிறிஸ்து எனக்கு ஆதாயம்" என்று எழுதுகிறார்கள். தான் ஜீவனைத் தெரிந்துகொள்ளவேண்டுமா அல்லது சாவைத் தெரிந்துகொள்ள வேண்டுமா என்று தனக்குத் தெரியவில்லை என பவுல் எழுதுகிறார். "நான் தெரிந்துகொள்ளவேண்டியது இன்னதென்று அறியேன்" (பிலி 1:22) என்று பவுல் சொல்லுகிறார். ஏனெனில் கிறிஸ்து அவருக்கு ஜீவனாகவும் சாவு அவருக்கு ஆதாயமாகவும் இருக்கிறது.

பவுல் தன்னுடைய சரீரத்தில் பிழைத்திருக்கிறதினால், தன் கிரியைக்கு பலனுண்டு என்று அறிந்திருக்கிறார். கிறிஸ்துவே அவருக்குக் கிடைத்திருக்கிற பலன். கிறிஸ்துவின் சித்தத்தின் பிரகாரம் ஊழியம் செய்ய பவுல் தன்னை ஒப்புக் கொடுத்திருக்கிறார். இந்த உலகத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதும், கிறிஸ்துவின் ராஜ்யத்தை ஸ்தாபிப்பதும் மாத்திரமே பவுலின் கிரியை. தன்னுடைய கிரியையின் மூலமாய் பவுல் கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்துகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இந்த உலகத்தில் ஜீவிக்கிற காலம் வரையிலும், நாம் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற ஊழியத்தை உண்மையாய்ச் செய்ய வேண்டும். கர்த்தருடைய சபைக்கு நாம் பிரயோஜனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். தன் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினால் தன் கிரியைக்குப் பலனுண்டு என்று பவுல் அறிந்திருக்கிறார். ஆனாலும் தான் தெரிந்துகொள்ள வேண்டியது இன்னதென்பதை அறியாதிருக்கிறார். மரணத்தைத் தெரிந்து கொள்ளவேண்டுமா அல்லது ஜீவனைத் தெரிந்துகொள்ள வேண்டுமா என்று பவுலுக்குத் தெரியவில்லை. இரண்டுமே அவருக்கு நன்மையாகவும் ஆதாயமாகவும் இருக்கிறது.

பவுலின் அனுபவம் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட அனுபவம். இரண்டு தீமைகளில் எந்தத் தீமையைத் தெரிந்துகொள்வது என்னும் குழப்பம் அவருக்குள் உண்டாகவில்லை. இரண்டு நன்மைகளில் எந்த நன்மையைத் தெரிந்து கொள்வது என்னும் நிலமையில் தான் இருக்கிறார். அவருக்கு எல்லாமே நன்மையாகவும், எல்லாமே ஆசீர்வாதமாகவும் இருக்கிறது. கிறிஸ்துவுக்காக இந்த உலகத்தில் ஜீவித்தால், இங்கு அவருக்கு ஊழியம் செய்யலாம். கிறிஸ்துவுக்காக மரித்துப் போனால் அவருடைய சமுகத்தில் பிரவேசிக்கலாம். இரண்டுமே ஆசீர்வாதமானதுதான்.

அப்போஸ்தலர் பவுல் மரித்துப்போக ஆசைப்படுகிறார். பொதுவாக நாம் மரணத்தைத் தவிர்க்க விரும்புவோம். ஆனால் பவுலோ மரணத்தை விரும்புகிறார். தன் தேகத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூடயிருக்க ஆசைப்படுகிறார். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் அவருடனே கூடயிருப்பார்கள். ஆகையினால்தான் பரிசுத்தவான்கள் தங்கள் மரணத்தை சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்கிறார்கள். நம்முடைய சரீரத்தில் மரித்துப்போகாமல் நம்மால் கிறிஸ்துவுடனே கூட இருக்க முடியாது. இது தேவனுடைய பிரமாணம். கிறிஸ்துவுடனே கூடயிருக்கவேண்டும் என்பதற்காகவே பரிசுத்தவான்கள் தங்கள் தேகத்தில் மரித்துப் போக ஆசைப்படுகிறார்கள்.

தன் தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனே கூடயிருப்பது பவுலுக்கு அதிக நன்மையாயிருக்கிறது. பரலோகத்தையும், அங்கு கிறிஸ்துவுடனே கூடயிருப்பதையும் நேசிக்கிறவர்கள் அதன் முக்கியத்துவத்தை அறிந்திருப்பார்கள். அவர்களுக்கு இந்தப் பூமியில் உயிரோடிருப்பதைவிட, பரலோகத்தில் கிறிஸ்துவுடனே கூடயிருப்பது அதிக நன்மையாயிருக்கும். நம்முடைய தேகத்தைவிட்டு பிரியும்போது, நாம் கிறிஸ்துவுடனே கூடயிருப்போம். அப்போது பாவத்தையும் சோதனையையும் விட்டுப் பிரிந்துபோவோம். வருத்தத்தையும் மரணத்தையும் விட்டு நித்தியமாய்ப் பிரிந்துவிடுவோம்.

ஜீவனோடிருப்பது, மரித்துப்போவது ஆகிய இவ்விரண்டினாலும் பவுல் நெருக்கப்படுகிறார். தேகத்தைவிட்டுப் பிரிந்து மரித்துப்போக பவுலுக்கு ஆசை உண்டு. அப்படியிருந்தும் அவர் சரீரத்தில் தரித்திருப்பது விசுவாசிகளுக்கு அதிக அவசியமாயிருக்கிறது. சபையில் ஊழியம் செய்யவேண்டுமென்றால் பவுல் இன்னும் இந்த உலகத்தில் உயிரோடிருக்கவேண்டும். அவர் தனக்காக உயிரோடிருக்க விரும்பவில்லை. மற்ற விசுவாசிகளுக்காகவே அவர் உயிரோடிருக்கவேண்டுமென்று விரும்புகிறார்.

இந்த உலகத்தில் உயிரோடிருக்க வேண்டுமா அல்லது பரலோகத்தில் உயிரோடிருக்கவேண்டுமா என்னும் சிந்தனையினால் பவுல் நெருக்கப்பட வில்லை. ஏனெனில் இவ்விரண்டு காரியங்களையும் ஒப்பிடவே முடியாது. பரலோகத்தில் கிறிஸ்துவுடனே கூடயிருப்பதே அதிக நன்மையானது. பவுலுக்கு வந்த நெருக்கம் வேறுவிதமாக இருக்கிறது. இந்த உலகத்தில் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யவேண்டுமா அல்லது பரலோகத்தில் கிறிஸ்துவுடனே கூடயிருக்க வேண்டுமா என்னும் இவ்விரண்டு சிந்தனையினால் பவுல் நெருக்கப்படுகிறார்.

பவுல் தன் சரீரத்தில் இன்னும் கொஞ்சகாலம் உயிரோடிருந்தால், அவர் கிறிஸ்துவுக்காகவும் அவருடைய சபைக்காகவும் இன்னும் கொஞ்சம் அதிகமாக ஊழியம் செய்ய முடியும். ஆகையினால் மற்ற விசுவாசிகளினிமித்தமாக பவுல் சரீரத்தில் தரித்திருப்பது அவர்களுக்கு அவசியமாயிருக்கிறது. இங்கு அவருக்கு எதிர்ப்புக்களும், பிரச்சனைகளும், பாடுகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் இருந்தாலும், பவுல் தன்னைத்தானே வெறுத்து, இந்த உலகத்தில் கிறிஸ்துவுக்காக ஜீவிக்க விரும்புகிறார். பவுல் மரிக்கும்போது பரலோகத்தில் அவருக்கு ஒரு வெகுமதி காத்திருக்கிறது. அந்தப் பந்தயப் பொருளைப் பெற்றுக்கொள்வதற்காக, தனக்கு நியமிக்கப்பட்டிருக்கிற இலக்கை நோக்கி, பவுல் பொறுமையோடு ஓடுகிறார்.

விசுவாசிகளுடைய விசுவாசத்தின் வர்த்தனைக்காகவும் சந்தோஷத்திற் காகவும் பவுல் பிழைக்க வேண்டுமென்றும், அவர்கள் அனைவரோடுங்கூட இருக்க வேண்டுமென்று அறிந்திருக்கிறார். தேவனுடைய தெய்வீக பராமரிப்பை பவுல் பூரணமாய் நம்பியிருக்கிறார். தேவன் தனக்கு நன்மையானதையே செய்வார் என்று அவரையே சார்ந்திருக்கிறார். தம்முடைய சபைக்கு எது நன்மையானதோ, அதை தேவன் நிச்சயமாய்ச் செய்வார் என்று நாம் நம்பிக்கையோடிருக்கலாம்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நம்முடைய விசுவாசம் வர்த்திக்கவேண்டும். விசுவாசம் பெருகவேண்டும். பரிசுத்தத்தில் நாம் வளர்ச்சி பெறவேண்டும். கிறிஸ்துவுக்குள் நமக்கு ஆறுதலும், சமாதானமும், சந்தோஷமும் அதிகரிக்க வேண்டும். நம்மிடத்தில் விசுவாசம் அதிகமாயிருக்கும் போது நம்முடைய சந்தோஷமும் அதிகமாயிருக்கும். நம்மிடத்தில் விசுவாசமும் சந்தோஷமும் அதிகமாயிருக்கும் போது, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி உண்டாகும்.

விசுவாசிகளுடைய விசுவாசத்தின் வர்த்தனைக்காகவும் சந்தோஷத்திற்காகவும் பவுல் பிழைத்திருக்கிறார். அவர்கள் அனைவரோடுங்கூட தான் இருப்பதாக அறிந்திருக்கிறார். இந்த நிச்சயத்தோடு அவர் மறுபடியும் பிலிப்பி பட்டணத்திலுள்ள விசுவாசிகளை பார்க்க வருவதற்கு வாஞ்சிக்கிறார். பவுல் அவர்கள் மத்தியில் வரும்போது, அவரைக்குறித்து விசுவாசிகளுடைய மகிழ்ச்சி கிறிஸ்து இயேசுவுக்குள் பெருகியிருக்கும். பவுலுக்கு அவர்கள் மத்தியில் இன்னும் அதிகமாய் ஊழியம் செய்ய வாய்ப்பு உண்டாகும். அவரை பார்ப்பதினாலும், அவருடைய ஊழியத்தின் ஆசீர்வாதங்களைப் பெறுவதினாலும் விசுவாசிகள் சந்தோஷமடைவார்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர்களுடைய மகிழ்ச்சி பெருகியிருக்கும்.

நம்முடைய சந்தோஷம் எல்லாமே கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கவேண்டும். நம்முடைய சந்தோஷம் இயேசுவுக்குள் ஆரம்பமாக வேண்டும், இயேசுவுக்குள் பெருக வேண்டும், இயேசுவுக்குள் நிறைவு பெறவேண்டும். நல்ல ஊழியக்காரர்களுக்காக நாம் கர்த்தரைத் துதிக்க வேண்டும். கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கவேண்டும்.

போராட்டம்
பிலி 1 : 27-30

பிலி 1:27. நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக் குறித்து நான் கேள்விப்படும்படி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்.

பிலி 1:28. நீங்கள் மருளாதிருக்கிறது அவர்கள் கெட்டுப்போகிறதற்கும், நீங்கள் இரட்சிக்கப்படுகிறதற்கும் அத்தாட்சியாயிருக்கிறது; இதுவும் தேவனுடைய செயலே.

பிலி 1:29. ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது.

பிலி 1:30. நீங்கள் என்னிடத்தில் கண்டதும் எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே உங்களுக்கும் உண்டு.

பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகள் ஆவியிலே உறுதியாய் நிற்கவேண்டுமென்றும் அவர்கள் சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காக போராட வேண்டுமென்றும் பவுல் விரும்புகிறார். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பற்றியே அவர்கள் மற்றவர்களோடு பேசவேண்டும். நாம் தேவனுடைய ராஜ்யத்திற்குரியவர்கள். மனுஷர் மத்தியிலே நாம் பேசுகிற எல்லா பேச்சுக்களும் தேவனுடைய ராஜ்யத்திற்குரியதாகவே இருக்கவேண்டும். நம்முடைய பேச்சின் மூலமாகவும் நாம் தேவனை மகிமைப்படுத்தவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் மறுபடியும் பிலிப்பி பட்டணத்திற்கு வரவேண்டுமென்று பிரியப்படுகிறார். அவர் மறுபடியும் வந்து அவர்களைக் கண்டாலும், அவர் வராமலிருந்தாலும், அவர்களைக்குறித்து நல்ல காரியங்களை கேள்விப்படும்படி விரும்புகிறார். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் ஊழியக்காரருடைய கரங்களிலில்லை. ஊழியக்காரர்கள் வருவார்கள், போவார்கள். அல்லது வராமலிருந்து விடுவார்கள். ஊழியக்காரர்கள் வந்தாலும் வராவிட்டாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்மோடு கூடயிருக்கிறார். பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளிடத்தில், "கர்த்தர் தங்களோடு கூடயிருக்கிறார்" என்னும் விசுவாசம் உறுதிப்படவேண்டும்.

அவர்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்திற்காக கூடப்போராடவேண்டும். சுவிசேஷத்திற்காக ஊழியம் செய்கிறவர்கள் அதற்காகப் போராடவும் வேண்டும். ஒரு சிலர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வார்கள். ஒரு சிலர் சுவிசேஷத்திற்கு எதிர்த்து நிற்பார்கள். சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு உண்டாகும்போது நாம் சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகப் போராடவேண்டும்.

ஒரு சிலர் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவனைப்பற்றி கவலைப்படாமல், ஆவிக்குரிய நித்திரையிலிருக்கலாம். அந்த நித்திரையோடு அவர்கள் நரகத்திற்குப் போய்விடுவார்கள். ஆனால் நாமோ பரலோகத்திற்குப் போக நியமிக்கப்பட்டிருக்கிறவர்கள். நாம் கர்த்தரை எப்போதும் நோக்கிப் பார்க்கவேண்டும். ஆவியில் உற்சாகமாய் இருக்கவேண்டும். ஆவிக்குரிய தூக்கம் நமக்கு வரக்கூடாது. நம்முடைய ஆவியில் விழித்திருந்து ஜெபிக்க வேண்டும்.

விசுவாசிகள் ஒரே ஆவியிலே உறுதியாய் நிற்கவேண்டும். அவர்கள் ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காக கூடப்போராடவேண்டும். ஒருவருக்கொருவர் உதவியாயிருந்து விசுவாசத்திற்காக போராடவேண்டும். ஒரே ஆவியும் ஒரே ஆத்துமாவுமே நம்முடைய சுவிசேஷம். நம்முடைய ஆவியில் நாம் உறுதியாய் நிற்பதே நம்முடைய சுவிசேஷம். ஆகையினால்தான் விசுவாசிகள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காக கூடப்போராட வேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்களுக்குள் பிரிந்து, ஒருவருக்கு எதிராக ஒருவர் யுத்தம்பண்ணுவது சுவிசேஷத்தின் சத்தியமல்ல. அவர்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நிற்காமல், பல்வேறு ஆவியிலே அலைபாய்வது ஊழியக்காரர்களுக்கு தகுதியானதல்ல. சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகப் போராடுகிறவர்கள், சுவிசேஷத்திற்காக உறுதியாய் நிற்கவேண்டும்.

கர்த்தரை விசுவாசிக்கிறவர்களுக்கு எதிர்ப்புக்கள் வரலாம். தங்களை எதிர்க்கிறவர்களால் விசுவாசிகள் ஒன்றிலும் மருளாதிருக்கவேண்டும். நமக்கு எப்படிப்பட்ட எதிர்ப்புக்கள் வந்தாலும் அவற்றைப் பார்த்து பயப்படக் கூடாது. எதிர்ப்புக்கள் வரும் போது நாம் மருளாதிருக்கிறது, நாம் இரட்சிக்கப்படுவதற்கு அத்தாட்சியாயிருக்கிறது. அதே வேளையில் எதிர்ப்புக்களைப் பார்த்து நாம் மருளாதிருப்பது நம்மை எதிர்ப்பவர்கள் கெட்டுப் போகிறதற்கும் அத்தாட்சியாயிருக்கிறது. சுவிசேஷத்திற்கு எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுடைய அழிவை தாங்களே தேடிக் கொள்கிறார்கள். சுவிசேஷத்திற்காக உபத்திரவம் அனுபவிக்கிறவர்களோ ஆத்தும இரட்சிப்பைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

நாம் மருளாதிருக்கிறது நம்முடைய இரட்சிப்புக்காக தேவன் கொடுத்திருக்கிற அத்தாட்சி. மாய்மாலக்காரர்கள் தங்கள் மார்க்கங்களுக்காக பாடுகளை அனுபவிக்கிறார்கள். ஆனால் தேவன் அவர்களுடைய இரட்சிப்புக்கு அத்தாட்சி கொடுக்கவில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷத்தினிமித்தம் எதிர்ப்புக்களை சகித்துக் கொண்டு, மருளாதிருக்கிறவர்களுக்கே, தேவன் அவர்களுடைய ஆத்தும இரட்சிப்புக்கு அத்தாட்சியைக் கொடுக்கிறார். நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக பாடுகளை அனுபவிக்க வேண்டும். உலகப்பிரகாரமான காரியங்களுக்காக நாம் பாடுகளை அனுபவிக்கும்போது, கிறிஸ்துவிடமிருந்து நமக்கு ஒரு நன்மையும் வராது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாக பாடுபடுகிறதற்கும் நமக்கு அருளப்பட்டிருக்கிறது (பிலி 1:29). நாம் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைக்க வேண்டும். விசுவாசம் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஈவு. கிறிஸ்துவுக்காக பாடு அனுபவிப்பதும் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஈவுதான். நாம் கிறிஸ்துவுக்காகப் பாடுகளை அனுபவித்து, எதையாவது இழந்துபோனால், கர்த்தர் நம்மை நன்மையினால் நிரப்புவார். கிறிஸ்துவுக்காக எதை இழந்து போனோமோ அதை பல மடங்கு அதிகமாய், நம்முடைய கர்த்தர் நமக்குத் திருப்பித் தருவார். நமக்கு அநேக வெகுமதிகளைத் தருவார். ஆகையினால் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிற நாம், அவருக்காக பாடுகளை அனுபவிக்கவும், அவருக்காக இரத்தசாட்சியாய் மரிக்கவும் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுலிடத்தில் போராட்டம் உண்டு. தேகத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூடயிருப்பதா அல்லது, இந்தச் சரீரத்தில் உயிரோடிருந்து கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்வதா என்பதே பவுலின் போராட்டம். இந்தப் போராட்டத்தை விசுவாசிகள் பவுலிடத்தில் கண்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட போராட்டம் விசுவாசிகளிடத்திலும் இப்போது காணப்படுகிறது. விசுவாசிகளின் போராட்டம் பாடுகளை அனுபவிப்பது மாத்திரமல்ல, அவர்கள் கிறிஸ்துவுக்காக இரத்தசாட்சியாக மரிக்கவும் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

கிறிஸ்து எங்களுக்கு ஜீவன், சாவு எங்களுக்கு ஆதாயம் என்று விசுவாசிகள் மனப்பூர்வமாய்ச் சொல்லவேண்டும். இந்த விசுவாச வாக்கியத்தைச் சொல்லுவதற்கு விசுவாசிகள் மருளக் கூடாது. சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகப் போராடவேண்டும். எதிர்க்கிறவர்களைப் பார்த்து மருளாதிருக்க வேண்டும். கர்த்தருக்காக ஜீவனோடிருக்கவும், ஜீவனை விடவும் எப்போதும் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

2 அதிகாரம்

விசுவாசிகள் ஏகசிந்தையும் ஏகஅன்பும் உள்ளவர்களாயிருக்க வேண்டும். கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தனையே அவரை விசுவாசிக்கிறவர்களிடத்திலும் இருக்க வேண்டும் (பிலி 2:1-11). ஒவ்வொரு விசுவாசியும் தங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்பட வேண்டும் (பிலி 2:12,13). விசுவாசிகள் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாக இருக்கவேண்டும் (பிலி 2:14-18). தீமோத்தேயு, எப்பாப்பிரோதீத்து ஆகியோரைப்பற்றி அறிமுகம் (பிலி 2:19-30).

ஏகசிந்தையும் ஏகஅன்பும் பிலி 2 : 1-4

பிலி 2:1. ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால்,

பிலி 2:2. நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்.

பிலி 2:3. ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக் கடவீர்கள்.

பிலி 2:4. அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.

பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளுக்கு, அவர்களுடைய ஆவிக்குரிய கடமைகளைக் குறித்து பவுல் ஆலோசனை சொல்லுகிறார். நாம் ஒருவர்மீது ஒருவர் அன்பாயிருக்க வேண்டும். இதுவே சுவிசேஷத்தின் அடிப்படை சத்தியம். விசுவாசிகள் ஏகசிந்தையும் ஏகஅன்பும் உள்ளவர்களாயிருக்க வேண்டும். அவர்கள் இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்திக்கவேண்டும். விசுவாசிகள் மத்தியில் சில சமயங்களில் கருத்து வேறுபாடு உண்டாகலாம். விசுவாசிகளுக்கு சமுதாய ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஏற்றதாழ்வுகள் இருக்கலாம். ஆனாலும் எல்லா விசுவாசிகளிடத்திலும் ஏகசிந்தையும் ஏகஅன்பும் இருக்க வேண்டும்.

விசுவாசிகள் தங்களுடைய அன்பை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ள வேண்டும். நாம் பிறரிடத்தில் அன்புகூரும்போது, அவர்களும் நம்மிடத்தில் அன்புகூருவார்கள். மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறோமோ, அதை நாம் முதலாவது அவர்களுக்குச் செய்யவேண்டும். தேவனுடைய காரியங்களில் நமக்கு ஏகசிந்தை உண்டாயிருக்க வேண்டும். தேவனுடைய உபதேசங்களை முறுமுறுப்பில்லாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனால் விசுவாசிகளுக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அவர்கள் ஆவியின் ஒற்றுமையைக் காத்துக்கொள்வார்கள்.

விசுவாசிகளுக்கு கிறிஸ்துவுக்குள் ஆறுதல் உண்டாயிருக்கிறது. அவர்கள் கிறிஸ்துவின் ஆறுதலைப் பெற்று அனுபவிக்கிறார்கள். இந்த ஆசீர்வாதமான அனுபவத்திற்கு அடையாளமாக அவர்கள் ஒருவர்மீது ஒருவர் அன்புகூரவேண்டும். நமக்கு கிறிஸ்துவுக்குள் ஆறுதல் வேண்டுமானால், நாம் பிறரிடத்தில் அன்புகூர வேண்டும். அன்பு இல்லாதவர்களுக்கு கிறிஸ்துவுக்குள் ஆறுதல் உண்டாகாது.

விசுவாசிகளாகிய நமக்கு அன்பினாலே தேறுதல் உண்டாயிருக்கிறது. நாம் தேவனிடத்தில் அன்பு கூருவதிலும், பிறரிடத்தில் அன்பு கூருவதிலும், தேவனுடைய அன்பினாலே நமக்கு தேறுதல் உண்டாயிருக்கிறது. இதனால் நாம் ஏகசிந்தையும் ஏகஅன்பும் உள்ளவர்களாயிருக்கவேண்டும். நமக்குள் ஆவியின் ஐக்கியம் உண்டாயிருக்கிறது. பரிசுத்த ஆவியானவரால் விசுவாசிகள் மத்தியிலே ஐக்கியமுண்டாயிருக்கிறது. ஆகையினால் விசுவாசிகள் ஏகசிந்தையும் ஏகஅன்பும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்.

கிறிஸ்துவுக்குள் நமக்கு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டாயிருக்கிறது. தேவனுடைய கிருபையும், இரக்கமும் நமக்குக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய உருக்கமான அன்பு நமக்கு காண்பிக்கப்படுவதினால், நாமும் பிறருக்கு நம்முடைய உருக்கமான அன்பைக் காண்பிக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஆசீர்வாதங்களை ஒவ்வொன்றாகச் சொல்லுகிறார். இதனால் நாம் ஏகசிந்தையும் ஏகஅன்பும் உள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று ஆலோசனை சொல்லுகிறார். பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகள் ஏகசிந்தையும் ஏகஅன்பும் உள்ளவர்களாயிருக்கும்போது அவர்கள் பவுலின் சந்தோஷத்தை நிறைவாக்குவார்கள். விசுவாசிகள் ஏகசிந்தையிலும், ஏகஅன்பிலும் ஜீவிப்பதைப் பார்க்கும் போது, ஊழியக்காரர்களுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகும்.

அப்போஸ்தலர் பவுல் பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளுக்கு தேவனுடைய கிருபையையும், அவருடைய அன்பையும் அறிமுகம் செய்து வைத்தார். அவர்கள் தேவனிடமிருந்து இந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பவுலே காரணமாகயிருந்தார். பவுலின் ஊழியத்தினால் அவர்களுக்கு சந்தோஷமுண்டாயிற்று. இப்போது அவர்கள் தன்னுடைய சந்தோஷத்தை நிறைவாக்க வேண்டுமென்று பவுல் அவர்களிடம் கேட்டுக் கொள்கிறார். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களுக்கு, அதை ஏற்றுக்கொள்கிறவர்கள் மூலமாக சந்தோஷமுண்டாகவேண்டும்.

ஒரு சில ஊழியக்காரர்கள் கர்த்தருடைய ஊழியத்தை வாதினாலும், வீண் பெருமையினாலும் செய்கிறார்கள். ஆனால் நாமோ ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யக் கூடாது. இயேசுகிறிஸ்து எல்லா பகையையும் சிலுவையில் முறித்துப் போடுவதற்காக வந்தார். ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்முடைய இருதயத்தில் பகையின் ஆவி காணப்படக்கூடாது. இயேசுகிறிஸ்து தம்மையே தாழ்த்தினார். அவருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்தில் பெருமையின் ஆவி காணப்படக்கூடாது.

நாம் எதைச் செய்தாலும், அதை மனத்தாழ்மையினாலே செய்ய வேண்டும். ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணவேண்டும். மற்றவர்களுடைய தப்பிதங்களைப் பார்த்து அவர்களை உடனே நியாயந்தீர்த்து விடக்கூடாது. நாமும் தப்பிதம் செய்யக் கூடியவர்கள்தான் என்பதை நினைவு கூர்ந்து, நாம் மனத்தாழ்மையோடிருக்க வேண்டும். நம்மைப்பற்றிய பெருமை நம்மிடத்தில் காணப்படக்கூடாது. அது வீண்பெருமை. பெருமைக்குப் பதிலாக நம்மிடத்தில் மனத்தாழ்மை இருக்க வேண்டும். மற்றவர்கள் நம்மைவிட மேன்மையானவர்கள் என்று எண்ண வேண்டும். நாம் குறைவுள்ளவர்கள் என்றும், தகுதியில்லாதவர்கள் என்றும் தேவனுடைய சமுகத்தில் அங்கீகரிக்க வேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய சுயகாரியங்களை மாத்திரம் பார்த்துக் கொண்டால் போதுமானதல்ல. நாம் மற்றவர்களையும் பார்க்கவேண்டும். அவனவன் தனக்கானவைகளை மாத்திரமல்ல, பிறருக்கானவைகளையும் நோக்கிப் பார்க்கவேண்டும். நம்முடைய அன்பையும் இரக்கத்தையும் பிறருக்கும் காண்பிக்க வேண்டும். மற்றவர்களைக் குறித்து நாம் கரிசனையோடிருக்க வேண்டும். நம்மிடத்தில் சுயநலமான ஆவி காணப்படுமென்றால், அது நம்முடைய அன்பை அழித்துப்போடும். நம்மிடத்தில் அன்புகூருவதுபோல நாம் பிறரிடத்திலும் அன்புகூர வேண்டும். பிறருடைய காரியங்களை நம்முடைய சொந்தக் காரியங்களைப் போல பாவித்து, அவர்களுக்கும் உதவி செய்யவேண்டும்.

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை
பிலி 2 : 5-11

பிலி 2:5. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது;

பிலி 2:6. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,

பிலி 2:7. தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.

பிலி 2:8. அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.

பிலி 2:9. ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,

பிலி 2:10. இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்,

பிலி 2:11. பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மிடத்திலும் இருக்க வேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், கர்த்தரைப்போலவே சிந்திக்க வேண்டும், அவரைப்போலவே செயல்புரியவேண்டும். நம்முடைய ஜீவியம் கிறிஸ்துவின் ஜீவியத்திற்கு ஒத்ததாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவருடைய மரணத்தின் மூலமாக கொடுக்கப்படுகிற ஆசீர்வாதத்தில் நமக்கும் பங்கு கிடைக்கும்.

இயேசு கிறிஸ்து தம்மைத்தாமே தாழ்த்தினார். தம்மை வெறுமையாக்கினார். இயேசுகிறிஸ்துவிமிடருந்து அவருடைய பிள்ளைகளாகிய நாம் இந்த நற்குணத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். நம்மிடத்தில் மனத்தாழ்மை இருக்கும் போது, நாம் அவரோடு ஏகசிந்தையிலிருப்போம். நாம் கிறிஸ்துவைப் போல இருப்போமென்றால், நம்மிடத்தில் மனத்தாழ்மையிருக்கும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை நாம் பின்பற்றி நடக்கவேண்டும். கீழ்ப்படிதலின் ஆவியோடு நாம் கர்த்தரைப் பின்பற்ற வேண்டும். அவர் நமக்காக பாடுகளுக்கும், மரணத்திற்கும் கீழ்ப்படிந்தார்.

இயேசு கிறிஸ்துவிடம் தெய்வீக சுபாவமும் இருக்கிறது. மனுஷசுபாவமும் இருக்கிறது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தார். இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனுடைய ஒரே பேறான குமாரர். தேவனுடைய தெய்வீக சுபாவத்தில் இயேசு கிறிஸ்துவுக்கும் பங்குள்ளது. குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனுக்கு சமமாயிருக்கிறார். ஆனால் கிறிஸ்துவோ தேவனுக்குச் சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணவில்லை. தேவனுக்குச் சமமாகயிருப்பது தமக்குப் பாத்தியமானதல்ல என்று தீர்மானித்து, இயேசு கிறிஸ்து தம்மைத்தாமே வெறுமையாக்கினார், அடிமையின் ரூபமெடுத்தார், மனுஷர் சாயலானார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நமக்குச் சொந்தமில்லாத காரியங்களை கொள்ளையிடக் கூடாது. நாம் கர்த்தருடைய பிள்ளைகளாக இருப்பதினால் அவர் நமக்கு அநேக ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறார். நம்மை உயர்த்துகிறார். தேவன் நம்மை உயர்த்தும்போது நாம் தேவனுக்கு சமமாயிருக்கிறோம் என்று பெருமைப்படக் கூடாது. நாமும் தேவனும் சமமானவர்கள் என்று சொல்லி, தேவனுடைய மகிமையை கொள்ளையடித்துவிடக்கூடாது.

இயேசுகிறிஸ்து மனுஷசுபாவத்தோடும் இருக்கிறார். அவர் அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் மெய்யாகவே ஒரு மனுஷனாகத்தான் இருந்தார். மனுஷசுபாவத்தை தாமாகவே முன்வந்து மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார். இயேசு கிறிஸ்து அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானது அவருடைய சுயாதீன சித்தம். ஆனால் நாமோ நம்முடைய சித்தத்தின்படி மனுஷசாயலாக இருப்பதில்லை. தேவன் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவே, நம்மை மனுஷராக சிருஷ்டித்திருக்கிறார். ஆனால் இயேசு கிறிஸ்துவோ தம்முடைய சித்தத்தின் பிரகாரம் மனுஷர் சாயலானார்.

இயேசு கிறிஸ்து தேவனுடைய ரூபமாயிருக்கிறவர். தேவனுக்குச் சமமாயிருக்கிறவர். ஆனால் கிறிஸ்து இயேசுவோ தம்மைத்தாமே வெறுமையாக்கினார். தம்மீது மனுஷசுபாவத்தைத் தரித்துக்கொண்டார். அடிமையின் ரூபமெடுத்தார். மனுஷர் சாயலானார்.

இயேசு கிறிஸ்து மனுஷர் சாயலானதினால் அவர் தம்மையே தாழ்த்துகிறார். தேவனோ அவரை உயர்த்துகிறார். இயேசுகிறிஸ்து மனுஷர் சாயலானபோது, அவர் அடிமையின் ரூபமெடுத்துக்கொள்கிறார். அவர் தேவனுடைய ஊழியக்காரர் மாத்திரமல்ல, மனுஷருக்கும் ஊழியம் செய்வதற்காக தம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறார். மனுஷகுமாரன் ஊழியம் கொள்ளவராமல் ஊழியம் செய்வதற்கு வந்திருக்கிறார்.

ஒரு சிலர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றி உண்மைக்கு மாறாக கற்பனை செய்கிறார்கள். அவர் கர்த்தராக இருப்பதினால், அவர் மனுஷரூபமெடுத்திருப்பதினால், அவர் அரமனையில் ஒரு ராஜகுமாரனாக பிறந்திருக்கவேண்டும் என்று கற்பனை செய்கிறார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவோ அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். தம்மையே தாழ்த்தி, தம்மை ஒரு அடிமையைப்போல ஆக்குகிறார். தேவன் இயேசுகிறிஸ்துவிடம் ஒரு ஊழியத்தை ஒப்புக் கொடுத்திருக்கிறார். அந்த ஊழியத்தை நிறைவேற்றுவதற்காக இயேசு கிறிஸ்து தம்மைத்தாமே தாழ்த்துகிறார். அடிமையின் ரூபமெடுத்து தம்மைத் தாழ்த்துகிறார்.

இயேசு கிறிஸ்துவின் ஜீவியம் முழுவதுமே ஒரு தாழ்மையின் ஜீவியமாக இருக்கிறது. அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானது அவருடைய தாழ்மையை வெளிப்படுத்துகிறது. ஆனால் தம்மைத்தாமே தாழ்த்துவதை இயேசுகிறிஸ்து அத்தோடு நிறுத்திக் கொள்ளவில்லை. அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி 2:8).

இயேசுகிறிஸ்து அநேக பாடுகளை அனுபவித்தார். இந்தப் பாடுகளையெல்லாம் தாமாகவே முன்வந்து தம்மீது ஏற்றுக்கொண்டார். அப்போஸ்தலர் பவுல் இயேசுகிறிஸ்துவின் மரணத்தைப்பற்றிச் சொல்லும்போது, சிலுவையைப்பற்றியும் சேர்த்துச் சொல்லுகிறார். அவர் மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத்தாமே தாழ்த்தினார். சிலுவை மரணம் ஒரு சாபமான மரணம். அவமானமுள்ள மரணம். வேதனை நிறைந்த மரணம். குற்றவாளிகளுக்கும், துரோகிகளுக்கும் சிலுவை மரணம் உண்டாகும். ஆனால் இயேசுகிறிஸ்துவோ ஒரு பாவமும் செய்யாதவராகயிருந்தாலும், அவர் சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்து தம்மைத்தாமே தாழ்த்தினார். அவருடைய தாழ்மையை எல்லோரும் பிரத்தியட்சமாகப் பார்த்தார்கள்.

இயேசு கிறிஸ்து தம்மைத்தாமே தாழ்த்தியதை பிதாவாகிய தேவனும் பார்த்தார். அவர் சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தியதை பிதாவானவர் பார்த்தார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக இயேசு கிறிஸ்துவை உயர்த்தினார். கிறிஸ்துவானவர் தம்மைத்தாமே தாழ்த்தியதினால் தேவன் அவரை உயர்த்தினார். அவரை சாதாரணமாக உயர்த்தவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார். அவருடைய முழுமையான ஆள்தத்துவத்தையும் பிதாவானவர் உயர்த்தினார். இயேசு கிறிஸ்துவின் மனுஷத்துவத்தையும், தெய்வத்துவத்தையும் பிதாவானவர் உயர்த்தினார்.

இயேசு கிறிஸ்து எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்பட்டதினால் அவருக்கு கனமும் வல்லமையும் உண்டாயிற்று. எல்லா நாமத்திற்கு மேலான நாமத்தை பிதாவான தேவன் குமாரனாகிய கிறிஸ்துவுக்குத் தந்தார். இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்குச் செய்தார். சர்வசிருஷ்டியும் இயேசு கிறிஸ்துவுக்கு கீழ்ப்பட்டிருக்கிறது. அவர்களுடைய முழங்கால்யாவும் இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக முடக்கப்பட்டிருக்கிறது.

பரலோகத்தில் வாசம் பண்ணுகிறவர்கள், பூலோகத்தில் வாசம் பண்ணுகிறவர்கள், மரித்துப்போனவர்கள், உயிரோடிருக்கிறவர்கள் ஆகிய எல்லோருமே தங்களுடைய முழங்கால்களை இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்கு முன்பாக முடக்குகிறார்கள். இயேசுவின் நாமம் உயர்த்தப்படுகிறது. எல்லா நாமங்களுக்கும் மேலாக இயேசு கிறிஸ்துவின் நாமமே உயர்ந்ததாக இருக்கிறது. எல்லா நாவுகளும் இயேசு கிறிஸ்துவை கர்த்தரென்று அறிக்கை பண்ணவேண்டும்.

கிறிஸ்துவின் ராஜ்யம் பரலோகத்திலும், பூமியிலும் ஸ்தாபிக்கப்படுகிறது. இவை இரண்டிலுமுள்ள எல்லா ஜீவராசிகளிடத்திலும் கிறிஸ்துவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகிறது. மரித்தவர்களுக்குள்ளும், உயிரோடிருக்கிறவர்களுக்குள்ளும் கிறிஸ்துவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகிறது. இதனால் பிதாவாகிய தேவனுக்கு மகிமை உண்டாகிறது. கிறிஸ்துவுக்கு உண்டாகிற மகிமை, பிதாவாகிய தேவனுக்கும் உண்டாகிறது. நாம் கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் போது, பிதாவாகிய தேவனையும் மகிமைப்படுத்துகிறோம்.

இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள் பிலி 2 : 12, 13

பிலி 2:12. ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும் பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்.

பிலி 2:13. ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் மிகுந்த கவனத்தோடிருக்கவேண்டும். நம்முடைய இரட்சிப்பு நிறைவேற நாம் பிரயாசப்பட வேண்டும். நம்முடைய ஆத்துமாவின் நன்மையை நாம் காத்துக்கொள்ள வேண்டும். எல்லா காரியங்களைவிட நம்முடைய ஆத்துமாவே நமக்கு முக்கியமானது. மற்ற காரியங்களில் நாம் கவனம் செலுத்துகிறோமா, அல்லது இல்லையா என்பது அவ்வளவு முக்கியமல்ல. ஆனால் நம்முடைய ஆவிக்குரிய காரியங்களில் நாம் நிச்சயமாகவே கவனம் செலுத்தவேண்டும். நம்முடைய இரட்சிப்பு நிறைவேற நாம் பிரயாசப்படவேண்டும்.

மற்றவர்களை நியாயந்தீர்ப்பது நம்முடைய ஊழியமல்ல. நம்முடைய காரியங்களை நாம் முதலாவது பார்க்கவேண்டும். நம்முடைய இரட்சிப்பு நிறைவேற நாம் முதலாவது பிரயாசப்படவேண்டும். "பிரயாசப்படுதல்" என்னும் வார்த்தைக்கு, "பூரணமாக கிரியை செய்தல்" என்று பொருள். இந்தப் பொருளோடு, "வேதனைகளை அனுபவித்து முயற்சி செய்தல்" என்னும் பொருளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

நம்முடைய தற்காலிகமான இரட்சிப்புக்கு பிரயாசப்பட்டால் மாத்திரம் போதாது. அவ்வப்போது ஏதாவது செய்து நம்முடைய இரட்சிப்பைக் காத்துக் கொண்டால் அது போதுமானதல்ல. நம்முடைய இரட்சிப்பு நிறைவேறவேண்டும். நம்முடைய இரட்சிப்பை நாம் முடிவுபரியந்தம் காத்துக்கொள்ளவேண்டும். அதற்காக நாம் பிரயாசப்படவேண்டும். நம்முடைய இரட்சிப்பில் கவனம் செலுத்தாமல் நம்மால் இரட்சிக்கப்படவே முடியாது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் கவனக் குறைவாகவும், ஏனோதானோவென்றும், சோம்பல் தனமாகவும் ஜீவித்தால் நம்முடைய இரட்சிப்பு நிறைவேறாது. ஆகையினால் நாம் பயத்தோடும், நடுக்கத்தோடும், நம்முடைய இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படவேண்டும். நம்முடைய ஆத்துமாவை தீமையிலிருந்து விலக்கிக் காத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் மிகுந்த கவனத்தோடும் எச்சரிப்போடும் முன்னேறிச் செல்லவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் சுவிசேஷத்தின் வார்த்தைகளுக்கு எப்போதும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகள் பவுலுக்குப் பிரியமானவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எப்பொழுதும் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கு கீழ்ப்படிகிறவர்கள். பவுல் அவர்களுக்குச் சமீபமாயிருக்கிற போது அவர்கள் சுவிசேஷத்திற்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்தார்கள். இப்போது பவுல் அவர்களை விட்டு தூரமாயிருக்கிறார். சிறைச்சாலையில் கட்டப்பட்டிருக்கிறார். இப்போதும் அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கு கீழ்ப்படிகிறார்கள். அவர்கள் எப்பொழுதும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும், தங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படவேண்டும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்குள் கிரியை செய்கிறார். நம்முடைய இரட்சிப்புக்கேற்ற கிரியைகளை அவர் நமக்குள் நடப்பிக்கிறார். தேவன் நமக்குள் கிரியை செய்வதினால், நாம் நம்முடைய இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படவேண்டும். தேவன் தம்முடைய கிருபையை நமக்குக் கொடுப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார். நம்முடைய உண்மையான பிரயாசங்களில் அவர் நமக்கு உதவிபுரிய விரும்புகிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் தேவனுடைய கிருபைகளையும், அவருடைய உதவிகளையும், ஒத்தாசைகளையும் பெற்றுக்கொண்டு, நம்முடைய இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படவேண்டும்.

நம்முடைய இரட்சிப்பு நிறைவேறுவதற்காக, நாம் எடுக்கிற பிரயாசம், ஏனோதானோவென்று இருக்கக்கூடாது. அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும், நம்முடைய இரட்சிப்பு நிறைவேற நாம் பிரயாசப்படவேண்டும். தேவன் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி நமக்குள் கிரியை செய்கிறார். அந்தச் சித்தத்தின்படியே நமக்குள் விருப்பத்தையும் செய்கையையும் உண்டாக்குகிறார். நன்மை செய்ய வேண்டும் என்னும் விருப்பம், தேவனுடைய கிருபையினாலேயே, நமக்குள் உண்டாயிற்று. தேவனுடைய கிருபையினாலேயே நம்மால் நற்கிரியைகளைச் செய்ய முடிகிறது. இவையெல்லாம் தேவனுடைய தயவுள்ள சித்தம். இது அவருடைய தெய்வீக விருப்பம். தேவனுடைய கிருபையில்லாமல் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்ளாமல், கிருபையைப் பெற்றுக் கொண்டதுபோல மாய்மாலம் பண்ணவும் முடியாது. தேவனுடைய கிருபை நம்முடைய நற்கிரியைகளின் மூலமாய் வெளிப்படும். தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி, நமக்குள் விருப்பத்தையும் செய்கையையும் உண்டாக்குகிறவர்.

தேவனுடைய மாசற்ற பிள்ளைகள்
பிலி 2 : 14-18

பிலி 2:14. நான் வீணாக ஓடினதும் வீணாகப்பிரயாசப்பட்டதுமில்லையென் கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக் கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள்,

பிலி 2:15. கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு,

பிலி 2:16. எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்.

பிலி 2:17. மேலும், உங்கள் விசுவாசமாகிய பலியின் மேலும் ஊழியத்தின் மேலும் நான் வார்க்கப்பட்டுப்போனாலும், நான் மகிழ்ந்து, உங்களனைவரோடுங்கூடச் சந்தோஷப்படுவேன்.

பிலி 2:18. இதினிமித்தம் நீங்களும் மகிழ்ந்து, என்னோடே கூடச் சந்தோஷப்படுங்கள்.

விசுவாசிகள் குற்றமற்றவர்களாகவும், கபடற்றவர்களாகவும், தேவனுடைய மாசற்ற பிள்ளைளகளாகவும் இருக்கவேண்டும். அவர்களுடைய சிந்தனையிலும், செயலிலும் அவர்கள் கர்த்தரைப் பிரியப்படுத்த வேண்டும். இதற்காக அவர்கள் எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும், தர்க்கிப்பில்லாமலும் செய்ய வேண்டும். எப்போதும் மற்றவர்களோடு தர்க்கம்பண்ணுவதும், சண்டைபோடுவதும் விசுவாசிகளுக்கு அழகல்ல. தேவனுடைய கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். கீழ்ப்படிவதற்காகவே தேவன் நமக்குக் கட்டளைகளைக் கொடுத்திருக்கிறார். தர்க்கம் பண்ணுவதற்காக கர்த்தர் அவற்றை நமக்குக் கொடுக்கவில்லை.

விசுவாசிகள் ஒருவருக்கொருவர் சமாதானமாகவும், அன்பாகவும் ஜீவிக்கவேண்டும். எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யவேண்டும். சத்தியத்தை தர்க்கம்பண்ணும்போது, அதன் சாரம் குறைந்த போகும். சத்தியத்தின் வெளிச்சம் கீழ்ப்படிதலில் பிரதிபலிக்கும். சத்தியத்திற்குக் கீழ்ப்படியும் போது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் ஜீவன் உண்டாகும். வளர்ச்சி உண்டாகும். சத்தியத்தைத் தர்க்கம்பண்ணும்போது நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சி குறைந்துபோகும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவே வாசம்பண்ணுகிறோம். இப்படிப்பட்டவர்கள் மத்தியிலே வாசம் பண்ணுகிற நாம் குற்றமற்றவர்களாகவும், கபடற்றவர்களாகவும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாகவும் இருக்கவேண்டும். மற்றவர்களுக்கு தீமை செய்யாமல் இருந்தால் மாத்திரம் போதாது. மற்றவர்கள் நம்மைப்பற்றி குற்றமாய் ஒன்றும் சொல்லாதவாறு நாம் ஜீவிக்கவேண்டும். மற்றவர்கள் நம்மை சந்தேகப்படக்கூடாது.

நாம் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாக இருக்க வேண்டும். உலகப்பிரகாரமான பிள்ளைகளுக்கும், தேவனுடைய பிள்ளைகளுக்கும் வித்தியாசமுண்டு. தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அந்த வித்தியாசத்தைக் காண்பிக்க வேண்டும். நாம் மாசற்ற பிள்ளைகளாக இருக்கவேண்டும். பரலோகத்திற்குப் போவது மாத்திரம் நம்முடைய இலக்கு என்று நினைக்காமல், அங்கு மாசில்லாமலும் கரை திரையில்லாமலும் போகவேண்டும் என்றும் நாம் விரும்பவேண்டும்.

நாம் வாசம்பண்ணுகிற சமுதாயம் கோணலும் மாறுபாடுமான சந்ததியாயிருக்கிறது. உலகத்தார் மத்தியில் சத்தியமில்லை. உலகத்தாரிடம் உண்மை, நேர்மை, ஒழுக்கம் ஆகியவற்றை எதிர்பார்க்க முடியாது. அவர்கள் கோணலும் மாறுபாடுமானவர்கள். நாம் இப்படிப்பட்டவர்கள் நடுவில் வாசம் பண்ணுகிற படியினால், நாம் மிகுந்த கவனத்தோடு ஜீவனம்பண்ண வேண்டும். இவர்களின் நடுவிலே குற்றமற்றவர்களாகவும், கபடற்றவர்களாகவும் ஜீவிக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஜீவவசனத்தைப் பிடித்துக் கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போல பிரகாசிக்கிறோம். கர்த்தருடைய பிள்ளைகள் இந்த உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய பிள்ளையை இந்த உலகத்தில், எந்த மூலையில் எழுப்பினாலும், அவர் அந்த இடத்தில் வெளிச்சமாகயிருப்பார். ஒரு விசுவாசி எங்கு இருக்கிறாரோ அங்கு அவர் ஜீவவசனத்தைப் பிடித்துக் கொண்டு, அந்தப் பகுதியிலே சுடரைப்போல பிரகாசிப்பார். கர்த்தருடைய பிள்ளைகள் பிரகாசிக்கவும் வேண்டும். குற்றமற்றவர்களாகவும் இருக்கவேண்டும்.

நாம் சுடர்களைப்போல பிரகாசிக்க வேண்டுமென்றால், ஜீவவசனத்தைப் பிடித்துக்கொள்ளவும் வேண்டும். நாம் கர்த்தரைப் பற்றிக்கொள்ளும் போது, அவருடைய ஜீவவசனத்தையும் பிடித்துக் கொள்ள வேண்டும். மற்றவர்களின் பிரயோஜனத்திற்காக தேவவசனத்தைப் பயன்படுத்த வேண்டும். நம்முடைய கரத்தில் சுடர் இருக்கும்போது, அது நமக்கும் வெளிச்சம் தரும். மற்றவர்களுக்கும் வெளிச்சம் தரும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம், நமக்கும் பிரயோஜனமுள்ளதாக இருக்கவேண்டும், மற்றவர்களுக்கும் பிரயோஜனமுள்ளதாக இருக்கவேண்டும். இந்த உலகத்தில் நாம் விளக்குத்தண்டின் மேல் ஏற்றப்பட்ட விளக்குகளைப் போல, எல்லோருக்கும் முன்பாக பிரகாசிக்கவேண்டும்.

பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகள் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாக இருக்கும்போது, பவுலுக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாகும். பவுல் பிலிப்பியர் மத்தியில் ஊழியம் செய்தார். அங்குள்ள விசுவாசிகள் உண்மையுள்ளவர்களாக ஜீவிக்கும் போது, பவுலுக்கு சந்தோஷமுண்டாகும். தன்னுடைய ஊழியம் வீணாய்ப் போய்விடவில்லை என்னும் நம்பிக்கை உண்டாகும். தான் வீணாக ஓடினதும், வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லை என்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளிலே பவுலுக்கு உண்டாகும்.

பவுல் தன்னுடைய ஊழியத்தைப் பற்றிச் சொல்லும்போது, அதை ஒரு ஓட்டத்தோடு ஒப்பிட்டுச் சொல்லுகிறார். ஓடுகிறவர்கள் பிரயாசப்பட்டுத்தான் ஓடவேண்டும். சரீர வேதனைகளை சகித்துக்கொண்டு தான் ஓடவேண்டும். பிரயாசப்படுகிறவர்கள் தொடர்ந்து பிரயாசப்பட வேண்டும். முடிவுபரியந்தம் தங்கள் பிரயாசத்தில் நிலைத்திருக்க வேண்டும். தாங்கள் எதில் பிரயாசப்படுகிறார்களோ அதில் தங்களை முழுவதுமாக ஈடுபடுத்தி அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்களுடைய ஊழியங்களைப்பற்றி நினைக்கும் போது அவர்களுக்கு சந்தோஷமுண்டாக வேண்டும். தங்களுடைய ஊழியம் வீணாய்ப் போய்விடவில்லை என்னும் நிச்சயம் அவர்களுக்குள் ஏற்படவேண்டும். தங்களுடைய பிரயாசம் வீண்போகவில்லை என்றும் அவர்கள் அறிந்திருக்கவேண்டும். அப்போது தான் ஊழியக்காரருக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாகும். கர்த்தருடைய நாளின்போது இந்த மகிழ்ச்சி அதிகமாயிருக்கும். தங்கள் ஊழியத்தின் மூலமாய் இரட்சிக்கப்பட்டவர்கள், கர்த்தருடைய நாளின்போது, அவருடைய சமுகத்தில் வெகுமதிகளைப் பெற்றுக் கொள்ளும் போது, ஊழியக்காரருக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாகும்.

அப்போஸ்தலர் பவுல் பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளுக்காக ஓடினதும், பிரயாசப்பட்டதும் வீணாய்ப் போகவில்லை. அது மாத்திரமல்ல; அவர்களுடைய நன்மைக்காக பவுல் பாடுகளை அனுபவிக்கவும் ஆயத்தமாகயிருக்கிறார். அவர்களுடைய விசுவாசமாகிய பலியின்மேலும், ஊழியத்தின் மேலும், தான் வார்க்கப்பட்டுப் போனாலும், பவுல் மகிழ்ந்து, அவர்கள் அனைவரோடுங்கூட சந்தோஷப்படுகிறார். அவர்களுடைய பலிபீடத்தில் தன்னை ஒரு பலியாக மனப்பூர்வமாக ஒப்புக் கொடுக்கிறார். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுடைய விசுவாசத்தின் வளர்ச்சிக்கு பவுல் உண்மையாய் ஊழியம் செய்ய விரும்புகிறார்.

விசுவாசிகளுடைய விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுவதற்காகவும், சபையின் வளர்ச்சிக்காகவும் அப்போஸ்தலர் பவுல் தன் ஜீவனையே ஒப்புக்கொடுக்கிறார். இரத்தச்சாட்சியாக மரிக்கவும் ஆயத்தமாயிருக்கிறார். தான் வார்க்கப்பட்டுப் போனாலும் அதற்கும் சந்தோஷப்படுகிறார். கர்த்தருடைய ஊழியத்திற்காக எந்த வேதனையையும், எந்தப் பாடுகளையும், எந்த உபத்திரவங்களையும் சகித்துக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார். இந்த விஷயத்தில் கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும், பவுலின் முன்மாதிரியைப் பின்பற்றி, கர்த்தருடைய ஊழியத்திற்காகப் பாடுகளை அனுபவிக்க ஆயத்தமாயிருக்கவேண்டும்.

பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார். தன்னுடைய பிரசங்கத்தையும் உபதேசத்தையும் பவுல் தன்னுடைய இரத்தத்தினால் முத்திரை போடுகிறார். இதினிமித்தம் விசுவாசிகள் மகிழ்ச்சியோடிருக்கிறார்கள். அவர்கள் பவுலோடுகூட சந்தோஷப்படுகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் சந்தோஷமாயிருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தம். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் உண்மையாய் ஊழியம் செய்யும் போது, விசுவாசிகளும் அவர்களோடுகூட சந்தோஷப்படுவார்கள். ஊழியக்காரர்களுடைய சந்தோஷத்தை விசுவாசிகளும், விசுவாசிகளின் சந்தோஷத்தை ஊழியக்காரர்களும் பகிர்ந்துகொள்வார்கள்.

தீமோத்தேயு
பிலி 2 : 19-24

பிலி 2:19. அன்றியும், நானும் உங்கள் செய்திகளை அறிந்து மனத்தேறுதல் அடையும் படிக்குச் சீக்கிரமாய்த் தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பலாமென்று கர்த்தராகிய இயேசுவுக்குள் நம்பியிருக்கிறேன்.

பிலி 2:20. அதேனென்றால், உங்கள் காரியங்களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு என்னைப் போல மனதுள்ளவன் அவனையன்றி வேறொருவனும் என்னிடத்திலில்லை.

பிலி 2:21. மற்றவர்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல், தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்.

பிலி 2:22. தகப்பனுக்குப் பிள்ளை ஊழியஞ் செய்வது போல, அவன் என்னுடனே கூட சுவிசேஷத்தினிமித்தம் ஊழியஞ் செய்தானென்று அவனுடைய உத்தமகுணத்தை அறிந்திருக்கிறீர்கள்.

பிலி 2:23. ஆகையால் என் காரியங்கள் இன்னபடி நடக்கும் என்று நான் அறிந்தவுடனே அவனை அனுப்பலாமென்றுநினைத்திருக்கிறேன்.

பிலி 2:24. அன்றியும் நானே சீக்கிரத்தில் வருவேனென்று கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறேன்.

அப்போஸ்தலர் பவுல், பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளிடத்திற்கு தீமோத்தேயுவை அனுப்பலாமென்று தீர்மானித்திருக்கிறார். அவர்களுடைய காரியங்களை உண்மையாய் விசாரிப்பதற்கு தீமோத்தேயு பவுலைப் போல மனதுள்ளவனாயிருக்கிறார். அவரைப்போல வேறொருவரும் பவுலிடத்தில்லை. தீமோத்தேயுவோடு வேறு யாரையும் ஒப்பிட்டுப் பார்க்கமுடியவில்லை. மென்மையான இருதயமுள்ளவர் அன்புள்ள ஆவியுள்ளவர். தீமோத்தேயு பிலிப்பு சபையிலுள்ள விசுவாசிகளின் காரியங்களை உண்மையாய் விசாரிப்பார். அவன் உத்தம குணமுடையவர். தீமோத்தேயுவிடம் அநேக நல்ல சுபாவங்கள் இயல்பாகவே அமைந்துள்ளது.

நாம் கர்த்தருடைய ஊழியத்தை செய்யும் போது, நம்மிடத்திலும் நற்குணங்கள் இயல்பாகவே நிரம்பியிருக்க வேண்டும். மிகவும் கஷ்டப்பட்டு நல்லவர்போல நடிக்கக் கூடாது. வெளிப்பார்வைக்கு நம்மிடத்தில் நற்குணம் இருப்பது போல வேஷம்போடக் கூடாது. நம்மிடத்தில் உண்மையாகவே, இயற்கையாகவே நற்குணங்கள் காணப்பட வேண்டும். ஊழியக்காரர்கள் தங்கள் மூலமாய் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளின் நலன்களை விசாரிக்க வேண்டும். அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியை அறிந்துகொள்ளவேண்டும். இந்த ஊழியத்தை இயல்பான மனதுடன் ஒருவர் செய்யும்போது, அது மிகவும் சிறப்பாக இருக்கும்.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவையும், மற்ற ஊழியக்காரர்களையும் ஒப்பிட்டுச் சொல்லுகிறார். தீமோத்தேயு கிறிஸ்துவுக்குரியவைகளை மாத்திரம் தேடுகிறார். மற்றவர்களெல்லாரும் கிறிஸ்துவுக்குரியவைகளைத் தேடாமல், தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள் (பிலி 2:21). பவுல் இந்த வாக்கியத்தை அவசரப்பட்டு சொல்லுவது போல தெரிகிறது. தாவீதும் இப்படித்தான் சொன்னார். “எந்த மனுஷனும் பொய்யன்” (சங் 116:11) என்று தாவீது தன்னுடைய மனக்கலக்கத்திலே சொன்னார். தாவீதைப் போலவே, பவுலும், இந்த வாக்கியத்தை தன்னுடைய மனக்கலக்கத்திலே சொல்லியிருக்கலாம். அல்லது தீமோத்தேயுவை பொதுவாக பாராட்டியிருக்கலாம்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஒவ்வொருவரிடத்திலும் நற்குணங்கள் உண்டு. கர்த்தருக்கு முன்பாக அவர்கள் உண்மையாகவும், உத்தமமாகவும் ஊழியம் செய்கிறார்கள். பரிசுத்தமாய் ஜீவிக்கிறார்கள். மற்ற ஊழியக்காரர்களைப் போலவே தீமோத்தேயுவும் கர்த்தருக்காக நேர்த்தியாய் ஊழியம் செய்கிறார். ஆனாலும் மற்ற ஊழியக்காரர்களோடு தீமோத்தேயுவை ஒப்பிட்டுப்பார்க்கும்போது, தீமோத்தேயுவின் நற்குணம் சிறப்பாகவும் மேன்மையாகவும் இருக்கிறது. பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளும் தீமோத்தேயுவின் உத்தம குணத்தை அறிந்திருக்கிறார்கள் (பிலி 2:22).

தீமோத்தேயுவின் குணாதிசயத்தை விசுவாசிகள் ஏற்கெனவே சோதித்துப் பார்த்திருக்கிறார்கள். எல்லா சோதனைகளிலும் அவர் உத்தமராக இருந்திருக்கிறார். அவருடைய உத்தம குணத்தை பிலிப்பியரும் அறிந்திருக்கிறார்கள். தீமோத்தேயு எந்தெந்த சபைகளில் ஊழியம் செய்தாரோ, அந்தந்த சபையாரெல்லாரும் அவருடைய உத்தம குணத்தை அறிந்திருக்கிறார்கள். தீமோத்தேயுவின் நற்குணத்திற்கு சாட்சி சொல்லுகிறார்கள்.

பவுல் தீமோத்தேயுவை தன்னுடைய பிள்ளையைப் போல பாவிக்கிறார். தகப்பனுக்கு பிள்ளை ஊழியம் செய்வது போல, தீமோத்தேயு பவுலுடனேகூட, சுவிசேஷத்தினிமித்தம் ஊழியம் செய்தார். பவுல் பல இடங்களில் ஊழியம் செய்வதற்காகப் போனார். அங்கெல்லாம் தீமோத்தேயுவும் பவுலோடுகூட பிரயாணம் செய்து, அவருக்கு உதவி ஊழியராகயிருந்தார். இவர்கள் இருவரும் இணைந்து ஊழியம் செய்வதை பல சபையார் அங்கீகரித்து, இவர்களை நல்மனதோடு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். விசுவாசிகள் மத்தியில் இவர்கள் இருவருக்கும் நற்பெயர் உண்டாயிருக்கிறது. ஆனாலும் இவர்களிடத்தில் மனப்பெருமையோ, மனமேட்டிமையோ இல்லை. மனத்தாழ்மையோடு ஊழியம் செய்கிறார்கள். விசுவாசிகளிடத்தில் அன்பு கூருகிறார்கள். ஒரு மூத்த ஊழியக்காரரோடு, ஒரு உதவி ஊழியக்காரர் எப்படி இணைந்து ஊழியம் செய்யவேண்டும் என்பதற்கு தீமோத்தேயு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறார்.

பவுல் இப்போது ரோமாபுரியிலுள்ள சிறைச்சாலையில் கட்டப்பட்டிருக்கிறார். அவருடைய காரியங்கள் எப்படி நடக்குமென்று அவருக்கு இன்னும் தெளிவாய்த் தெரியவில்லை. தன்னுடைய காரியங்கள் எப்படி நடக்குமென்று தான் அறிந்தவுடன், பவுல் தீமோத்தேயுவை, பிலிப்பி பட்டணத்திற்கு அனுப்பலாம் என்று நினைத்திருக்கிறார். தன்னுடைய காரியம் என்னபடி நடக்குமென்று பவுலுக்கு உறுதியாய்த் தெரியவில்லை. ஆனாலும் சிறைச்சாலையிலிருந்து விடுதலைபெற்று, தான் சீக்கிரத்தில் பிலிப்பி சபையாரிடத்தில் வருவதற்கு வாய்ப்பு கிடைக்குமென்று, பவுல் கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறார்.

சிறைச்சாலையிலிருந்து தனக்கு விடுதலை கிடைக்குமென்று பவுல் நம்புகிறார். இந்த உலக வாழ்க்கையை அனுபவிக்க வேண்டுமென்று பவுல் ஆசைப்படவில்லை. அதற்காக அவர் தன்னுடைய விடுதலையை எதிர்பார்க்கவில்லை. தான் விடுக்கப்பட்டால், கர்த்தருடைய ஊழியத்தைத் தொடர்ந்து செய்வதற்கு தனக்கு வாய்ப்பு கிடைக்குமென்று பவுல் எதிர்பார்க்கிறார். நன்மை செய்வதற்கு வாய்ப்புண்டாகும் என்று தீர்மானித்து, தன்னுடைய விடுதலையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். தன்னுடைய விடுதலையைப்பற்றி பவுல் கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறார். பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளைக் காண்பதற்கு தனக்கு வாய்ப்பு கிடைக்குமென்று கர்த்தருக்குள் நம்புகிறார். ஆனாலும் எல்லா காரியங்களையும் தேவனுடைய தெய்வீக சித்தத்திற்கு பவுல் ஒப்புக்கொடுக்கிறார். அவருடைய சித்தம் நிறைவேற காத்திருக்கிறார்.

எப்பாப்பிரோதீத்து
பிலி 2 : 25-30

பிலி 2:25. மேலும், என் சகோதரனும், உடன் வேலையாளும், உடன் சேவகனும், உங்கள் ஸ்தானாபதியும், என் குறைச்சலுக்கு உதவி செய்தவனுமான எப்பாப்பிரோதீத்துவை உங்களிடத்தில் அனுப்பவேண்டுமென்று எண்ணினேன்.

பிலி 2:26. அவன் உங்கள் எல்லார்மேலும் வாஞ்சையுள்ளவனும், தான் வியாதிப்பட்டதை நீங்கள் கேள்விப்பட்டதினாலே மிகவும் வியாகுலப்படுகிறவனுமாயிருந்தான்.

பிலி 2:27. அவன் வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தது மெய்தான். ஆகிலும், தேவன் அவனுக்கு இரங்கினார்; அவனுக்கு இரங்கினதுமல்லாமல், துக்கத்தின்மேல் துக்கம் எனக்கு உண்டாகாதபடிக்கு, எனக்கும் இரங்கினார்.

பிலி 2:28. ஆகையால் நீங்கள் அவனை மறுபடியும் கண்டு சந்தோஷப்படவும், என் துக்கங் குறையவும், அவனை அதிசீக்கிரமாய் அனுப்பினேன்.

பிலி 2:29. ஆனபடியினாலே நீங்கள் கர்த்தருக்குள் மிகுந்த சந்தோஷத்தோடே அவனை ஏற்றுக் கொண்டு, இப்படிப்பட்டவர்களைக் கனமாய் எண்ணுங்கள்.

பிலி 2:30. ஏனெனில் நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய ஊழியத்திலே உங்கள் குறைவை நிறைவாக்கும்படிக்கு, அவன் தன் பிராணனையும் எண்ணாமல், கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணத்திற்குச் சமீபமாயிருந்தான்.

அப்போஸ்தலர் பவுல் எப்பாப்பிரோதீத்துவைப் பற்றி இங்கு எழுதுகிறார். அவரை தன்னுடைய சகோதரன் என்றும், தன்னுடைய உடன்வேலையாள் என்றும், தன்னுடைய உடன்சேவகன் என்றும் குறிப்பிடுகிறார். எப்பாப்பிரோதீத்து பிலிப்பு சபையிலுள்ள விசுவாசிகளுக்கு ஸ்தானாபதியாக ஊழியம் செய்தார். எப்பாப்பிரோதீத்து பவுலின் குறைச்சலுக்கு உதவி செய்தவர். இவர் வியாதிப்பட்டிருந்தார். இவருடைய வியாதியைப் பற்றி பிலிப்பி பட்டணத்திலுள்ள சபையாரும் கேள்விப்பட்டிருந்தார்கள். தன்னுடைய வியாதியைப் பற்றி அவர்கள் கேள்விப் பட்டதினால், எப்பாப்பிரோதீத்துவுக்கு மிகவும் வியாகுலம் உண்டாயிற்று. இவர் வியாதிப்பட்டு மரணத்திற்கு சமீபமாயிருந்தார்.

எப்பாப்பிரோதீத்துவின் வியாதியைப் பற்றி பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகள் கேள்விப்பட்டு, மிகுந்த துக்கமடைந்தார்கள். இவர்மீது விசுவாசிகள் மிகுந்த அன்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். அவர்கள் எப்பாப்பிரோதீத்துவை மறுபடியும் கண்டால், அவர்களுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகும். ஆகையினால் பவுல் பிலிப்பி சபையாரிடத்தில் எப்பாப்பிரோதீத்துவை அனுப்ப வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்.

எப்பாப்பிரோதீத்து வியாதிப்பட்டு மரணத்திற்கு சமீபமாயிருந்தார். ஆகிலும் தேவன் அவருக்கு இரங்கினார். அவரைக் குணப்படுத்தினார். எப்பாப்பிரோதீத்துவின் வியாதி பவுலையும் பாதித்திருக்கிறது. பவுலுக்கு துக்கமுண்டாயிற்று. எப்பாப்பிரோதீத்துவுக்கு தேவன் இரங்கினதினால், பவுலின் துக்கம் குறைந்து போயிற்று. துக்கத்தின்மேல் துக்கமுண்டாகாதபடிக்கு, தேவன் தனக்கும் இரங்கினார் என்று பவுல் சாட்சியாகச் சொல்லுகிறார்.

பவுல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருப்பது அவருக்குத் துக்கமாயிருக்கிறது. சிறைச்சாலையின் வேதனைகளினால் அவர் துக்கப்படவில்லை. கர்த்தருக்காக விடுதலையோடு ஊழியம் செய்ய முடியவில்லையே என்னும் துக்கமே பவுலுக்கு உண்டாயிற்று. எப்பாப்பிரோதீத்துவின் வியாதி பவுலின் துக்கத்தை அதிகரித்தது. அவர் மரணத்திற்கு சமீபமாயிருந்ததினால், பவுலின் துக்கம் இன்னும் அதிகரித்தது.

BELLWETHER INTERNATIONAL

பிலிப்பியர்- விரிவுரை
PHILIPPIANS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

எப்பாப்பிரோதீத்து பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளைப் பார்க்க வேண்டுமென்று ஆவலோடிருக்கிறார். இவர் வியாதிப்பட்டபோது அவர்கள் இவருக்காகத் துக்கப்பட்டார்கள். அவர்களுக்கு துக்கமுண்டானதை எப்பாப்பிரோதீத்து கேள்விப்பட்டு, இவரும் மிகவும் வியாகுலப்பட்டார். பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகள் எப்பாப்பிரோதீத்துவை மறுபடியும் கண்டால், அவர்களுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகும். பவுலும் அவர்களை சந்தோஷத்திற்குள் வழிநடத்த விரும்புகிறார். அவர்கள் சந்தோஷப்படவும், தன்னுடைய துக்கம் குறையவும், பவுல் எப்பாப்பிரோதீத்துவை அதிசீக்கிரமாய் பிலிப்பி பட்டணத்திற்கு அனுப்புகிறார்.

பிலிப்பி சபையார் எப்பாப்பிரோதீத்துவைப் போல நல்ல ஊழியக்காரர்களை கனமாய் எண்ண வேண்டும். இவர்களை கர்த்தருக்குள் மிகுந்த சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ள வேண்டும். எப்பாப்பிரோதீத்து பக்திவைராக்கியமுள்ளவர். கர்த்தர் இவருடைய விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணியிருக்கிறார். இவரும் விசுவாசிகளை நேசிக்கிறார். விசுவாசிகளும் இவரை நேசிக்கிறார்கள். இவருக்கு மதிப்பு கொடுக்கிறார்கள்.

எப்பாப்பிரோதீத்து தன்னுடைய பிராணனையும் எண்ணாமல் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தார். ஒருவேளை ஊழியத்தினிமித்தமாய் அவர் வியாதிப்பட்டிருக்கலாம். மரணத்திற்கு சமீபமாயிருந்திருக்கலாம். இப்படிப்பட்ட நல்ல ஊழியக்காரர்களை பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். பிலிப்பியரின் குறைவை நிறைவாக்கும்படி எப்பாப்பிரோதீத்து ஊழியம் செய்தார். பிலிப்பு சபையிலுள்ள விசுவாசிகள் பவுலுக்கு ஊழியம் செய்ய வேண்டியவர்கள். அந்த அளவுக்கு பவுல் அவர்களுக்கு அதிகமாய் ஊழியம் செய்திருக்கிறார். பவுலின் ஊழியத்தில் எப்பாப்பிரோதீத்து உடன்வேலையாளாகவும், உடன் சேவகராகவும் ஊழியம் செய்திருக்கிறார். தேவன் நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கொடுக்கிறார். தேவன் நமக்கு ஈவாகக் கொடுக்கிற காரியங்களை ஸ்தோத்திரத்தோடும் சந்தோஷத்தோடும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

3 அதிகாரம்

யூதமார்க்கத்து கள்ள உபதேசியாரைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று பவுல் எழுதுகிறார் (பிலி 3:1-3). அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய யூதமார்க்கத்து பின்னணியைத் தெளிவுபடுத்துகிறார் (பிலி 3:4-8). அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவின் நீதியைத் தெரிந்துகொள்கிறார் (பிலி 3:9-16). கிறிஸ்துவின் பகைஞருக்கு எச்சரிக்கையாயிருக்குமாறு பவுல் ஆலோசனை சொல்லுகிறார் (பிலி 3:17-21).

எச்சரிக்கையாயிருங்கள் பிலி 3 : 1-3

பிலி 3:1. மேலும், என் சகோதரரே, கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள். எழுதினவைகளேயே எழுதுவது எனக்கு வருத்தமல்ல, அது உங்களுக்கு நலமாயிருக்கும்.

பிலி 3:2. நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கை யாயிருங்கள், சுன்னத்துக்காரருக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

பிலி 3:3. ஏனெனில், மாம்சத்தின் மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்து இயேசுவுக்குள்மேன்மைபாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்.

பிலிப்பி பட்டணத்திலுள்ள சபை வளர்ச்சி பெற்றிருக்கிறது. விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் தேறினவர்களாக இருக்கிறார்கள். சபை எண்ணிக்கையில் வளர்ச்சி பெற்றிருக்கிறது. இருந்தாலும் யூதமார்க்கத்து உபதேசியார்கள், சபையில் பிரவேசித்து அங்குள்ள விசுவாசிகளுக்கு துர்உபதேசம் பண்ணுகிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் பிலிப்பியருக்கு எழுதும்போது "கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள்" என்று சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தில் நாம் ஆறுதல் பெற்றிருக்கிறோம். சந்தோஷமும் சமாதானமும் பெற்றிருக்கிறோம். ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறோம். நாம் அந்த ஆசீர்வாதங்களைப் பற்றிக்கொள்ள வேண்டும். கர்த்தருக்குள் நாம் எப்போதும் சந்தோஷமாயிருக்க வேண்டும். கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்க விரும்புகிறவர்கள், அவருக்காக பாடுகளை அனுபவிக்கவும் ஆயத்தமாயிருக்க வேண்டும். கர்த்தரின் சமுகத்தைவிட்டு எக்காரணத்தைக் கொண்டும் விலகிப்போய்விடக்கூடாது.

கள்ளப் போதகர்களுக்கு எச்சரிக்கையாயிருக்குமாறு பவுல் பிலிப்பியருக்கு எழுதுகிறார். தான் ஏற்கெனவே எழுதினவைகளை மறுபடியும் எழுதுகிறார். அதற்காக அவர் வருத்தப்படவில்லை. எழுதினவைகளை மறுபடியும் எழுதுவது, அவர்களுக்கு நலமாயிருக்கும் என்று பவுல் நம்புகிறார். அவை அவர்களுடைய ஆவிக்குரிய பாதுகாப்புக்கு உதவியாயிருக்கும். ஊழியக்காரர்கள் விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய போஜனம் கொடுக்கவேண்டும். ஆவிக்குரிய ஜீவியத்தில் அவர்களை நேர்த்தியாய் வளர்க்கவேண்டும். இதற்காக அவர்கள் வருத்தப்படக்கூடாது. விசுவாசிகள் தங்களைப்பற்றி என்ன நினைப்பார்களோ என்று ஊழியக்காரர்கள் வருத்தப்படாமல், அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் ஆசீர்வாதங்களுக்காக ஊழியம்செய்யவேண்டும்.

ஒரே சத்தியத்தை நாம் மறுபடியும் கேட்பது நமக்கு நல்லது. புதுப்புது உபதேசங்களை கேட்கவேண்டுமென்றும், புதிய சத்தியங்களை கேட்க வேண்டுமென்றும் நாம் விரும்புவோம். ஆனாலும் நாம் ஏற்கெனவே கேட்ட சத்தியங்களை மறுபடியும் கேட்டு, அவற்றில் தெளிவுபெறுவதும் அவசியம்.

பவுல் பிலிப்பியருக்கு யூதமார்க்கதாரைப்பற்றி எச்சரித்துச் சொல்லுகிறார். "நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என்று எழுதுகிறார். நாய்கள் குலைக்கும். கடிக்கும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உண்மையோடும் விசுவாசத்தோடும் அறிவிக்கிறார்கள். கள்ளப்போதகர்களோ நாய்களைப்போல, அவர்களைப் பார்த்து குலைக்கிறார்கள். ஊழியக்காரர்களை கடிக்க முயற்சி பண்ணுகிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் விசுவாசத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் நாம் நீதிமான்களாக்கப் படுகிறோம் என்று போதகம் பண்ணுகிறார்கள். ஆனால் யூதமார்க்கத்து கள்ளப்போதகர்களோ, நாம் நம்முடைய நற்கிரியைகளினால் நீதிமான்களாக்கப் படுகிறோம் என்று நாய்களைப்போல குலைக்கிறார்கள்.

யூதமார்க்கத்து கள்ளப்போதகர்கள் பொல்லாத வேலையாட்கள். இவர்கள் தங்கள் சரீரத்தில் விருத்தசேதனம் பெற்றிருக்கிறார்கள். மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கிறார்கள். தங்களுடைய மாம்ச விருத்தசேதனத்தினால் பெருமைப்படுகிறார்கள். ஆனால் பவுல் இவர்களை "சுன்னத்துக்காரர்" என்று சொல்லி, இவர்களுக்கு எச்சரிக்கையாயிருக்குமாறு ஆலோசனை சொல்லுகிறார்.

மெய்யான விசுவாசிகளின் சுபாவம் எப்படியிருக்கும் என்பதையும் பவுல் இங்கு தெளிவுபடுத்துகிறார். கர்த்தருடைய பிள்ளைகள் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிருக்க மாட்டார்கள். அவர்கள் ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்வார்கள். தங்களுடைய மாம்சத்தைக்குறித்து மேன்மை பாராட்டாமல், கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுவார்கள். இதுவே மெய்யான விசுவாசிகளின் சுபாவம்.

பழைய ஏற்பாட்டு பிரமாணம் மனுஷருடைய மாம்சத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. இதனால் யூதமார்க்கத்தார் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கிறார்கள். ஆனால் நாமோ ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்யவேண்டும். இதுவே கிறிஸ்து நமக்குப் போதித்திருக்கிற உபதேசம். நம்முடைய ஆராதனையில் உண்மையிருக்கவேண்டும். ஜீவன் இருக்கவேண்டும். நாம் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து நாம் கர்த்தரைத் துதிக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சந்தோஷமாயிருக்கிறோம். அவருக்குள் மேன்மை பாராட்டுகிறோம். நமக்கு நிழலாயிருந்த பழைய ஏற்பாட்டு பிரமாணம் நம்மை விட்டு நீக்கப்பட்டு விட்டது. ஆகையினால் நியாயப் பிரமாணத்திற்குள் நாம் மேன்மை பாராட்டாமல், கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிறோம்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைக்கக்கூடாது. மாம்சத்தின் பிரமாணம் புறம்பானது. அது புறம்பான கிரியைகளைச் செய்யும். ஆனால் நம்முடைய பிரமாணமோ கிறிஸ்துவின் பிரமாணம். கிறிஸ்துவின் பிரமாணத்தை உடையவர்கள் தங்கள் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கமாட்டார்கள். தங்கள் மாம்சத்தில் சந்தோஷப்படாமல், கிறிஸ்துவுக்குள் சந்தோஷப்படுவார்கள்.

எபிரெயரில் பிறந்த எபிரெயன்
பிலி 3 : 4-8

பிலி 3:4. மாம்சத்தின் மேல் நம்பிக்கை வைக்க வேண்டுமானால் நானும் வைக்கலாம்; வேறொருவன் மாம்சத்தின் மேல் நம்பிக்கையாயிருக்க நினைத்தால் நான் அதிகமாய் அப்படிச் செய்யலாம்.

பிலி 3:5. நான் எட்டாம் நாளில், விருத்தசேதனமடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான், எபிரெயரில் பிறந்த எபிரெயன், நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்;

பிலி 3:6. பக்திவைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன், நியாயப் பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்.

பிலி 3:7. ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்.

பிலி 3:8. அது மாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைக்காமல் கிறிஸ்துவில் மாத்திரமே நம்பிக்கை வைக்கவேண்டும். இந்த உபதேசத்தை உறுதிபண்ணுவதற்கு அப்போஸ்தலர் பவுல் தன்னையே ஒரு எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறார். பவுல் யூதமார்க்கத்தில் பிறந்தவர். நியாயப்பிரமாணத்தின்படி அவர் ஒரு பரிசேயர். ஆகையினால் மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைக்கவேண்டுமானால் பவுலும் நம்பிக்கை வைக்கலாம். வேறொருவன் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிருக்க நினைத்தால், பவுல் அதிகமாய் அப்படி செய்யலாம் (பிலி 3:4).

பவுல் எபிரெயரில் பிறந்த எபிரெயன். மற்ற யூதர்களைவிட பவுல் பல விஷயங்களில் மேன்மையானவர். ஆகையினால் அவர் தன்னைத்தானே மேன்மைப் படுத்துவதற்கும், மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைப்பதற்கும் அதிக வாய்ப்புள்ளது. பவுல் புறஜாதி மார்க்கத்திலிருந்து யூதமார்க்கத்தை ஏற்றுக்கொண்டவரல்ல. அவர் யூதமார்க்கத்திலேயே பிறந்தவர். இஸ்ரவேல் வம்சத்தைச் சேர்ந்தவர்.

அவருடைய கோத்திரம் பென்னியமீன் கோத்திரம். அவர் எபிரெயரில் பிறந்த எபிரெயன். பவுலின் முன்னோர்கள் யாரும் புறஜாதி மார்க்கத்தைச் சேர்ந்தவர்களல்ல. பவுலின் முன்னோர்கள் அனைவருமே எபிரெயர்கள்.

பவுல் எட்டாம் நாளில் விருத்தசேதனம் பெற்றுக்கொண்டார். பவுலின் பெற்றோர் அவரை மோசேயின் பிரமாணத்தின்படி கண்டிப்போடு வளர்த்திருக்கிறார்கள். யூதமார்க்கத்து பிரமாணங்களை அவர் கற்றுத் தேறினவர். நியாயப்பிரமாணத்தின்படி பவுல் ஒரு பரிசேயர். பவுல் பரிசேயராகவும் பரிசேயருடைய மகனாகவும் இருக்கிறார் (அப் 23:6). கமாலியேலின் பாதபடியில் யூதமார்க்கத்துப் பிரமாணங்களைக் கற்றுத்தேர்ந்தவர்.

நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின் படி பவுல் குற்றம் சாட்டப்படாதவர். நியாயப்பிரமாணத்து வார்த்தையின்படியோ, அல்லது முன்னோர்களின் பாரம்பரியத்தை அநுசரிப்பது பற்றியோ, பவுல்மீது யாரும் குற்றம் சொல்லமுடியாது. அவர் பக்திவைராக்கியத்தோடிருந்தார். அந்த வைராக்கியத்தினால்தான் பவுல் சபையைத் துன்பப்படுத்தினார். கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களைத் துன்பப்படுத்துவது நீதியானது என்று பவுல் நினைத்தார். யூதமார்க்கத்தில் பவுலுக்கிருந்த பக்திவைராக்கியம் அவருடைய மனக்கண்களை மங்கச் செய்தது. பவுலிடத்தில் பக்திவைராக்கியம் இருந்தது. ஆனால் தேவனை அறிகிற அறிவு இல்லை.

பவுல் ஒரு யூதராகயிருந்ததினால் அவரும் மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைத்திருக்கலாம். ஆனால் அவர் அப்படி செய்யவில்லை. மாம்சத்தின்மேல் நம்பிக்கையிராமல் கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிறார்.

அப்போஸ்தலர் பவுல் தனக்கு லாபமாயிருந்தவைகள் எவைகளோ அவைகளை கிறிஸ்துவுக்காக நஷ்டம் என்று எண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவை இழந்துவிட்டு, இந்த உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், அதனால் ஒரு பிரயோஜனமுமில்லை. இயேசுகிறிஸ்துவின் சமுகத்திலிருந்து பிரிந்துபோனால், நமக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு உண்டாகும். அப்போஸ்தலர் பவுல், பிலிப்பியரிடம், எந்தெந்த காரியங்களையெல்லாம் நஷ்டமென்று எண்ணவேண்டும் என்னும் ஆலோசனையை சொல்லவில்லை. அதற்குப் பதிலாக தான் நஷ்டமாக எண்ணுபவைகளை மாத்திரம் அவர்களுக்குச்சொல்லுகிறார். தனக்கு லாபமாயிருந்தவைகள் எல்லாம், இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தம், அவருக்கு இப்போது நஷ்டமாயிருக்கிறது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் பவுல் நஷ்டம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார். இப்பிரபஞ்சத்தில் பவுலுக்கு ஒரே ஒரு நோக்கம் மாத்திரமே உண்டு. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிந்துகொள்ள வேண்டும். அவரைத் தன்னுடைய ஜீவியத்திற்கு கர்த்தரென்று அறிந்து, அதை நடைமுறையில் உறுதிபண்ணிக் கொள்ளவேண்டும். கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியமுண்டாகவேண்டும். கர்த்தரைப்பற்றிய அறிவு சந்தேகத்திற்கு இடமுள்ளதாக இருக்கக்கூடாது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றி பூரண அறிவு உண்டாகவேண்டும். இதுவே மேன்மையான அறிவு. இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவே மெய்யான அறிவு.

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தில் தேவனுடைய தெய்வீக வெளிப்பாடு வெளிப்படுத்தப்படுகிறது. அவருடைய உபதேசத்தில் தெய்வீக ஞானம் வெளிப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் ஞானம் இயற்கையாக வந்த ஞானமல்ல. மனுஷருடைய எல்லா ஞானத்தையும்விட இயேசுகிறிஸ்துவின் ஞானம் மேன்மையானது.

பவுல் ஒரு யூதராகவும் பரிசேயராகவும் இருந்தார். யூதமார்க்கத்தில் ஒருவருக்கு இப்படிப்பட்ட தகுதிகள் இருப்பது மேன்மையாக எண்ணப்பட்டது. யூதர்கள் பரிசேயராகயிருப்பதை ஒரு சிலாக்கியமாகக் கருதினார்கள். அவர்கள் சதுசேயரை மதிக்கமாட்டார்கள். யூதர்கள் பொதுவாகவே புறஜாதியாரை சிறிதும் மதிப்பதில்லை. ஆனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மைக்காக, அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய யூதமார்க்கத்து சிலாக்கியங்கள் எல்லாவற்றையும், நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறார்.

தனக்கு எது லாபமாயிருந்ததோ, அதை பவுல் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணுகிறார். இது பற்றி தொடர்ந்து எழுதும்போது, "அது மாத்திரமல்ல" என்று சொல்லி மேலும் சில காரியங்களையும் எழுதுகிறார். அப்போஸ்தலர் பவுல் இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர்ச்சி பெற விரும்புகிறார். தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வெற்றி பெற விரும்புகிறார். இதற்காக அவர் ஒவ்வொரு காரியமாகச் செய்கிறார். கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணியது மாத்திரமல்ல, அவரை அறிகிற அறிவின் மேன்மைக்காகவும் எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணுகிறார்.

"எல்லாவற்றையும்" என்று சொல்லும்போது, அவையெல்லாம் என்ன என்று ஏற்கெனவே பவுல் சொல்லியிருக்கிறார் (பிலி 3:5,6). அவர் விருத்தசேதனம் பெற்றவர். இஸ்ரவேல் வம்சத்தைச் சேர்ந்தவர். பென்னியமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர். பவுல் எபிரெயரில் பிறந்த எபிரெயர். நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயர். நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றம் சாட்டப்படாதவர். இவையெல்லாம் யூதமார்க்கத்தாருக்கு லாபமாயிருக்கிறது. ஆனால் பவுலோ கிறிஸ்துவுக்காக இவையெல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணுகிறார்.

பவுல் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக, அவர் யூதமார்க்கத்தில் பக்தி வைராக்கியமாயிருந்தார். யூதமார்க்கத்தின் காரியங்களைக் குறித்த சிந்தனை அவருடைய இருதயத்தில் நிரம்பியிருந்தது. அவையெல்லாவற்றையும் பவுல் தனக்கு லாபம் என்று எண்ணியிருந்தார். இரட்சிக்கப்பட்ட பின்பும், பவுலுடைய இருதயத்தில் யூதமார்க்கத்து சிந்தனை நிரம்பியிருக்கிறது. ஆனால் அவையெல்லாம் இப்போது பவுலுக்கு லாபமாகயில்லை. அவையெல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறார்.

பவுல் இப்போது நஷ்டமென்று எண்ணுவதை, ஒரு காலத்தில் லாபம் என்று நினைத்து அவற்றிற்குக் கீழ்ப்படிந்தார். ஆனால் இப்போதோ அவற்றை நஷ்டமென்று விட்டுவிட்டார். வெறும் நஷ்டமாத்திரமல்ல, அவையெல்லாம் குப்பையென்று எண்ணுகிறார் (பிலி 3:11). அப்போஸ்தலர் பவுலுக்கு நியாயப்பிரமாணத்தின் உபதேசத்தைவிட, கிறிஸ்துவின் உபதேசமே இப்போது மேன்மையாக இருக்கிறது. நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை பவுல் வெறுக்கிறார். அதற்குப் பதிலாக விசுவாசத்தின் மூலமாக வருகிற தேவநீதியைப் பற்றிக்கொள்கிறார். சுயநீதி தனக்கு லாபமல்ல என்றும், அது தனக்கு ஒரு குப்பையைப் போன்றது என்றும் சொல்லுகிறார். பவுலுக்கு இயேசுகிறிஸ்துவே முக்கியமானவராக இருக்கிறார். கிறிஸ்துவுக்காக தான் எதையும் நஷ்டமென்று விடவும், அவருக்காக எதையும் லாபமென்று பற்றிக்கொள்ளவும் பவுல் ஆயத்தமாயிருக்கிறார்.

இலக்கை நோக்கி தொடருகிறேன்
பிலி 3 : 9-14

பிலி 3:9. நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்,

பிலி 3:10. இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற் கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்,

பிலி 3:11. அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்.

பிலி 3:12. நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப் பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்.

பிலி 3:13. சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி,

பிலி 3:14. கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.

அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு விரும்புகிறார். ஓட்டப்பந்தயத்தில் ஓடுகிறவர்கள் பந்தயப்பொருளை அடைவதற்காக ஓடுவார்கள். ஒரு கப்பலை ஓட்டுகிறவர் தான் சேரவேண்டிய துறைமுகத்தை நோக்கி கப்பலைச் செலுத்துவார். இவர்களைப்போலவே அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் விசுவாசத்தோடு ஓடுகிறார். தான் கிறிஸ்துவுக்குள் இருக்கிறவரென்று காணப்படவேண்டும். இதுவே பவுலின் விருப்பம். தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக நாம் வரும்போது நம்மிடத்தில் பரிசுத்தமும் நீதியும் காணப்படவேண்டும். பரிசுத்தமில்லாமல் தேவனை ஆராதிக்கிறது இயலாத காரியம்.

நியாயப்பிரமாணத்தினால் சுயநீதி உண்டாகும். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைச் செய்கிறவர்கள், தங்களுக்குத் தாங்களே நீதிமான்களாக இருப்பார்கள். இது சுயநீதி. அப்போஸ்தலர் பவுலுக்கு சுயநீதியில் விருப்பமில்லை. கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவநீதி நமக்குக் கிடைக்கிறது. நம்முடைய விசுவாசத்தின் மூலமாய், தேவனால் உண்டாயிருக்கிற நீதியை நாம் உடையவர்களாயிருக்க வேண்டும். பவுல் தேவநீதியை உடையவராயிருக்க வேண்டுமென்றே விரும்புகிறார். முன்னோர்களின் பாரம்பரியங்களை கடைப்பிடிப்பதினாலும், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைச் செய்வதினாலும் வருகிற சுயநீதியில் பவுலுக்கு விருப்பமில்லை. பவுல் எவ்வளவுதான் நற்கிரியைகளைச் செய்தாலும், அவை அவருடைய பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கு பெலனற்றவை.

இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவநீதி வருகிறது. இந்த நீதி நம்முடைய விசுவாசத்தின் மூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறது. அப்போஸ்தலர் பவுல் சுயநீதியைவிட, தேவநீதியை உடையவராயிருக்கவே விரும்புகிறார். தேவநீதி நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் உண்டாவதில்லை. இது சுவிசேஷத்தின் நீதி. இது தேவனுடைய நீதி. இந்த நீதி கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் உண்டாகிறது. தேவனே தம்முடைய நீதியை அபிஷேகம் பண்ணியிருக்கிறார். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவநீதி உண்டாகவேண்டுமென்று தேவன் நியமித்திருக்கிறார். நாம் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தின் மூலமாகவே இரட்சிக்கப்படுகிறோம். நம்மை மீட்பதற்காக இயேசுகிறிஸ்து தம்முடைய சுயஇரத்தத்தையே மீட்பின் கிரயமாகச் செலுத்தினார். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் நமக்கு இரட்சிப்பு உண்டாகாது. இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலேயே நமக்கு இரட்சிப்பு உண்டு. கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலேயே நமக்கு நீதி உண்டு.

அப்போஸ்தலர் பவுல் இயேசுகிறிஸ்துவையும், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அறிந்துகொள்ள விரும்புகிறார். மேலும் கிறிஸ்துவினுடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அவர் அறிந்துகொள்ள விரும்புகிறார். இயேசுகிறிஸ்துவை அறிந்துகொள்வது என்னும் வார்த்தைக்கு, இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது என்று பொருள். இயேசுகிறிஸ்து நல்லவர் என்பதை ருசிபார்ப்பது என்றும் இதற்கு பொருள் சொல்லலாம். கிறிஸ்துவைப்பற்றிய அறிவு என்பது, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், நடைமுறையில் நாம் அனுபவிக்கவேண்டிய அறிவு. இது படிப்பினால் உண்டாவதில்லை. இந்த அறிவு அனுபவத்தினால் உண்டாகிறது. அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் நீதிமானாக்கப் பட்டிருக்கிறார். இப்போது இயேசு கிறிஸ்துவினால், தான் பரிசுத்தப்பட வேண்டுமென்றும் விரும்புகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவினுடைய மரணத்திற்கு ஒப்பான மரணத்திற்கு உள்ளாகவேண்டும். நாம் பாவத்திற்கு மரிக்கவேண்டும். கிறிஸ்து பாவத்திற்கு மரித்தார். நாம் கிறிஸ்துவோடுகூட சிலுவையில் அறையப்படும்போது, இந்த உலகம் நமக்கு சிலுவையில் அறையப்பட்டிருக்கும். அதன் பிறகு நாம் இந்த உலகத்திற்குரியவர்களாக இருக்கமாட்டோம். இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரிக்கமாட்டோம். நாம் கிறிஸ்துவுக்குரியவர்களாகயிருப்போம்.

அப்போஸ்தலர் பவுல் பரலோகத்தை நோக்கிப் பார்த்து சந்தோஷப்படுகிறார். மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருப்பதற்கு தான் தகுதி பெறவேண்டுமென்று ஆசைப்படுகிறார். கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டுவிட்டார். நஷ்டம் மாத்திரமல்ல, அவையெல்லாவற்றையும் குப்பையுமாக எண்ணுகிறார். மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருக்கவேண்டும் என்பதும், அதற்கு தான் தகுதிபெறவேண்டும் என்பதுமே பவுலின் பிரதான நோக்கம்.

"பரலோகத்தின் சந்தோஷமே" இங்கு "மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலர் பவுல் இதன் மீது கண்ணோக்கமாயிருக்கிறார். இதைப்பெற்றுக் கொள்ளவேண்டுமென்று விரும்புகிறார். மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருக்க வேண்டுமென்று பிரயாசப்படுகிறார்.

மரித்தோர் எல்லோருமே உயிரோடெழும்புவார்கள். நல்லோரும் உயிர்த்தெழுவார்கள். தீயோரும் உயிர்த்தெழுவார்கள். துன்மார்க்கர் தங்கள் நித்திய ஆக்கினையை அடையும்படியாக உயிர்த்தெழுவார்கள். நாம் அவர்களுடைய ஆக்கினையில் பங்குபெறாதபடி மிகவும் கவனத்தோடிருக்க வேண்டும். மரண ஆக்கினைக்கு தப்பித்துக்கொள்ள வேண்டும். நீதிமான்களின் உயிர்த்தெழுதல் மகிமையுள்ளதாக இருக்கும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் பங்குபெறவேண்டும். பரிசுத்தவான்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்காக உயிர்த்தெழுவார்கள்.

பரிசுத்தவான்கள் உயிர்த்தெழும் போது நித்திய ஜீவனைப்பெற்றுக் கொள்கிறார்கள். ஆகையினால் இவர்களுடைய உயிர்த்தெழுதல்தான் மெய்யான உயிர்த்தெழுதல். துன்மார்க்கரோ கல்லறையிலிருந்து எழுப்பப்படுகிறார்கள். மறுபடியும் இரண்டாம் மரணத்திற்கு அனுப்பப்படுகிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலில் பங்குபெறவேண்டுமென்று விரும்புகிறார். அதற்கு தான் தகுதியாகும்படி ஆயத்தப்படுகிறார். பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகள் உயிர்த்தெழுவதற்கு தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களிடத்தில் பரிசுத்த குறைவு காணப்படுகிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்தில் பெருமை இருக்கக்கூடாது. "அடைந்தாயிற்று" அல்லது "முற்றும் தேறினவனானேன்" என்று ஒரு விசுவாசியும் எண்ணக்கூடாது. நம்மிடத்தில் பணிவும், பயபக்தியும் இருக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய சுயமுயற்சியினால் உயிர்த்தெழுதலில் பங்குபெற முடியாது என்பதை அறிந்திருக்கிறார். தன்னுடைய சுயநீதியில் பவுலுக்கு நம்பிக்கையில்லை. அவர் கிறிஸ்துவைப்பற்றும் நீதியை விசுவாசிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வரும் கிருபையைப் பெற்றுக்கொள்ள வாஞ்சையாயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால், தேவன் தன்னை நீதிமானாக்குவார் என்று விசுவாசிக்கிறார். அவர் தன்னைப்பற்றி நினைக்கும்போது, "அடைந்தாயிற்று அல்லது முற்றும் தேறினவனானேன்" என்று நினைப்பதில்லை.

இந்த உலகத்தில் நல்லோரும் இருக்கிறார்கள். தீயோரும் இருக்கிறார்கள். நல்லோர் மனத்தாழ்மையோடிருப்பார்கள். தீயோர் மனப்பெருமையோடிருப்பார்கள். நல்லோர் எவ்வளவுதான் வளர்ச்சி பெற்றிருந்தாலும், அவர்களிடத்தில் மனப்பெருமை இருக்காது. தங்களிடத்தில் இன்னும் குறைவுள்ளது என்று மனத்தாழ்மையோடு சொல்லுவார்கள். அப்போஸ்தலர் பவுல் தேவனுடைய அப்போஸ்தலர். கர்த்தருக்காக உண்மையாய் ஊழியம் செய்கிறவர். அப்பேர்பட்ட பரிசுத்தவான் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, தான் முற்றிலும் தேறவில்லையென்றும், தான் இன்னும் அடையவில்லையென்றும் சொல்லுகிறார். தன்னைத்தானே தாழ்த்துகிறார்.

பவுலின் இருதயத்தில் மனத்தாழ்மை இருக்கிறது. ஆகையினால், தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தைப்பற்றிச் சொல்லும்போது, "கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய் தொடருகிறேன்" (பிலி 3:12) என்று சொல்லுகிறார். கிறிஸ்துவை நாம் முதலில் பிடித்துக்கொள்ளவில்லை. கிறிஸ்துவே நம்மை முதலில் பிடித்தார். கிறிஸ்து நம்மைப் பிடிப்பதினால்தான், நாம் அவருடைய கரங்களில் பாதுகாப்பாக இருக்கிறோம். நம்மைக் கரம்பிடித்தவர், முடிவுபரியந்தம் நம்மை வழிநடத்த வல்லவராகயிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து நம்மைப் பிடித்திருப்பதே நம்முடைய சந்தோஷம், நம்முடைய இரட்சிப்பு. இயேசுகிறிஸ்து நம்மைப் பிடிக்கும்போதுதான் நமக்கு பாதுகாப்பு. நாம் அவரை பிடிப்போமென்றால், நம்முடைய பிடியை, நம்முடைய சுயஇஷ்டத்தின் பிரகாரம் தளரவிட்டுவிட்டு, இயேசுகிறிஸ்துவை விட்டு விலகிப்போய்விடுவோம். நமக்குப் பாதுகாப்பு இராது. கர்த்தர் நம்முடைய கரத்தைப் பற்றிக்கொண்டால் மாத்திரமே நமக்கு பாதுகாப்பு உண்டு.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மை இயேசுகிறிஸ்து ஒரு நோக்கத்திற்காகப் பிடித்திருக்கிறார். அந்த நோக்கத்தை நாமும் பிடித்துக் கொள்ளவேண்டும். அதற்காக ஆசையாய் கிறிஸ்துவைப் பின்தொடரவேண்டும். அப்போதுதான் நம்முடைய ஆசீர்வாதம் பூரணமாக இருக்கும். கிறிஸ்து அப்போஸ்தலர் பவுலை பிடித்துக் கொண்டார். அவர் எதற்காகப் பவுலைப் பிடித்துக்கொண்டாரோ, அதைத் தானும் பிடித்துக்கொள்ளும்படி பவுல் ஆசையாய்ப் பின்தொடருகிறார். பவுல் இன்னும் அதைப் பிடித்துக்கொள்ளவில்லை. பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய் அதைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார். இதற்காக அவர் பின்னானவைகளை மறந்துவிடுகிறார். முன்னானவைகளை நாடுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எல்லோருக்குமே தேவன் தம்முடைய கிருபையைக் கொடுத்திருக்கிறார். தேவகிருபையைப் பெற்றுக்கொண்ட நம்மிடத்தில் மனத்தாழ்மை இருக்க வேண்டும். தேவகிருபையை இன்னும் அதிகமாய்ப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்பவேண்டும். தங்களிடத்தில் தேவகிருபை பூரணமாயிருக்கிறது என்று நினைக்கிறவர்களுக்கு, தேவகிருபை கொஞ்சமும் இல்லை என்பதுதான் பொருள். ஏனெனில் எங்கெல்லாம் தேவகிருபை உண்மையிலேயே இருக்கிறதோ, அங்கெல்லாம் இன்னும் அதிகமான கிருபை வேண்டும் என்னும் விருப்பமும் இருக்கும்.

அப்போஸ்தலர் பவுல் தேவன் நியமித்துள்ள இலக்கை அடைவதற்காக, அவர் பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடுகிறார். தனக்கு முன்பு இன்னும் ஏராளமான கிருபைகள் இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, பவுல் அவற்றையே நாடுகிறார். பின்னானவைகளை மறந்துவிட்டு, முன்னானவைகளை நாடி, புதிய கிருபைகளைப் பெற்றுக்கொள்ள வாஞ்சையோடு வருகிறார்.

அப்போஸ்தலர் பவுலுக்கு தேவன் ஒரு இலக்கை நியமித்திருக்கிறார். கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரமஅழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கி தொடருகிறார். பரலோகத்தை நோக்கி ஓடுவதற்கு நமக்கு தகுதி உண்டாகும்போது, நம்முடைய ஓட்டம் விரைவாக இருக்கவேண்டும். ஓட்டப்பந்தயத்தில் பங்குபெற நாம் தகுதி பெற்றிருக்கிறோம். பந்தயத்தில் ஓடுகிறவர்கள் சுறுசுறுப்பாயும், உற்சாகமாயும், வேகமாயும் ஓடவேண்டும். இலக்கை நோக்கி ஓடவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்முடைய ஆவிக்குரிய ஓட்டத்தில், பரலோகமே தேவன் அழைத்த பரமஅழைப்பின் பந்தயப்பொருள். பரலோகத்தில் பிரவேசிக்கவேண்டும் என்பதே நம்முடைய இலக்கு. நம்முடைய முயற்சிகள், நம்முடைய செயல்கள் எல்லாமே பரலோகத்தை நாம் அடையவேண்டும் என்பதற்காகத்தான் இருக்கவேண்டும்.

இப்பிரபஞ்சத்தில் நமக்கு அநேக வேதனைகளும், பாடுகளும் இருக்கலாம். ஆனாலும் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், தேவன் நமக்கு நியமித்திருக்கிற இலக்கை நோக்கி ஓடவேண்டும். முடிவில் தேவன் வாக்குப்பண்ணியிருக்கிற பந்தயப்பொருள் நமக்குக் கொடுக்கப்படும். நம்முடைய வேதனைகளெல்லாம் நீங்கும். நமக்கு வெகுமதிகள் கிடைக்கும். நாம் தேவனுடைய கரத்திலிருந்து பந்தயப்பொருளைப் பெற்றுக்கொள்வோம். இதுவே நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் இலக்கு.

நம்முடைய பந்தயப்பொருள் இயேசுகிறிஸ்துவில் இருக்கிறது. அவருடைய கரத்தின் மூலமாகவே நமக்கு பந்தயப்பொருள் கொடுக்கப்படும். இயேசுகிறிஸ்துவே நமக்கு வழியாக இருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மூலமாக மாத்திரமே நம்மால் பரலோகத்திற்குள் பிரவேசிக்கமுடியும்.

தேறினவர்கள்
பிலி 3 : 15,16

பிலி 3:15. ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக் கடவோம்; எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார்.

பிலி 3:16. ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்து கொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய ஆவிக்குரிய ஓட்டத்தில் கிறிஸ்துவை நோக்கிப் பார்த்தே ஓடவேண்டும். பரமஅழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கி ஓடவேண்டும். பரலோகத்தில் பிரவேசிக்கவேண்டுமென்பதே நம்முடைய இலக்காக இருக்கவேண்டும். இப்பிரபஞ்சத்தின்மீது ஆசை வைக்காமல், பரலோகத்தையே நோக்கிப் பார்க்கவேண்டும். விசுவாசத்தில் தேறினவர்கள் எல்லோரும் இந்தச் சிந்தனையாகவே இருக்கவேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய ஓட்டத்தில் நாம் ஓரளவு கடந்து வந்திருப்போம். நம்முடைய ஜீவியத்தில் ஓரளவு தேறியிருப்போம். நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அது முதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருக்கவேண்டும். கிறிஸ்துவின் பிரமாணமே நம்மை ஆளுகை செய்யவேண்டும். கிறிஸ்து இயேசுவில் இருக்கிற சிந்தையே நம்முடைய இருதயத்தில் நிரம்பியிருக்கவேண்டும். கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நாம் ஓடவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு கிறிஸ்துவே எல்லாமாக இருப்பதினால், கிறிஸ்துவே நமக்கு ஜீவனாக இருக்கவேண்டும். விசுவாசிகள் சிலருக்கு கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஏதாவது சில காரியங்களில் விசுவாசிகள் வேறே சிந்தையாகயிருக்கலாம். வேறு சிந்தையுடையவர்கள் மற்றவர்களை நியாயந்தீர்க்கக்கூடாது. கிறிஸ்துவே நம்முடைய போதகராக இருக்கவேண்டும். நம்மிடத்தில் வேறே சிந்தையிருக்குமென்றால், தேவன் அதை நமக்கு வெளிப்படுத்தவேண்டுமென்று, அவரிடத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும். கிறிஸ்துவை நோக்கிப் பார்க்கும்போது, நம்மிடத்தில் காணப்படுகிற வேறுபாடான சிந்தனைகளையெல்லாம் நீக்கிப்போட்டு விட்டு, ஒரே சிந்தையாயிருக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு இப்பிரபஞ்சம் நித்திய வாசஸ்தலமல்ல. நாம் பரலோகத்திற்குரியவர்கள். நம்முடைய குடியிருப்பு பரலோகத்திலிருக்கிறது. வெகுசீக்கிரத்தில் நாம் பரலோகத்தில் பிரவேசிப்போமென்று நம்பிக்கையோடிருக்கிறோம். ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நமக்குள் காணப்படுகிற கருத்துவேறுபாடுகள், வேறே சிந்தனைகள், ஆகியவற்றையெல்லாம் நீக்கிப்போட்டு விட்டு, ஒரே சிந்தையாயிருக்கவேண்டும். கிறிஸ்துவும் பரலோகமுமே நம்முடைய இலக்கு. இந்த இலக்கைப்பற்றியே நாம் சிந்திக்கவேண்டும். நம்மிடத்தில் வேறே சிந்தையிருந்தால், தேவன் அதை நமக்கு வெளிப்படுத்துவார். நம்மிடத்தில் கருத்துவேறுபாடுகள் ஏதாவது காணப்படுமென்றால், கர்த்தர் அதை நமக்கு வெளிப்படுத்தவேண்டுமென்று விரும்பவேண்டும். சத்தியத்தின் இரகசியத்தை நாம் புரிந்துகொள்ள, கர்த்தர் நமக்கு உதவிபுரியுமாறு நாம் ஜெபிக்கவேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், தேவனைப்பற்றிய அறிவிலும், பரலோகத்திற்கு நேராகவும் ஓரளவு தேறியிருப்போம். நாம் தொடர்ந்து தேவனுடைய வழிகளில் முன்னேறிச் செல்லவேண்டும். நமக்குள் வேறே சிந்தை காணப்படுமென்றால், தேவனுடைய சமுகத்தில் அமர்ந்திருந்து, தேவனுடைய வெளிச்சத்தைப் பெற்றுக்கொண்டு, கர்த்தருடைய பாதையில் தொடர்ந்து முன்னேறவேண்டும்.

வேறு விதமாய் நடக்கிறார்கள்
பிலி 3 : 17-21

பிலி 3:17. சகோதரரே, நீங்கள் என்னோடே கூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்.

பிலி 3:18. ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன்.

பிலி 3:19. அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்.

பிலி 3:20. நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

பிலி 3:21. அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.

பிலிப்பி சபையார் மத்தியில் கள்ளப் போதகர்கள் துர்உபதேசம்பண்ணுகிறார்கள். அப்போஸ்தலர் பவுல் அவர்களைக் குறித்து இங்கு எச்சரித்துச் சொல்லுகிறார். "அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்கு பகைஞர்" என்று பவுல் அவர்களுக்கு அநேகந்தரம் சொல்லியிருக்கிறார். இப்பொழுது மறுபடியும் அதை கண்ணீரோடு சொல்லுகிறார்.

அநேகர் கிறிஸ்துவின் பெயரைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் அவர்களோ கிறிஸ்துவின் சிலுவைக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் சத்தியமில்லை. பரிசுத்தமில்லை. அவர்கள் கிறிஸ்துவின் வழியில் நடக்காமல், வேறுவிதமாய் நடக்கிறார்கள். அவர்களுக்கு தங்கள் சிலுவையை சுமக்க இஷ்டமில்லை. கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வர இஷ்டமில்லை. அவர்கள் வேறுவிதமாய் நடக்கிறார்களென்று பவுல் பிலிப்பியருக்கு அநேகந்தரம் சொல்லியிருக்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர் மூலமாய் நமக்கு பல சமயங்களில் எச்சரிப்பின் வார்த்தை வருகிறது. நாம் அவற்றை கருத்தாய்த் தியானித்து, எச்சரிப்பின் சத்தத்திற்குச் செவிகொடுக்கவேண்டும். நாம் தவறான பாதையில் சென்றுகொண்டிருந்தால், சரியான பாதைக்குத் திரும்பிவரவேண்டும். இல்லையென்றால் ஊழியக்காரர்கள் நமக்கு மறுபடியும் மறுபடியும் எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்லவேண்டியதுவரும். பவுல் பிலிப்பியருக்கு கள்ளப்போதகர்களைப் பற்றி அநேந்தரம் சொல்லியிருக்கிறார். அவர்கள் வேறுவிதமாய் நடக்கிறார்களென்றும், அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்கு பகைஞர் என்றும் அவர்களுக்கு அநேகந்தரம் சொல்லியிருக்கிறார். ஆனால் அவர்களோ பவுலின் வார்த்தைக்கு இன்னும் பூரணமாய்ச் செவிகொடுக்கவில்லை. தங்கள் மத்தியிலே கள்ளப்போதகர்களை வரவழைக்கிறார்கள். அவர்களுடைய கள்ளஉபதேசங்களைக் கேட்க பிரியப்படுகிறார்கள்.

பிலிப்பியர்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் ஆபத்தான நிலமையிலிருக்கிறார்கள். பவுல் அவர்களுக்கு கள்ளப்போதகர்களைப்பற்றி அநேகந்தரம் சொல்லி எச்சரித்தாலும், இப்போதும் அவர் சும்மா அமைதியாயிருக்கவில்லை. அவர்களுக்கு இப்பொழுது கண்ணீரோடு சொல்லுகிறார். நாம் விசுவாசிகளுக்கு சத்தியத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லவேண்டும். அவர்களுடைய ஆத்தும பாரத்தினிமித்தம், அன்போடும் கரிசனையோடும் அவர்களுக்கு சத்தியத்தை உபதேசம் பண்ணிக்கொண்டே இருக்கவேண்டும்.

கள்ளப்போதகர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்கு பகைஞராயிருக்கிறார்கள். அவர்களுடைய தேவன் வயிறு. மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்புகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ மாம்ச இச்சையை நிறைவேற்றாமல், கிறிஸ்துவின் சித்தத்திற்குக் கீழ்ப்படியவேண்டும்.

கள்ளப்போதகர்கள் தங்களுடைய மகிமையைத் தேடுகிறார்கள். இலச்சையே அவர்களுடைய மகிமை. அவர்களுக்கு இலச்சைக்கும் மகிமைக்கும் வித்தியாசமில்லை. அவர்கள் தங்களையே மேன்மையாய் நினைத்துக்கொள்கிறார்கள். கள்ளப்போதகர்களுக்கு யார் சத்தியத்தைச் சொன்னாலும் செவிகொடுத்து கேட்கமாட்டார்கள்.

கள்ளப் போதகர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. இப்பிரபஞ்சத்திற்கடுத்த காரியங்களைச் சிந்திக்கிறவர்கள், கிறிஸ்துவின் சிலுவைக்கு விரோதமாகச் சிந்திப்பார்கள். உலகத்திற்கு ஊழியம் செய்கிறவர்களால் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய முடியாது. இவர்களுடைய இருதயம் பூமிக்கடுத்த காரியங்களினால் நிரம்பியிருக்கும். பரலோகத்தைப்பற்றிய சிந்தனை இவர்களிடத்தில் சிறிதும் இருக்காது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இப்படிப்பட்ட கள்ளப்போதகர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும். பிலிப்பியர்கள் கள்ளப்போதகர்களைவிட்டு விலகி வரவேண்டும். கள்ளப்போதகர்களின் முடிவு அழிவு. பிலிப்பியர்கள் இவர்களை விட்டு விலகி வரவில்லையென்றால், இவர்களுடைய முடிவும் அழிவாகவே இருக்கும்.

கள்ளப்போதகர்கள் ஆரம்பத்தில் சந்தோஷமாகயிருப்பதுபோல தெரியும். அவர்களுடைய வழியும் ஆரம்பத்தில் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். ஆனால் அவர்களுடைய முடிவு அழிவு. அவர்களுடைய வழியைப் பின்பற்றினால் முடிவில் மரணமும் நரகமும் வரும். ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் கள்ளப்போதகர்களின் வழிகளைப் பின்பற்றக்கூடாது. அவர்கள் கிறிஸ்துவின் வழியில் நடக்காமல், வேறுவிதமாய் நடக்கிறார்கள்.

விசுவாசிகள் எந்தவிதமாய் நடக்கவேண்டும் என்றும் பவுல் ஆலோசனை சொல்லுகிறார். தன்னையும், தன்னுடைய உடன்ஊழியக்காரர்களையும் பிலிப்பி சபையாருக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறார். "சகோதரரே நீங்கள் என்னோடேகூட பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்" (பிலி 3:17) என்று பவுல் பிலிப்பியருக்கு எழுதுகிறார்.

தங்களை அவர்களுக்கு முன்மாதிரியாகச் சொல்லும்போது, கிறிஸ்துவையும், பரலோகத்தையும் அவர்களுக்கு விளக்கமாகச் சொல்லுகிறார். நம்முடைய குடியிருப்பு இந்தப் பூமியில் இல்லை. அது பரலோகத்திலிருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இப்பிரபஞ்சத்தில் வாசம்பண்ணினாலும், நம்முடைய நித்திய குடியிருப்பு இங்கில்லை. அது பரலோகத்தில் தான் இருக்கிறது. விசுவாசிகளின் ஜீவியம் பரலோகத்திலிருக்கிறது.

நம்முடைய குடியிருப்புக்கு சீக்கிரமாய்ப் போவோமென்று நாம் காத்துக் கொண்டிருக்கிறோம். இப்பிரபஞ்சத்தில் நாம் ஜீவிக்கிற வரையிலும், கர்த்தரை விசுவாசிக்கிற மற்ற விசுவாசிகளோடு ஐக்கியமாயிருக்க வேண்டும். அவர்களுடைய குடியிருப்பும் பரலோகத்தில்தான் இருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமெல்லோருமே பரலோகத்திற்குப் போகவேண்டியவர்கள். இப்பூமியில் நாமிருக்கும் காலம் வரையிலும், கிறிஸ்துவைப்பற்றியும், பரலோகத்தைப் பற்றியும் தியானித்து, ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொள்ள வேண்டும்.

பரலோகத்திலிருந்து நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வருவார். அவருடைய வருகைக்காக நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இயேசுகிறிஸ்து மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம்நாளில் உயிரோடு எழும்பினார். அதன்பின்பு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். பரலோகத்திற்கு ஏறிப்போனவர், அங்கிருந்து மறுபடியும் பூமிக்கு வருவார். இதை "இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை" என்று நாம் சொல்லுகிறோம்.

பிலிப்பியர் - விரிவுரை

PHILIPPIANS - COMMENTARY

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நமக்கு சந்தோஷமும், மகிமையும் உண்டாகும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது, அவர் நம்முடைய அற்பமான சரீரத்தை தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார் (பிலி 3:21). பரிசுத்தவான்களுக்கு மகிமை நியமிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய உயிர்த்தெழுதலின்போது அந்த மகிமை நமக்குக் கிடைக்கும்.

இப்பிரபஞ்சத்தில் நாம் ஜீவிக்கிற வரையிலும் நம்முடைய சரீரம் அற்பமான சரீரமாகவே இருக்கும். இந்தச் சரீரம் கிறிஸ்துவின் மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மாற்றப்படும். கிறிஸ்துவே நம்முடைய சரீரத்தை மறுரூபப்படுத்தி மகிமைப்படுத்துவார். அவர் எல்லாவற்றையும் தமக்கு கீழ்ப்படுத்துவார். நம்முடைய உயிர்த்தெழுதல் கிறிஸ்துவினுடைய வல்லமையான செயலின்படியே நடைபெறும். இயேசுகிறிஸ்துவின் வல்லமையைப்பற்றி ஏராளமான வேதவசனங்கள் உறுதிபண்ணுகின்றன. இயேசுகிறிஸ்துவின் வல்லமையை நாமும் அறிந்திருக்கிறோம். அவருடைய வல்லமை நம்முடைய ஜீவியத்திலும் கிரியை செய்கிறது. அதிலும் விசேஷமாக, தம்முடைய இரண்டாம் வருகையின்போது, கிறிஸ்துவானவர் தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தை, தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.

நம்முடைய சரீரம் மறுரூபமாகும் என்பது நமக்கு கிடைத்திருக்கிற ஆறுதல். நம்முடைய அற்பமான சரீரம் மகிமையான சரீரமாக மறுரூபமாகும் என்பதே கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற வாக்குத்தத்தம். நம்முடைய மறுரூபம் இயேசுகிறிஸ்துவின் வல்லமையான செயலின்படியே நடைபெறும். இயேசுகிறிஸ்துவின் வல்லமையான செயலில் நாம் நம்பிக்கை வைத்திருக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தேவனுடைய தெய்வீக வல்லமையினால் நடைபெற்றது. அதுபோலவே நம்முடைய உயிர்த்தெழுதலும் தேவனுடைய வல்லமையினால் நடைபெறும். இயேசுகிறிஸ்து எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்துவார். தம்முடைய சத்துருக்கள் எல்லோரையும் தம்முடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்துவார். தேவனுடைய ராஜ்யத்திற்கு விரோதமாக கிரியை செய்தவர்கள் எல்லோரையும் கிறிஸ்து இயேசு தமக்குக் கீழ்ப்படுத்துவார்.

4 அதிகாரம்

பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளுக்கு அப்போஸ்தலர் பவுல் அவர்களுடைய ஆவிக்குரிய கடமைகளைப்பற்றி விரிவாக எழுதுகிறார் (பிலி 4:1-9). பிலிப்பியர்கள் பவுல்மீது அன்பாயிருந்து அவருக்கு உபகாரம் செய்தார்கள். அவர்களுடைய உபகாரத்திற்கு பவுல் நன்றி சொல்லுகிறார் (பிலி 4:10-19). அப்போஸ்தலர் பவுல் இந்த நிருபத்தை துதியோடும், வாழ்த்துதலோடும், ஆசீர்வாதத்தோடும் நிறைவு செய்கிறார் (பிலி 4:20-23).

சந்தோஷமாயிருங்கள் பிலி 4 : 1-9

பிலி 4:1. ஆதலால், எனக்குப் பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே, எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரியமானவர்களே, இந்தப்படியே கர்த்தருக்குள் நிலைத்திருங்கள்.

பிலி 4:2. கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்தி சொல்லுகிறேன்.

பிலி 4:3. அன்றியும், என் உத்தமகூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் கிலேமெந்தோடும் மற்ற என் உடன் வேலையாட்களோடுங் கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடே கூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது.

பிலி 4:4. கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்.

பிலி 4:5. உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

பிலி 4:6. நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.

பிலி 4:7. அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்.

பிலி 4:8. கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.

பிலி 4:9. நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் நிலைத்திருக்கவேண்டும். விசுவாசத்தில் நிலைத்திருக்கவேண்டும். நம்முடைய குடியிருப்பு பரலோகத்திலிருக்கிறது. அங்கேயிருந்து நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து வருவதற்காக நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகையினால் நாம் கர்த்தருக்குள் நிலைத்திருக்கவேண்டும். நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வோம் என்னும் நம்பிக்கை நம்மிடத்தில் உள்ளது. அந்த ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்காக நம்முடைய விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவேண்டும். ஆவிக்குரிய ஜீவியத்தில் கவனமாயிருக்கவேண்டும். கர்த்தருக்குள் நிலைத்திருக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளைப்பற்றிச் சொல்லும்போது, "எனக்குப் பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே, எனக்கு சந்தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரியமானவர்களே" என்று அன்போடு அழைக்கிறார். மறுபடியும் மறுபடியும் அவர்களை "பிரியமானவர்களே" என்று கூப்பிடுகிறார். அவர்களைப்பற்றி நினைக்கும்போது அப்போஸ்தலர் பவுலின் இருதயத்தில் மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. பவுல் அவர்களை அதிகமாய் நேசிக்கிறார். அவர்களும் பவுலை அதிகமாய் நேசிக்கிறார்கள்.

ஆகையினால்தான் பவுல் அவர்களைப்பற்றிச் சொல்லும்போது, "எனக்கு பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே" என்றும், "பிரியமானவர்களே" என்றும் சொல்லுகிறார். நாம் ஒருவர்மீது சகோதர சிநேகத்தைக் காண்பிக்கும்போது, அவரோடு சகோதர உறவும் வைத்துக் கொள்ளவேண்டும். அப்போஸ்தலர் பவுல் பிலிப்பி சபையாரிடத்தில் சகோதர சிநேகம் வைத்திருக்கிறார். அவர்களை தன்னுடைய சொந்த சகோதரர்போல பாவிக்கிறார். அவர்கள்மீது பிரியமாயிருக்கிறார். அவர்களை மறுபடியும் பார்க்க வேண்டுமென்று வாஞ்சையோடிருக்கிறார்.

பவுல் அவர்களை நேசிக்கிறார். அவர்களுக்குள் சந்தோஷமாயிருக்கிறார். அவர்களே பவுலுக்கு சந்தோஷமாயிருக் கிறார்கள். அவர்களுடைய சிநேகத்தில் பவுல் மேன்மைப்படுகிறார். பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகள் பவுலுக்கு கிரீடமாக இருக்கிறார்கள். அவர்கள் பவுலுக்கு மிகவும் பிரியமானவர்களாயிருக்கிற படியினால், அவர்கள் கர்த்தருக்குள் நிலைத்திருக்குமாறு புத்தி சொல்லுகிறார்.

பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகள் கர்த்தருக்குள் இருக்கிறார்கள். கர்த்தருக்குள் இருக்கிறவர்கள் அவருக்குள் நிலைத்திருக்கவேண்டும். அவரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்க வேண்டும். முடிவுபரியந்தம் அவருக்குள் நிலைத்திருக்கவேண்டும். கர்த்தருக்குள் நிலைத்திருப்பது என்னும் வார்த்தைக்கு அவருடைய வல்லமையிலும், அவருடைய கிருபையிலும் நிலைத்திருப்பது என்று பொருள். கர்த்தருடைய கிருபையில் நிலைத்திருக்க வேண்டுமென்றால், நம்முடைய சுயபலத்தில் நாம் சார்ந்திருக்கக்கூடாது.

விசுவாசிகள் கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்கவேண்டும். ஒருவர்மீது ஒருவர் அன்புகூரவேண்டும். ஒருவருக்கொருவர் உதவிபுரியவேண்டும். பிலிப்பியருக்கு நிருபம் எழுதும்போது, "கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும், சிந்திகேயாளுக்கும் புத்திசொல்லுகிறேன்" (பிலி 4:2) என்று சொல்லுகிறார். பவுல் பிலிப்பியருக்கு பொதுவாக நிருபம் எழுதும்போது, இவ்விரண்டு நபர்களை விசேஷமாகக் குறிப்பிட்டுச் சொல்லுகிறார். சில சமயங்களில் நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது, ஜனங்களுக்குப் பொதுவாகவும் பிரசங்கிக்கவேண்டும். சில சமயங்களில் ஒரு சிலருக்கு விசேஷமாகவும் பிரசங்கிக்கவேண்டும். ஒரு சிலருடைய குறிப்பிட்ட தேவைகளுக்கு உதவிபுரியும் விதத்திலும் பேசவேண்டும்.

எயோதியாளுக்கும் சிந்தி கேயாளுக்கும் ஏதோ ஒரு கருத்து வேறுபாடு உண்டாயிருக்கிறது. அவர்கள் தங்களுக்குள் பிரிந்திருக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் சபையிலிருந்து பிரிந்துபோயிருக்கலாம். சபை விசுவாசிகளோடு கருத்து வேறுபாடோடிருக்கலாம். அல்லது அவர்கள் இருவருக்கும் நடுவிலே ஒற்றுமையில்லாமல் கருத்து வேறுபாடு உண்டாயிருக்கலாம். அவர்கள் இருவரும் கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க வேண்டுமென்று பவுல் அவர்களுக்குப் புத்தி சொல்லுகிறார். அவர்கள் சமாதானத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கவேண்டும். அன்பை வெளிப்படுத்தவேண்டும். சபையிலுள்ள மற்ற விசுவாசிகளோடு ஒரே சிந்தையாயிருக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் எயோதியாளையும், சிந்திகேயாளையும் சொல்லிவிட்டு, மேலும் சில தனிப்பட்ட நபர்களையும் இங்கு சொல்லுகிறார். கர்த்தருடைய பிள்ளைகள் ஒருவருக்கொருவர் உதவியாயிருக்க வேண்டும் என்பதே பவுலின் உபதேசம். அப்போஸ்தலர் பவுலுக்கு ஒரு சிலர் உடன்வேலையாட்களாக இருக்கிறார்கள். சுவிசேஷ ஊழியத்தில் ஒரு சிலர் பவுலுக்கும் அவருடைய உடன் ஊழியருக்கும் உதவி செய்திருக்கிறார்கள். அப்போஸ்தலருடைய உடன்வேலையாட்கள் யார் என்பது இங்கு தெளிவாகச் சொல்லப்படவில்லை.

அப்போஸ்தலர் பவுலோடு, சுவிசேஷ ஊழியத்தில், ஒரு சில ஸ்திரீகளும் பிரயாசப்பட்டு ஊழியம் செய்திருக்கிறார்கள். அக்காலத்திலேயே சுவிசேஷ ஊழியத்தில் ஸ்திரீகள் அதிக ஈடுபாடு காண்பித்திருக்கிறார்கள். ஊழியக் காரர்களுக்கு உதவி செய்திருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு உதவியாயிருக்கும்படி பவுல் பிலிப்பி சபையாரிடம் கேட்டுக் கொள்கிறார். ஊழியக்காரர்களுக்கு உதவி செய்கிறவர்களுக்கு நாமும் உதவி செய்யவேண்டும். கிலேமெந்தும், மற்றும் பவுலுடைய உடன்வேலையாட்களும் சுவிசேஷ ஊழியத்தில் பவுலோடுகூட பிரயாசப்பட்டு ஊழியம் செய்திருக்கிறார்கள்.

பவுல் தன் உடன்வேலையாட்கள்மீது மிகவும் அன்பாயிருக்கிறார். அவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்திலிருக்கிறது வேதாகமத்தில் ஜீவபுஸ்தகத்தைப்பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகத்தில் நம்முடைய சுபாவங்கள், ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நிபந்தனைகள் ஆகியவையெல்லாம் எழுதப் பட்டிருக்கும். இவை மாத்திரமல்ல இவற்றில் நம்முடைய பெயர்களும் எழுதப்பட்டிருக்கும்.

நம்முடைய சுயமுயற்சியினாலோ, சொந்த புத்தியினாலோ ஜீவபுஸ்தகத்தை ஆராய்ச்சி பண்ணமுடியாது. யாருடைய பெயரெல்லாம் அந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்று நம்மால் அறிந்துகொள்ளவும் முடியாது. அப்போஸ்தலர் பவுல் இங்கு ஒரு காரியத்தை நிச்சயப்படுத்தி சொல்லுகிறார். சுவிசேஷ ஊழியத்தில் யாரெல்லாம் பிரயாசப்பட்டார்களோ, அவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்திலிருக்கிறது (பிலி 4:3) என்று தெளிவாகச் சொல்லுகிறார்.

"கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷ மாயிருங்கள் சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்" (பிலி 4:4). நம்முடைய சந்தோஷம் எல்லாமே இயேசுகிறிஸ்துவில் ஆரம்பமாகிறது. இயேசுகிறிஸ்துவிலேயே நிறைவுபெறுகிறது. தேவனைப்பற்றிய நம்முடைய சிந்தையெல்லாம் நமக்கு சந்தோஷத்தைத் தரவேண்டும். கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பது நம்முடைய கடமை. இது தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற சிலாக்கியம். நாம் கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கவேண்டும். எல்லா வேளைகளிலும், எல்லா சூழ்நிலைகளிலும், நாம் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்க வேண்டும்.

நாம் இந்தப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கும் போது நமக்கு பலவிதமான பாடுகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் ஏற்படலாம். இவையெல்லாவற்றிற்கும் மத்தியில், சந்தோஷமாயிருப்பதற்கு, தேவனிடத்தில் நமக்கு கிருபை உள்ளது. நம்முடைய சந்தோஷத்திற்கு கர்த்தர் போதுமானவராகயிருக்கிறார். நாம் எந்தச் சூழ்நிலையிலிருந்தாலும், கர்த்தரைப்பற்றிய சிந்தனை நமக்கு சந்தோஷத்தைத் தரவேண்டும். ஆகையினால்தான் பவுல் பிலிப்பியருக்கு "கர்த்தருக்குள் எப்போதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷ மாயிருங்களென்று மறுபடியும் சொல்லுகிறேன்" என்று எழுதுகிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அவருடைய பந்தியில் சந்தோஷமாயிருக்க வேண்டும். நம்மிடத்தில் சந்தோஷம் இல்லையென்றால் அது கர்த்தர் செய்கிற தவறு அல்ல. அது நம்முடைய சொந்த தவறுதான்.

நம்முடைய சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருக்கவேண்டும். மற்ற சகோதரரிடத்தில் நாம் சாந்தகுணத்தோடு பழகவேண்டும். மற்ற விசுவாசிகளிடத்தில் நமக்கு கருத்து வேறுபாடு ஏற்படலாம். உடனே கோபப்பட்டு அவர்களோடு சண்டை போட்டுவிடக்கூடாது. ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கவேண்டும். பொறுமையைக் காத்துக்கொள்ளவேண்டும். நம்மிடத்தில் சாந்தகுணம் நிரம்பியிருக்கவேண்டும். நாம் சாந்தகுணத்தையே மற்ற சகோதரரிடத்தில் வெளிப்படுத்தவேண்டும். நம்மிடத்தில் கோபகுணம் இருக்குமென்றால், அதை கர்த்தருடைய சமுகத்தில் அறிக்கை செய்து, கோபகுணத்தை நம்மைவிட்டு நீக்கிப்போடவேண்டும்.

"சாந்தகுணம்" என்னும் வார்த்தைக்கு "பாடுகளை பொறுமையோடு சகித்துக்கொள்வது" என்று வேதபண்டிதர்களில் சிலர் பொருள் சொல்லுகிறார்கள். சாந்தகுணமுள்ளவர்கள் உலகப்பிரகாரமான காரியங்களில் பேராசை காண்பிக்கமாட்டார்கள். அப்போதும் சாந்தமாகவே இருப்பார்கள். உலக நன்மைகளை அனுபவிப்பதற்கு வேகம் காண்பிக்காமல், பொறுமை காண்பிப்பார்கள். நம்முடைய சத்துருக்களை கர்த்தர் பழிவாங்குவார். பழிவாங்குவது நமக்குரியதல்ல. அது கர்த்தருக்குரியது. நாம் மற்ற சகோதரரிடத்தில் நீடிய பொறுமையோடும், சாந்தகுணத்தோடும் பழகும்போது கர்த்தர் நம்முடைய பொறுமைக்கு வெகுமதி கொடுப்பார்.

ஒரு சிலர் எல்லா காரியங்களுக்கும் கவலைப்படுவார்கள். அவர்களிடத்தில் சந்தோஷம் சிறிதும் இருக்காது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஒன்றுக்கும் கவலைப்படக்கூடாது. என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ என்று பரிதபிக்கக்கூடாது. பொறுமை இழந்து பரபரப்பாக இருக்கக்கூடாது. நமக்கு வேதனைகளும், பிரச்சனைகளும், கஷ்டங்களும் வரும்போது சோர்ந்துபோய்விடக்கூடாது. கவலையில் மூழ்கிப்போய்விடக்கூடாது. நாம் கர்த்தருக்குள் நிலைத்திருக்கவேண்டும். விசுவாசத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். நம்மிடத்திலுள்ள விசுவாசம் உறுதியாயிருக்கவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அவரை நம்பாமலிருப்பது நமக்கு பாவமாகயிருக்கும்.

நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து நம்முடைய விண்ணப்பங்களை தேவனுக்குத் தெரியப்படுத்தவேண்டும். நம்முடைய விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்தவேண்டும். நம்முடைய வாழ்க்கையில் எப்படிப்பட்ட சூழ்நிலை வந்தாலும், எவ்வளவு கஷ்டம் வந்தாலும் நாம் எப்போதும் ஜெபம்பண்ண வேண்டும். எல்லாவற்றையுங்குறித்து ஜெபம்பண்ணவேண்டும்.

நம்முடைய ஆவியை ஏதாவது சில காரியங்கள் வேதனைப்படுத்தினால், அந்த வேதனைகளை தேவனுடைய சமுகத்தில் இறக்கி வைத்துவிடவேண்டும். ஜெபத்தின் மூலமாய் மனதிற்கு ஆறுதல் பெறவேண்டும். நம்முடைய சிந்தையில் குழப்பமும், போராட்டமும் உண்டாகும்போது, ஜெபத்தின் மூலமாய் தேவனுடைய வழிநடத்துதலை நாடவேண்டும். அவருடைய ஆறுதலையும் தேறுதலையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

தேவனுடைய சமுகத்தில் நாம் ஜெபம்பண்ணும்போது, நம்முடைய விண்ணப்பங்களை ஸ்தோத்திரங்களோடு ஏறெடுக்கவேண்டும். தேவன் நம்முடைய தேவைகளைச் சந்திக்கவேண்டுமென்று ஜெபத்தில் கேட்டால் மாத்திரம் போதாது. அவரைத் துதிக்கவும் வேண்டும். நம்முடைய விண்ணப்பங்களை தேவனுக்குத் தெரியப்படுத்தவேண்டும். அதே சமயத்தில் தேவனுடைய இரக்கங்களுக்காகவும் கிருபைகளுக்காகவும் அவருக்கு நாம் ஸ்தோத்திரம் செலுத்தவும் வேண்டும்.

தேவனிடத்தில் நம்முடைய வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையும் தெரியப்படுத்துவதுதான் ஜெபம். அப்போஸ்தலர் பவுலும் "உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலி 4:6) என்று சொல்லுகிறார். நாம் தெரியப்படுத்தினால்தான் தேவனுக்கு நம்முடைய வேண்டுதல்களும் விண்ணப்பங்களும் தெரியும் என்பதற்காக நாம் தேவனுக்கு தெரிவிக்க வேண்டியதில்லை. ஏனெனில் அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறவர். சர்வஞானமுள்ளவர். நாம் அவருடைய சமுகத்தில் வேண்டிக் கொள்வதற்கு முன்பாகவே, நம்முடைய தேவைகள் என்ன என்பதை, அவர் அறிந்திருக்கிறார். ஆனாலும் நம்முடைய தேவைகளைப்பற்றி நாம் அவருக்குத் தெரியப்படுத்தவேண்டுமென்று தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். இதனால் தேவனுடைய சமாதானம் நம்முடைய இருதயங்களைக் காத்துக்கொள்ளும்.

தேவனுடைய சமாதானம் எல்லா புத்திக்கும் மேலானது. நாம் கர்த்தருடைய சமுகத்தில் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து, நம்முடைய விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்தும்போது, எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் நம்முடைய இருதயங்களையும், நம்முடைய சிந்தைகளையும், கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும் (பிலி 4:7). தேவனுடைய சமாதானத்தை நம்முடைய சுயபுத்தியினால் விவரிக்க முடியாது. அதை விவரிப்பதற்கு நம்முடைய வார்த்தைகள் போதாது. அது எல்லா புத்திக்கும் மேலானது. அப்படிப்பட்ட தேவசமாதானம் நம்முடைய இருதயங்களையும், நம்முடைய சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ளும்.

நம்முடைய இருதயத்தில் தேவசமாதானம் நிரம்பியிருக்கும். கவலை நம்மைவிட்டு நீங்கிப்போகும். நமக்கு எவ்வளவு துன்பங்களும், வேதனைகளும் வந்தாலும், நம்முடைய இருதயத்தில் தேவசமாதானம் நிரம்பியிருக்கும். நாம் எதற்கும் கவலைப்படமாட்டோம். சமாதானமாகயிருப்போம். பாவம் செய்வதிலிருந்து தேவசமாதானம் நம்மை விலக்கிக் காக்கும். கவலையில் நாம் மூழ்கிப்போய்விடாதவாறு தேவசமாதானம் நம்முடைய இருதயங்களையும், சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இந்தப் பிரபஞ்சத்தில், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சியாய் ஜீவிக்கவேண்டும். நமக்கு சமுதாயத்தில் நல்ல பெயர் இருக்கவேண்டும். நம்முடைய நற்பெயரை நாம் காத்துக்கொள்ளவேண்டும்நம்முடைய ஜீவியத்தில் உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருக்க வேண்டும். நம்முடைய நடத்தையில் உண்மையும் ஒழுக்கமும் இருக்கவேண்டும். உண்மைக்கும் ஒழுக்கத்திற்கும் நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருக்கவேண்டும். பாவமான சிந்தனை நமக்குள் காணப்படக்கூடாது. அசுத்தமான சிந்தனைகள் நம்மிடத்தில் இருக்கக்கூடாது. அநீதியான காரியங்களைச் சிந்திக்கக்கூடாது. அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருக்கவேண்டும். இதனால் நமக்கும் பிறரிடத்தில் அன்பு உண்டாகும். பிறரும் நம்மிடத்தில் அன்புகூருவார்கள். நாம் பிறரிடத்தில் அன்புகூரும்போது உலகத்தார் நம்மை அன்புள்ளவர்கள் என்று சொல்லுவார்கள். நாம் நற்காரியங்களைச் செய்யும்போது அவர்கள் நம்மை நற்கீர்த்தியுள்ளவர்கள் என்று போற்றிப்புகழுவார்கள்.

நம்முடைய இருதயங்களில் புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருக்க வேண்டும். நாம் இப்பிரபஞ்சத்தில் புறஜாதியார் மத்தியில் வாசம் பண்ணுகிறோம். அவர்களுக்கு நம்மால் ஏதாவது நன்மை செய்ய முடிந்தால், அவற்றை உடனே செய்வதற்கு நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும். நன்மையான காரியங்களைச் சிந்தித்து, பிறருக்கு நன்மை செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும். சில சமயங்களில் உலகப் பிரகாரமான புறஜாதி ஜனங்கள் பிறருக்கு நன்மை செய்வார்கள். அவர்களிடத்திலும் நற்குணம் காணப்படும். இப்படிப்பட்ட விஷயங்களில், கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், புறஜாதி ஜனத்தாரிடமிருந்து, நன்மை செய்வதைக் கற்றுக்கொள்வதில் தவறு எதுவுமில்லை.

அப்போஸ்தலர் பவுல் பிலிப்பியருக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சொல்லுகிறார். அவர்கள் எதைச் சிந்திக்கவேண்டுமென்றும், எதைச் செய்யவேண்டுமென்றும் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். "நீங்கள் என்னிடத்தில் கற்றும், அடைந்தும், கேட்டும், கண்டும், இருக்கிறவைகளெவைகளோ அவைகளையே செய்யுங்கள்" (பிலி 4:9) என்று புத்தி சொல்லுகிறார். அப்போஸ்தலர் பவுலின் உபதேசமும், செய்கையும் ஒன்று போலிருக்கிறது. தான் சொல்வதையே செய்கிறார். தான் செய்வதையே சொல்கிறார். தன்னை அவர்களுக்கு ஒரு முன்மாதிரியாகக் காண்பிக்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம் மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிறோம். நம்முடைய ஜீவியம் நம்முடைய பிரசங்கத்திற்கு ஏற்றதாக இருக்கவேண்டும். மற்றவர்களுக்கு முன்மாதிரியாக ஜீவிக்கவேண்டும். அப்போதுதான் மற்றவர்கள் நம்மைப் பார்த்து தேவனைத் துதிப்பார்கள். நம்முடைய உபதேசத்தைப் புரிந்துகொள்வார்கள். நம்முடைய வார்த்தைகளை அங்கீகரிப்பார்கள். நம்முடைய புத்திமதிகளுக்குக் கீழ்ப்படிவார்கள். நம்முடைய உபதேசமும் ஜீவியமும் வித்தியாசமாயிருக்கும்போது, நம்மை மாயக்காரர்களென்று தூஷிப்பார்கள். ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நம்முடைய பேச்சிலும், செயலிலும் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும்.

தாழ்ந்திருக்கவும், வாழ்ந்திருக்கவும்
பிலி 4 : 10-19

பிலி 4:10. என்னை விசாரிப்பதற்கு நீங்கள் இப்பொழுது மறுபடியும் மனமலர்ந்தபடியினாலே கர்த்தருக்குள் மிகவும் சந்தோஷப்பட்டேன்; இப்படிச் செய்ய எண்ணங்கொண்டிருந்தீர்கள், சமயம்மாத்திரம் உங்களுக்கு நேரிடவில்லை.

பிலி 4:11. என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்.

பிலி 4:12. தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்.

பிலி 4:13. என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு.

பிலி 4:14. ஆகிலும் நீங்கள் என் உபத்திரவத்தில் என்னோடே உடன்பட்டது நலமாயிருக்கிறது.

பிலி 4:15. மேலும், பிலிப்பியரே, சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே நான் மக்கதோனியாவிலிருந்து புறப்பட்டபோது, கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள் மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

பிலி 4:16. நான் தெசலோனிக்கேயிலிருந்த போதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள்.

பிலி 4:17. உபகாரத்தை நான் நாடாமல், உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன்.

பிலி 4:18. எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது; உங்களால் அனுப்பப் பட்டவைகளைச் சுகந்தவாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப்பிரோதீத்துவின் கையில் வரப்பற்றிக்கொண்டபடியால் நான் திருப்தியடைந்திருக்கிறேன்.

பிலி 4:19. என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாங் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.

பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகள் பவுலை அன்பாய் விசாரித்திருக்கிறார்கள். அவருக்குச் சில நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய உதவியை பவுல் அங்கீகரித்து எழுதுகிறார். சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே பவுல் மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்டபோது, கொடுக்கல் வாங்கல் காரியத்தில் பிலிப்பியர் மாத்திரமே பவுலுக்கு உடன்பட்டார்கள். வேறொரு சபையும் உடன்படவில்லை. பவுல் தெசலோனிக்கேயிலிருந்த போதும், அவருடைய குறைச்சலை நீக்கும்படி இரண்டொருதரம் உதவி அனுப்பினார்கள் (பிலி 4:15,16). பவுல் அவர்கள் செய்த உதவியை நன்றியுள்ள இருதயத்தோடு அங்கீகரிக்கிறார்.

பிலிப்பியருக்கு எழுதின நிருபம் எங்கெல்லாம் வாசிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் பிலிப்பியர் பவுலுக்குச்செய்த உபகாரமும் நினைவுகூரப்படும். கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்காக நாம் செய்கிற எல்லா உதவிகளையும் கர்த்தர் நிச்சயமாகவே நினைவில் வைத்திருப்பார். அதற்கேற்ற பிரதிபலனைக் கொடுப்பார். பவுல் பிலிப்பியரோடு இருந்த போதும், மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்டபோதும் அவர்கள் பவுலுக்கு உதவிசெய்திருக்கிறார்கள். பிலிப்பியர் மாத்திரமே உதாரத்துவ குணத்தோடு பவுலுக்கு உதவி செய்கிறார்கள். வேறு எந்த சபையும் பிலிப்பியரைப்போல பவுலுக்கு உதவி செய்யவில்லை.

பவுல் தெசலோனிக்கேயிலிருந்தபோது அவருக்குச் சில காரியங்களில் குறைச்சலுண்டாயிற்று. அவருக்கு சில தேவைகள் இருந்தது. பவுலின் குறைச்சலை நீக்குவதற்காக பிலிப்பியர் அவருக்கு இரண்டு தரம் உபகாரங்களை அனுப்பினார்கள். ஒரு தரம் உதவிசெய்துவிட்டு மறுபடியும் உதவிசெய்தார்கள். ஒரு சிலர் ஒரு தரம் உதவி செய்தால், மறுபடியும் உதவி செய்யமாட்டார்கள். உதவி செய்யாமலிருப்பதற்கு ஏதாவது சாக்குப்போக்குகளைக் கண்டுபிடித்துச் சொல்லுவார்கள். ஒரே நபருக்கு திரும்பத் திரும்ப ஏன் உதவிசெய்யவேண்டுமென்று கேள்வி கேட்பார்கள். ஆனால் பிலிப்பியரோ அப்படியெல்லாம் கேள்வி கேட்காமல், பவுலின் குறைச்சலை நீக்கும்படி இரண்டொருதரம் உபகாரம் அனுப்பினார்கள்.

பிலிப்பியர்கள் பவுலுக்கு மறுபடியும் உதவி செய்ய விரும்புகிறார்கள். தன்னை விசாரிப்பதற்கு பிலிப்பியர்கள் இப்பொழுது மறுபடியும் மனமலர்ந்தபடியினாலே, பவுல் கர்த்தருக்குள் மிகவும் சந்தோஷப்படுகிறார். அவர்கள் பவுலுக்கு உதவிசெய்ய எண்ணங்கொண்டிருந்தார்கள். ஆனாலும் அந்த உதவியைச் செய்வதற்கு அவர்களுக்கு சமயம் நேரிடவில்லை. பவுல் அதைப் பொறுத்துக்கொள்கிறார். அவர்களுடைய இருதயத்தின் உண்மையான எண்ணம் பவுலுக்குத் தெரியும். அவர்களுக்கு சமயம் நேரிட்டிருந்தால், அவர்கள் நிச்சயமாகவே பவுலுக்கு உதவி செய்திருப்பார்கள். பவுலை மறுபடியும் விசாரித்திருப்பார்கள்.

பிலிப்பியர்கள் பவுலின் உபத்திரவத்தில் அவரோடுகூட உடன்படுகிறார்கள். இது பவுலுக்கு நலமாயிருக்கிறது (பிலி 4:14) அவர்கள் பவுல்மீது இரக்கம் காண்பிக்கிறார்கள். நம்முடைய சிநேகிதர்களுக்கு பிரச்சனை இருக்கும்போது நாம் அவர்களுக்காக பரிதாபப்பட்டால் மாத்திரம்போதாது. நம்மால் செய்ய முடிகிற உதவிகளை நாம் அவர்களுக்குச் செய்யவேண்டும். அவர்களுடைய உபத்திரவங்களில் நாமும் அவர்களோடு உடன்படவேண்டும். பிலிப்பியர்கள் பவுலை விசாரிப்பதற்கு இப்பொழுது மறுபடியும் மனமலர்ந்திருக்கிறார்கள். பவுல் அதை நினைவுகூர்ந்து கர்த்தருக்குள் மிகவும் சந்தோஷப்படுகிறார் (பிலி 4:10).

அவர்கள் பசுமையான மரத்தைப்போன்றவர்கள். ருகாடை காலத்தில் மரம் பட்டுப்போகும். இலைகள் உதிர்ந்துவிடும். அதற்கு ஜீவன் இல்லாததுபோன்று தெரியும். ஆனாலும் வசந்தகாலம் வரும்போது அந்த மரம் மறுபடியும் துளிர்க்கும். அது போலவே பிலிப்பியர்கள் சமயம் வாய்க்கும் போது, பவுலுக்கு உதவிசெய்ய ஆயத்த மாயிருக்கிறார்கள். அவர்கள் பவுலுக்கு உதவிசெய்ய ஆயத்தமாயிருப்பது, அவர்கள் பவுல்மீது வைத்திருக்கும் அன்புக்கு அத்தாட்சியாயிருக்கிறது. பிலிப்பியர் மத்தியில் பவுல் உண்மையோடு ஊழியம் செய்திருக்கிறார் என்பதற்கு அவர்களுடைய அன்பு அத்தாட்சியாயிருக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் பிலிப்பியருக்கு இந்த நிருபத்தை எழுதியபோது, அவர் ரோமாபுரியிலுள்ள சிறைச்சாலையில் கட்டப்பட்டிருக்கிறார். அவருக்கு இப்போது ஒரு குறைச்சலும் உண்டாகவில்லை. தனக்கு குறைச்சல் உண்டானதினால், தன்னுடைய குறைச்சலை நீக்கும்படி பவுல் பிலிப்பியரிடம் கேட்டுக்கொள்ளவில்லை. தன் குறைச்சலினால் அவர் இப்படி சொல்லுகிறதில்லை. பவுலுக்கு வேறு குழப்பமோ, பயமோ இல்லை. இதற்கு முன்பு அவர் குறைச்சலிலும் சந்தோஷமாயிருந்தார்.

தேவனுடைய பராமரிப்பையே பவுல் சார்ந்திருக்கிறார். அன்றன்று தனக்குத் தேவையான ஆகாரத்தை கர்த்தர் தருவார் என்றும், தன்னைப் போஷிப்பார் என்றும், தன்னைப் பராமரிப்பார் என்றும், தன்னை ஆதரிப்பார் என்றும் பவுல் கர்த்தர்மீது நம்பிக்கையாயிருக்கிறார். கர்த்தருடைய பராமரிப்பில் அவர் திருப்தியாயிருக்கிறார். எந்த நிலமையிலிருந்தாலும் பவுல் மனரம்மியமாயிருக்க கற்றுக்கொண்டிருக்கிறார் (பிலி 4:11).

அப்போஸ்தலர் பவுலுக்கு ஊழியத்தில் ஏராளமான பிரச்சனைகள் உண்டாயிற்று. பாடுகளும் வேதனைகளும் உண்டாயிற்று. உபத்திரவங்கள் உண்டாயிற்று. இவையெல்லாவற்றிற்கும் மத்தியில் பவுல் கர்த்தருக்காக உண்மையான மனதோடு ஊழியம் செய்கிறார். எல்லா சூழ்நிலையிலும் அவர் கர்த்தருடைய நாமத்தை மேன்மைப்படுத்துகிறார். தன்னுடைய ஊழியத்தை அவர் முதலாவது கற்றுக்கொண்டது, எந்த நிலமையிலிருந்தாலும் மனரம்மியமாக இருக்கவேண்டும் என்பதைத்தான்.

பவுலுக்கு தாழ்ந்திருக்கவும் தெரியும். வாழ்ந்திருக்கவும் தெரியும். இது ஒரு விசேஷித்த கிருபை. நம்முடைய வாழ்க்கையில் எப்படிப்பட்ட நிலமை வந்தாலும், எல்லா நிலமையையும் நம்மால் அநுசரிக்கத் தெரியவேண்டும். எல்லா சூழ்நிலையிலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். நமக்கு துன்பங்களும், பாடுகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் வரும்போது, அவற்றை எவ்வாறு தாங்கிக்கொள்வது என்றும், எவ்வாறு சகித்துக்கொள்வது என்றும் நமக்குத் தெரிந்திருக்கவேண்டும்.

சில சமயங்களில் நமக்கு உபத்திரவங்கள் வருவதற்குப் பதிலாக சம்பூரண ஆசீர்வாதங்கள் வரும். குறைச்சலுக்குப் பதிலாக நிறைவு வரும். தரித்திரத்திற்குப் பதிலாக ஐசுவரியம் வரும். வியாதிக்குப் பதிலாக ஆரோக்கியம் வரும். சாபத்திற்குப் பதிலாக ஆசீர்வாதம் வரும். இப்படிப்பட்ட ஆசீர்வாதமான சூழ்நிலையிலும், நாம் கர்த்தருக்குப் பிரியமான பிள்ளைகளாக ஜீவிக்கவேண்டும். அவருக்கு உண்மையுள்ளவர்களாக ஜீவித்து, நம்முடைய சாட்சியைக் காத்துக்கொள்ள வேண்டும்.

திரளான ஆசீர்வாதம் இருப்பதினால் இருதயத்தில் பெருமை வந்துவிடக்கூடாது. ஐசுவரியமே நமக்கு பாதுகாப்பு என்று நினைத்து ஐசுவரியத்தை நம்பக்கூடாது. கர்த்தரையே நம்பி ஜீவிக்கவேண்டும். அப்போஸ்தலர் பவுல் எந்த நிலமையிலிருந்தாலும் மன ரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டார். அவர் கற்றுக்கொண்ட பாடத்தை கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமெல்லோருமே கற்றுக்கொள்ள வேண்டும்.

நமக்குக் குறைவு உண்டாகும்போது கர்த்தரை சார்ந்திருப்பது நமக்கு எளிதான காரியம். ஆனால் நமக்கு வசதி வாய்ப்புக்கள் பெருகும்போது, கர்த்தரை நம்புவது கடினமான காரியம். கர்த்தரை நம்புவதற்குப் பதிலாக நம்முடைய பதவிகளை, பணத்தை, பலத்தை நம்புவதற்கு வாய்ப்புள்ளது. அப்போஸ்தலர் பவுலோ தனக்கு தாழ்ந்திருக்கவும் தெரியும், வாழ்ந்திருக்கவும் தெரியும் என்று சொல்லுகிறார்.

அப்போஸ்தலர் பவுல் எவ்விடத்திலும், எல்லாவற்றிலும், திருப்தியாயிருக்கவும், பட்டினியாயிருக் கவும், பரிபூரணமடையவும், குறைவுபடவும் போதிக்கப்பட்டிருக்கிறார் (பிலி 4:12). தன்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய தனக்கு பெலனுண்டு (பிலி 4:13) என்றும் பவுல் சாட்சியாய்ச் சொல்லுகிறார். எல்லா சூழ்நிலையிலும் மனரம்மியமாக இருப்பதற்கு நமக்கு பரிசுத்த ஆவியானவரின் பெலனும் உபதேசமும் தேவை. பவுல் இதைச் சொல்லும்போது அவர் தன்னை பெருமைப்படுத்துவதுபோலவும், தன்னுடைய சொந்த வல்லமையைப் பேசுவது போலவும் தெரிகிறது. தனக்கு எல்லாம் தெரியுமென்று அவர் தன்னைப்பற்றிப் புகழ்ச்சியாய்ப் பேசுவதுபோலவும் தெரிகிறது. ஆனால் பவுலோ எந்தச் சூழ்நிலையிலும் தன்னை உயர்த்துவதில்லை. துதி கன மகிமை எல்லாவற்றிலும் அவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கே செலுத்துகிறார்.

அவர் எந்த நிலமையிலிருந்தாலும் மனரம்மியமாகயிருக்க இயேசு கிறிஸ்துவிடமிருந்தே கற்றுக்கொண்டார். எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும், பட்டினியாயிருக் கவும், பரிபூரணமடையவும், குறைவுபடவும் பரிசுத்த ஆவியானவரே பவுலுக்குப் போதித்தார். கிறிஸ்துவானவரே தன்னைப் பெலப்படுத்துகிறார் என்று பவுல் சாட்சியாக அறிவிக்கிறார் (பிலி 4:13).

அப்போஸ்தலர் பவுல் பிலிப்பியரிடமிருந்து இப்போது உபகாரத்தை நாடவில்லை. அவர்களுடைய அன்பை நாடுகிறார். அவர்களுடைய கணக்குக்கு பலன் பெருகும்படியே நாடுகிறார். அப்போஸ்தலர் பவுலுக்கு எல்லாம் கிடைத்திருக்கிறது. பரிபூரணமும் உண்டாயிருக்கிறது. பிலிப்பியர்கள் பவுலுக்கு அனுப்பியதை எப்பாப்பிரோதீத்துவின் மூலமாய் பெற்றுக்கொண்டார். இதனால் பவுல் திருப்தியடைந்திருக்கிறார். தனக்கு அனுப்பப்பட்டவைகளை சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக பவுல் அவற்றை ஏற்றுக்கொண்டார்.

அப்போஸ்தலர் பவுல் இப்பிரபஞ்சத்தில் ஜீவித்தாலும் அவரிடத்தில் உலகப்பிரகாரமான பேராசையில்லை. ஒரு சிலர் தங்களுக்கு எல்லாம் இருந்தும் ஒன்றுமேயில்லை என்று சொல்லுவார்கள். பரிதாபமாகப் பேசுவார்கள். ஆனால் பவுலோ விசுவாசிகளிடத்தில் உபகாரத்தை நாடவில்லை. தனக்கு எல்லாம் கிடைத்தது என்றும், தனக்கு பரிபூரணமும் உண்டாயிருக்கிறது என்றும் சொல்லி பிலிப்பியரை உற்சாகப்படுத்துகிறார். பவுலிடத்தில் சிறிதளவே இருந்தாலும், தனக்கு பரிபூரணமுண்டாயிருப்பதாகச் சொல்லுகிறார்.

கர்த்தருடைய உண்மையுள்ள ஊழியக்காரர்கள் உலகப் பொருளுக்காக ஊழியம் செய்யமாட்டார்கள். தங்களுடைய வயிற்று பிழைப்புக்காக ஊழியம் செய்யமாட்டார்கள். கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டுமென்பதற்காகவும், ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவேண்டுமென்பதற்காகவும் உண்மையோடு ஊழியம் செய்வார்கள். தங்களிடத்தில் குறைச்சலிருந்தாலும், அதை எல்லோரிடமும் சொல்லி, பிறருடைய அனுதாபத்தை நாடமாட்டார்கள். உண்மையுள்ள ஊழியக்காரர்கள், பவுலைப்போல எந்த நிலமையிலிருந்தாலும் மனரம்மியமாக இருப்பார்கள்.

பிலிப்பியர் தனக்குச் செய்த உபகாரங்களை தேவன் அங்கீகரித்திருப்பதாக அவர்களுக்கு உறுதிசொல்லுகிறார். அவர்கள் செய்த உதவிக்கேற்ற பிரதிபலனை கர்த்தர் அவர்களுக்கு தருவாரென்று நிச்சயத்தோடு சொல்லுகிறார். பிலிப்பியர் பவுலுக்குக் கொடுத்த உபகாரம் சுகந்த வாசனையாக இருக்கிறது. அது தேவனுக்குப் பிரியமான உகந்த பலியாக இருக்கிறது. அவர்கள் கொடுத்த உபகாரத்தை கர்த்தர் அங்கீகரித்திருக்கிறார். அவர்களுடைய உதாரத்துவ குணத்தில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

நாம் ஊழியக்காரரின் குறைச்சலில் உதவிசெய்யவேண்டும். நாம் செய்கிற உதவிகளை கர்த்தர் அங்கீகரிக்கிறார். நாம் கர்த்தருடைய ஊழியத்திற்கும், ஊழியக்காரர்களும் கொடுக்கும்போது, நம்முடைய தேவன், தம்முடைய ஐசுவரியத்தின்படி, நம்முடைய குறைவையெல்லாம், கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் (பிலி 4:19). கர்த்தரே நமக்குப் பிரதிபலன் கொடுக்கிறவர். நம்முடைய தேவைக்குத் தகுந்ததாக கர்த்தர் கொடுப்பார். நம்முடைய குறைவையெல்லாம் நிறைவாக்குவார். கர்த்தர் கொடுக்கும்போது நம்முடைய குறைச்சலின்படி கொடுக்காமல், தம்முடைய ஐசுவரியத்தின்படி நமக்குக் கொடுக்கிறார்.

பிதாவாகிய தேவன்
பிலி 4 : 20-23

பிலி 4:20. நம்முடைய பிதாவாகிய தேவனானவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

பிலி 4:21. கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் யாவருக்கும் வாழ்த்துதல் சொல்லுங்கள். என்னோடிருக்கிற சகோதரர்கள் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.

பிலி 4:22. பரிசுத்தவான்கள் அனைவரும், விசேஷமாக இராயனுடைய அரமனையிலுள்ளவர்களும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.

பிலி 4:23. நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

தேவன் நம்முடைய பிதாவாகயிருக்கிறார். அவருடைய சமுகத்தில் வரும்போது அவரை நம்முடைய பிதாவாகவும், நம்மை அவருடைய பிள்ளைகளாகவும் பாவித்து, பயபக்தியோடு வரவேண்டும். நாம் பலவீனமுள்ளவர்கள். தேவனுடைய சமுகத்தில் நிற்பதற்கு நம்முடைய பரிசுத்தம் போதாது. நாம் பரிசுத்தத்தில் குறைவுள்ளவர்கள். பிதாவாகிய தேவனோ பரிசுத்தர். ஆனாலும் அவருடைய கிருபாசனத்திற்கு முன்பாக, நாம் தைரியமாக வருவதற்கு, நமக்கு கிருபை கிடைத்திருக்கிறது. அவரை "அப்பா பிதாவே" என்று கூப்பிடுகிற சிலாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கிறது. அவர் நமக்காக பரிதபிக்கிறவர். நமக்கு உதவிபுரிய விரும்புகிறவர்.

நமக்குக் கிடைத்திருக்கிற ஆசீர்வாதங்களெல்லாம் தேவனிடமிருந்தே நமக்கு வருகிறது. நம்முடைய ஆசீர்வாதங்களுக்காக நாம் அவருக்கு நன்றி சொல்லவேண்டும். எல்லாவற்றிற்காகவும் அவரைத் துதிக்கவேண்டும். நம்முடைய பிதாவாகிய தேவனானவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாகவேண்டும். நாம் தேவனை எப்போதும் துதிக்கவேண்டும். துதிப்பதை நிறுத்திவிடக்கூடாது. அவர் துதிகளின் மத்தியில் வாசம்பண்ணுகிறவர். அவருக்கே என்றென்றையும் மகிமை உண்டாவதாக.

பிலிப்பி பட்டணத்திலுள்ள விசுவாசிகளுக்கு பவுல் வாழ்த்துதல் சொல்லுகிறார். அவர்களை இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் என்று அழைக்கிறார். விசுவாசிகள்மீது பவுல் அன்புடனும் பாசத்துடனும் பழகுகிறார். ரோமாபுரியில் பவுலோடுகூட அநேக விசுவாசிகள் இருக்கிறார்கள். அந்த சகோதரர்களெல்லாரும் பவுலோடுகூட சேர்ந்து பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளை வாழ்த்துகிறார்கள்.

விசேஷமாக இராயனுடைய அரமனையிலுள்ளவர்களும் அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். இவர்கள் அரமனையில் பணிபுரிகிற விசுவாசிகள். ஒருவேளை இராயனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் சிலர் இயேசு கிறிஸ்துவுக்குள் பிசாசுகளாக இருக்கலாம். ஆதித்திருச்சபையில் இருந்த விசுவாசிகளில் சிலர் ஐசுவரியவான்களாகவும், பிரபுக்களாகவும் இருந்திருக் கிறார்கள். அரமனையிலுள்ளவர்களும் கிறிஸ்துவை விசுவாசித்திருக்கிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் இந்த நிருபத்தை நிறைவு செய்யும்போது, தன்னுடைய அப்போஸ்தல ஆசீர்வாதத்தை பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளுக்குச் சொல்லுகிறார். "நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களனைவரோடுங் கூடயிருப்பதாக, ஆமென்" என்று சொல்லி இந்த நிருபத்தை நிறைவு செய்கிறார்.